திருக்கோயில்

என் கடன்
பணிசெய்து கிடப்பதே

மலர் 14] விரோதிகிருது — பங்குனி, சித்திரை — ஏப்ரல், 1972 [மணி 7

திங்கள் வெளியீடு

தமிழ்நாடு அரசின்
அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

OFFICE OF THE STATE EDITOR

சிங்கம்புணரி சேவுகப்பெருமாள் அய்யனர் திருக்கோவில் திருமண மன்றத் திறப்பு விழாவில், சட்டம்-தொழில் அமைச்சர் மாண்புமிகு திரு, செ. மாதவன் அவர்களும். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல். (11—2—72)

பொருளடக்கம்

1. திருவள்ளுவர் மாட்சி
2. திருவருட்பிரகாச வள்ளலாரும் திருவருட்பாவும்
3. சன்மார்க்கம்
4. இராமலிங்கரின் இலட்சியம்
5. நெய் விளக்கு
6. நால்வர் தமிழ்
7. திருநாவுக்கரசர் தில்லைக் காட்சி
8. மதிப்புரை
9. திருமாலை
10. மதிப்புரை
11. இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்
12. அறநிலையத்துறைச் சுற்றறிக்கைகள்
13. சுற்றறிக்கை
14. நான்கில் ஒன்று
15. தொகையில் ஒரு தொகை
16. சிதம்பரம் சிவகாமியம்மை திருக்கோயில்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரூபா. பத்து மட்டும் தனிப்பிரதி விலை ரூ. ஒன்று மட்டும்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாகச் சேர்ந்துக்கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ்வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்வதற்கு மிகவும் இன்றியமையாதது. —ஆசிரியர்.

41)Gu/72 10 APR 1972 315



மாலை 14] விரோதிகிருது — பங்குனி. சித்திரை — ஏப்ரல், 1972 [மணி 7

திருவள்ளுவர் மாட்சி

[ந. ரா. முருகவேள், M. A., M. O. L.]

முன்னுரை :

திருவள்ளுவர் ஒரு சிறந்த பெருங் கவிஞர், ஒப்புயர்வற்ற நீதி நூல் ஆசிரியர்; மிகச் சிறந்த தத்துவஞானி; இணையற்ற இலக்கியப் பேராசிரியர்; அரும்பெரும் அரசியல் நுண்ணறிஞர்; பொருவிலாப் பொருளியல் மேதை; தன்னிகரற்ற பல்கலைக்குரிசில்; உலகம் முழுவதற்குமே ஒரு பெரும் வழிகாட்டி. காலமும் இடமும் கடந்து, சாலவும் நிலைபெற்று ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்த் தெய்விக அறநெறிப் பெரும் பனுவலை இயற்றி அளித்த, அரும்பெரும் வள்ளல் அவர்! பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும், அவர்தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து விளங்குகின்றன.

உலகப் பெரும் சமயத் தலைவர்களும், சான்றோர்களும் கூறியுள்ள கருத்துக்கள் எல்லாம், திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கின்றோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் ஒப்புக்கொள்ளத்தக்க வகையில், என்றும் மாறுத அடிப்படை வாழ்வியல் உண்மைகளை நடுவுநிலை பிறழாமல் நன்கினிது சுவைமிக விளக்கியருளுகின்றார். அவர்தம் நூல், நவில் தொறும் நயம் பயக்கின்றது, தொட்டனைத் தூறும் மணற்கேணிபோலக் கற்றனைத்தூறும் நற் கருத்துக்களை உடையதாக மிளிர்கின்றது. ஒருநாடு-ஒருகாலம்-ஒருமொழி-ஓர்இனம் என்பவற்றிற்கே உரியதாகிவிடாமல், எல்லாக்காலமும்-எல்லாநாடும்-மொழியும் - இனமுமாகியவற்றைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய, மாபெரும் பொதுமறை நூலாகத் திருக்குறள் திகழ்கின்றது.

வாழ்க்கையின் ஒவ்வொரு கூறுபற்றியே, நூல்களெல்லாம் பொதுவாக விளக்கும். ஆனல்

*சென்னைக் கோடம்பாக்கம் காஞ்சி மணிமொழியார் தமிழ்க் கல்லூரியின் சார்பில், தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் திரு. மு. கருணாநிதி, D.Litt., அவர்கள் தலைமையில், நிகழ்ந்த ''திருவள்ளுவர் திருநாள் விழா'' வில், ஆற்றிய சொற்பொழிவைத் தழுவியது. (28—1—72) —ஆசிரியர்.

Q2m211, N59TK

வாழ்க்கையின் பலதிறக் கூறுகளையும் முழுவதாக ஒருசேர, முன்னொடு பின் முரண்படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை என்று துணிந்து கூறலாம். இல்லறத்தான் துறவறத்தான், அரசன் அமைச்சன், நண்பன் பகைவன், பேர்வீரன், தூதுவன், கற்றான் கல்லான், கள்ளுண்பான், கவருடுவான், இரவலன் புரவலன், ஆண்கள் பெண்கள், முதலிய அனைவருக்குமே ஏற்றபெற்றி அறிவுரைகள் கூறும் அரும்பெரும் சமுதாயப் பெருநூலாகத் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தலைசிறந்து திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெருந் தலைப்பில்; எப்பெரும் பொருளையும் உள்ளடக்கிக் குறைவிலா நிறைவாய் விளக்கும் முறையில், தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு நிகராவார் பிறர் எவருமே இலர்.

148696

திருக்குறளும் சிவபிரானும்:

திருக்குறள், தமிழிலக்கியங்களுள் தலைசிறந்தது. அதன் சிறப்பு அளப்பரியது. திருக்குறளின் சிறப்பினைப் பற்பல புலவர்கள் பற்பல வகைகளிற் பெரிதும் புகழ்ந்துரைத்துள்ளனர். திருக்குறளுக்கும், சிவபிரானுக்கும் மிக நெருங்கிய இயைபு உண்டு. திருக்குறளை நினைத்தால் சிவபிரானையும், சிவபிரானை நினைத்தால் திருக்குறளையும் இயைத்தே நினைவு கூரும் வகையில், பற்பல சிறந்த ஒப்புமைப் பண்புகள் காணப்படுகின்றன.

(1) சிவபிரான் தனக்கு உவமையில்லாதவர்; திருக்குறளும் தனக்கு உவமையில்லாத தனிப்பெரும் சிறப்பு உடையது. (2) அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாயும், வேறுயும் விளங்குபவர் சிவபெருமான்; அவ்வாறே திருக்குறளும் அறுவகைச் சமயக் கொள்கைகளைக் கூறுவதாயும், அவற்றிற்கு அப்பாற்பட்டதாயும் விளங்குகின்றது. (3) சிவபெருமான் நூல்களின் எல்லையை எல்லாம் கடந்தவர். அவ்வாறே திருக்குறளும் எல்லா நூல்களிலும் மேம்பாடு மிக்கது (4) சிவபிரான் உயிர்களின் அறிவினில் அருளால் மன்னி நலம் செய்பவர்; திருக்குறளும் நம்மனோர் அறிவினில் அருளால் மன்னி நலம் செய்வது. (5) உயிர்களுக்கெல்லாம் அம்மையும் அப்பனுமாக விளங்கி அருள் புரிபவர் சிவபெருமான்; அங்ஙனமே திருக்குறளும் ஒருவகையில் நம்மனோர்க்கு அம்மையாயும் அப்பனாயும் திகழ்கின்றது. (6) எல்லாப் பொருள்களிலும் கலந்து செறிந்து நிற்பவன் சிவபெருமான்; அங்ஙனமே எல்லாப் பொருள்களும் நிறைந்து செறிந்து திகழ்கின்றது திருக்குறள்! (7) முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய்ச் சிவபெருமான் திகழ்தல்போலவே, திருக்குறளும் திகழ்கின்றது. (8) நவில்தொறும் நயம் பயக்கும் பண்பு, திருக்குறளுக்குப் போலவே சிவபெருமானுக்கும் உண்டு.

அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருளாய், வேறும்
குறியது உடைத்தாய், வேதா
கமங்களின் குறிஇறந்து, அங்கு
அறிவினில் அருளால் மன்னி,
அம்மையோடு அப்பன் ஆகிச்,
செறிவொழி யாது நின்ற
'திருக்குறள்' சென்னி சேர்ப்பாம்!

சிவப்பிரகாசர்:

திருவள்ளுவரையும் திருக்குறளையும் எத்தனையோ புலவர்கள், எத்தனையோ பல வகைகளில் புகழ்ந்து பாடியிருக்கின்றனர். ஆயினும், அவற்றுளெல்லாம், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் புகழ்ந்து பாடியிருக்கும் முறை, பெரிதும் வியந்து மகிழத்தக்கதாகத் திகழ்கின்றது

திருக்குறளின் சிறப்பை விளக்க, அவர் ஓர் உவமை கூற நினைக்கின்றார். திருக்குறளோ ஒப்புயர்வு இல்லாததாய்த் தனிப்பெரும் சிறப்புடையதாக விளங்குகின்றது. அதனால் திருக்குறளின் சிறப்பை விளக்க, ஓர் உவமையைக் கூட எடுத்துக்காட்ட அவரால் இயலவில்லை. அவர் நீள நினைந்து ஆராய்ந்து பார்க்கின்றார் தனக்கு உவமையில்லாத திருக்குறளுக்குத் 'தனக்குவமை இல்லாதான்' ஆகிய இறைவனையேதான் உவமை கூறிவிடலாமே என, அவர் நீள நினைந்த பின்னர் ஒருவகை முடிவுக்கு வருகின்றார்.

வீர சைவராகிய தாம், சிவபிரானை எத்தகைய நிலையில் மதித்து வணங்கிப் போற்றுவாரோ, அத்தகைய நிலையிலேயே வைத்துத் திருக்குறளையும் அவர் போற்றிப் புகழ முற்படுகின்றார். திருக்குறளைச் சிவம் எனவே சிந்தித்து வந்திக்கின்றார் அவர்! திருக்குறளின் இரண்டு அடிகளையும் சிவபிரானின் இரண்டு திருவடிகள் எனவே கருதி அவர் மகிழ்கின்றார்.

N72.14.7

திருக்குறளின் அடிகளுக்கும், சிவபிரானின் அடிகளுக்கும் இடையே உள்ள ஒப்புமைத் தன்மை, இரண்டு என்ற எண்ணிக்கையில் மட்டுமே அமைந்திருப்பதாக அவர் கருதிற் றிலர். மற்றும் ஓர் அழகிய பொருத்தமும்அமைந் திருப்பதாக அவருக்குப் புலப்படுகின்றது.

மாதியலும் பாதியர் :

திருக்குறளின் முதல் வரியானது நான்கு சீர்களால் இயன்று சிறிது நீண்டும், இரண்டாம் வரியானது மூன்று சீர்களால் அமைந்து சிறிது குறுகியும் இருத்தலை நாம் அறிவோம். இவ் வியல்பு சிவபிரானின் திருவடிகளிலும் இனிது பொருந்தியிருத்தலை, நம் சிவப்பிரகாசர் எண்ணி எண்ணி மகிழ்கின்ருர். சிவபெருமான் ஆணும் பெண்ணும் ஆக, அம்மையும் அப் பனுமாக அர்த்தநாரீசுவர மூர்த்தியுருவம் கொண்டு விளங்குபவன். மாணிக்கவாசகர் "தொன்மைக் கோலம்" என, அர்த்தநாரீசு வரர் (மாதியலும் பாதியர்) திருவுருவத்தைப் புகழ்ந்து போற்றுகின்ருர். அத்திருவுருவத்தில் ஆண்பாற் பகுதிக்குரிய வலக்கால் சிறிது நீண்டும், பெண்பாற் பகுதிக்குரிய இடக்கால் சிறிது குறுகியும் இருக்கும்.

சிவபெருமானின் இரு திருவடிகளுக்கும் உரிய இவ்வியல்பு, திருக்குறளின் இருவரி களுக்கும்கூட, இனிது பொருந்தி அமைந் திருப்பதனை நினைந்து நினைந்து சிவப்பிரகாசர் மகிழ்ந்து இன்புறுகின்ருர். இங்ஙனம் திருக் குறளின் பெருமையினைப் பொருத்தமுற உணர்ந்து வியக்கும் சிவப்பிரகாச சுவாமிகள், திருவள்ளுவரையே தம்முடைய குருவாகவும், தெய்வமாகவும் மதித்துத் தொழுகின்ருர்.

"என் அடிகள்
வெண்குறள் நேர்
அடியிரண்டும்
என் தலைமேல்
இருத்தும் இறை
வெங்கைநாட்டில்......"

எனவரும் திருவெங்கைக் கலம்பகச் செய்யுட் பகுதியில் திருவள்ளுவரை 'என் அடிகள்' (என் னுடைய தெய்வம், ஞானசிரியர்) என்றும்; அவர் இயற்றிய குறள் வெண்பாக்களால் அமைந்த நூலை 'வெண்குறள்' என்றும்; இறை வன் ஆகிய சிவபெருமானின் திருவடிகளை "வெண்குறள் நேர் (திருக்குறளின் இரண்டு வரிகளைப் போன்ற) அடிஇரண்டு" என்றும்; துறைமங்கலம் சிவப்பிரகாசர் சுருக்கமாகவும் நுணுக்கமாகவும் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறற்பாலது.

அறன் வலியுறுத்தல் :

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முற் பட்டும் இருந்த மக்களிற் பெரும்பாலோர், 'இன் பமே வாழ்க்கையின் முதன்மையான குறிக் கோள்; அதனை எம்முறையாலேனும் அடைய லாம்' என்னும் கொள்கையுடையவராக இருந் தனர் போலும்! பண்டைக்கால மக்களுள் ஒரு சாரார் அறத்தினும் இன்பமே பெரிதும் முதன்மையுடையதெனக் கருதியிருத்தல் கூடும் என்பது, "இன்பமும் பொருளும் அற னும் என்ருங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்" எனவரும் தொல்காப்பிய நூற்பா வானும் புலனுகின்றது. அதனை உடன்படாமல், அந்நிலையை மாற்றி அறமே இன்பத்தினும் முதன்மையுடையது என்றும், 'அறத்தான் வரு வதே இன்பம்' என்றும், வலியுறுத்திய பெருமை திருவள்ளுவர்க்கே உரியது. தனி மனித வாழ்வின் நலத்திற்கு இன்பம் முதன்மை; சமுதாய வாழ்வின் நலத்திற்கு அறம் முதன்மை என்று கண்டு, அறத்திற்கு முதலிடம் அளித்த வர் திருவள்ளுவரேயாவர். "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம்போல" எனப் புறநானூறு பாடியது, திருவள்ளுவர் நிகழ்த்திய புரட்சியின் விளைவே யாகும். "வடுவிலா வையத்து மன்னிய மூன் றில் நடுவணது எய்த இருதலையும் எய்தும்" எனப் பொருளுக்குப் பிறர் அளித்த சிறப்பை உடன்படாமல், "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்" எனப் பணித்தருளியவர் திருவள்ளுவரேயாம்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள ?

பண்டைக்கால மக்களிடையே பெண் களைப் பற்றிப் பலவகைப் பொருந்தாக் கருத்துக் கள் நிலவி வந்தன. அவற்றுள், 'பெண்கள் பாவப் பிறவிகள்; ஆண்களைவிடத் தாழ்ந்தவர் கள்; அவர்களுக்கு வீடுபேறு இல்லை' என்பன போல்வனவும் சில. சமணரும் பௌத்தரும் பெண்களை இழிவாகவே கருதி நடத்தி வந்ததா கத் தெரிகின்றது. புத்தர்பிரான் பௌத்த மடங்களிற் பெண்களைச் சேர்த்துக்கொள்ள எளிதில் இசைவு அளித்திலர். இசைந்த பின்

னரும் பிட்சுணிகளுக்குப் பலப்பல கட்டுப்பாடு கள் விதிக்கப்பெற்றன. துறவுநெறியையே மிக வும் வற்புறுத்தும் பௌத்த, சமண நூல் களில் பெண்களைக் கடிந்துரைக்கும் பகுதிகள் நிரம்பக் காணப்படும். பெண்களைப் பல்லாற்று லும் இழித்துப் பழித்து இகழ்வாக நடத்துவது, அக்காலத்துச் சமுதாய நிலையாக இருந்து வந்தது. திருவள்ளுவர்க்கு இன்னோரன்னயவை உடன்பாடல்ல. ''பெண்ணிற் பெருந்தக்க யாவுள ?'' (54) என அறைகூவி வினவி, அதற் குப் 'பெண்ணிற் பெருந்தக்கது இல்' (1137) எனத் தாமே விடையும்கூறிப் பெண்ணின் பெரு மையினை உலகறிய நிலை நிறுவியவர் திரு வள்ளுவர் பெருந்தகையே எனலாம்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் :

திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முன் னரும், பிறப்பில் உயர்வு தாழ்வு கருதும் சாதி வேறுபாடுகள் முதலியன, பெரிதும் நிலவி வந் தன. இன்றளவும் அவை இருந்தே வருகின் றன. சமண சமயம் அவற்றை ஒழிக்க முதலில் ஓரளவு முயன்றது. எனினும் பிற்காலத்தில் அவற்றை ஏற்றுக்கொண்டுவிட்டது. மனுமிருதி போன்ற வைதிக மத நூல்கள் சாதி வேற்றுமை களைப் பாராட்டி, அவைகள் வளர்வதற்குரிய வழிகளும் வகுத்தன. திருவள்ளுவர்க்கு இவை உடன்பாடு அல்ல. ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்று புரட்சிப் பெருமுழக்கம் செய்து, ''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும் கீழல்லார் கீழல்லவர்'' எனச் சிறந்த தீர்ப்பும் அளித்தவர் திருவள்ளுவர் பெருமான் !

கௌடில்யர் :

திருவள்ளுவரின் மாட்சி, அவரை வேறு பிற ஆசிரியர்களோடு ஒப்பிட்டுக் காண்பதனுலும். மிகவும் நன்கினிது நமக்குப் புலப்படும். திருக் குறளின் பொருட்பாலைக் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்திற்கும், காமத்துப்பாலை வாத்ச்யாய னரின் காமசூத்திரத்திற்கும் சிலர் ஒப்பிடுவ துண்டு. அஃது ஒருபுடை ஒப்புமையாகுமே யன்றி, முழுவதும் ஏற்புடைத்தாகாது. கௌடில்யரின் அர்த்தசாத்திரத்தில் உழவுக் கும் உழவருக்கும் ஒரு சிறிதும் முதன்மையளிக் கப்படவில்லை. அரசன் குடிமக்களை அச்சுறுத் தியும் வற்புறுத்தியும் தனது வருவாயைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கூறி, நீண்ட தொரு வரிப்பட்டியலையும் அர்த்தசாத்திரம் வகுத் துத் தந்துள்ளது. வருணாச்சிரம சாதிப்பாகு பாடுகளை அடிப்படையாகக் கொண்டே அர்த்தசாத்திரம் அமைந்துள்ளது. 'நீதிநெறி பிறழாமல்தான் ஒருவன் பொருளீட்டுதல்வேண் டும்' என்று கூறும் குறள் நெறிக்கும், பொரு ளீட்டுதலில் நீதிபற்றி ஏதும் நினைக்க வேண்டு வதில்லை எனப் போதிக்கும் இயல்பிற் செல்லும் அர்த்தசாத்திரத்திற்கும்; உள்ள இடையீடு மிகப் பெரியது.

குடிமக்களின் கரவின்மை அறியாமை மூட நம்பிக்கை சமயவுணர்வு ஆகியவற்றைப் பயன் படுத்திக்கொண்டு, ஓர் அரசன் தன் பணப் பெட்டியை நிரப்பிக்கொள்ளலாம் எனக் குறிப் பிற் புலப்படுத்தி, அதற்குரிய வழிவகைகளை யும் கௌடில்யர் தமது நூலில் வகுத் துரைக்கின்றார். மேலும் கட்குடி இணைவிழைச்சு என்பன போன்ற இழிசெயல்களுக்கும் ஊக்கம் அளித்து, அவ்வாற்றாலும் அரசன் தன் வருவா யைப் பெருக்கிக்கொள்ளலாம் என்பது அதன் கொள்கை. இவையெல்லாம் திருவள்ளுவர்க் குச் சிறிதும் உடன்பாடு அல்ல. இங்ஙனமே, அறநெறியைப் பொருட்படுத்தாமல் புறக்கணித் துத் தீயசூழ்ச்சித் திறங்கள் பலவற்றைக் கூறும் மாக்கியவெல்லி (Machiavelli) யின் கொள்கை கள் பலவும், திருவள்ளுவர்க்கு உடன்பாடு உடையன அல்ல. ஓர் அரசன் நரியைப் போன்ற சூழ்ச்சித் திறம்மிக்கவனாதல் வேண் டும் என்பது மாக்கியவெல்லியின் கொள்கை. அரசன் அரிமான் போன்ற பெருமித இயல் புடையவனாகப் பிறங்குதல் வேண்டும் என்பது, திருவள்ளுவரின் கொள்கை. இதுவே இவ்விரு வருக்கும் உள்ள இடையீட்டின் அளவை, நம்ம னோர்க்குப் புலப்படுத்தப் போதியதாகும்.

வாத்ச்யாயனர் :

இவ்வாறே திருவள்ளுவரும் வாத்ச்யாயன ரும் ஒருவரோடொருவர் நெடுந்தொலைவினர். திருவள்ளுவர் தூய தெய்விகக் காதலை விளக் கினர், வாத்ச்யாயனர் தீய இழிந்த காமத்திறன் பற்றி விரித்துரைத்தனர். பாலுணர்ச்சியைத் தூண்டிவிடுவது, வளரச்செய்வது, நீடுநிலை பெறுத்துவது பற்றியெல்லாம் வாத்ச்யாயனரின் காமசூத்திரம் விவரிக்கின்றது. ஆண் பெண் சேர்க்கையில் நிகழும் பலதிறச் செயல்கள், நிலைகள் பற்றியெல்லாம் வாத்ச்யாயனர் வரு ணிப்பர். பிறன் மனைவியை மயக்கிக் கெடுப் பதற்குரிய வழிவகைகளையும்கூடக் காமசூத் திரம் கட்டுரைக்கும். பரத்தைமைப் பண்பும் செயல்களும் பற்றிக்கூட, அது பாரித்துரைக்க

காணலாம். இன்னோரனைய இழிதகவுகள் எதுவும் திருக்குறளிற் காணப்படமாட்டா.

பிளேட்டோ :

திருவள்ளுவர்க்கு மேலைநாட்டுப் பேரறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களும், சிறிதும் ஈடாகமாட்டார்கள். பிளேட்டோ கண்ட குடியரசு அளவாற் சிறியது; நகர-அரசு (City-State) எனத்தக்கது. குடிமக்களின் தொகையிலும் செல்வநிலையிலும் வளர்ச்சியற்ற தேக்கமுடையது. பேச்சுரிமைக் குறைப்பு முதலிய பலவகைக் கட்டுப்பாடுகள் அங்கு உண்டு. தனிநிலையிற் குடும்ப வாழ்வின் இன்பமும், குழந்தை வளர்ப்புரிமையும் அங்கே அநுமதிக்கப்பெறமாட்டா. கவிஞர்கள் அங்கே மதிக்கப்பெறுர். மெலிந்தோர் நலிந்தோர் புறக்கணிக்கப்படுவர். மனைவியரும் குழந்தைகளும் அங்கே பொதுவாக்கப்படுவர். திருவள்ளுவர் கூறும் கற்பு முதலிய பண்புகளுக்கு அங்கே இடமில்லை.

அரிஸ்டாட்டில் :

அரிஸ்டாட்டிலின் கருத்தின்படி, அடிமைமுறை இன்றியமையாதது; உயர்வு தாழ்வுகள் இயல்பானவை; இழிநிலை பிறவியிலேயே அமைந்தது; குடியாட்சி என்பது கிரேக்கர்களுக்கு மட்டுமே யுரியது. ஏனையரெல்லோரும் நாகரிகமற்ற இழிசினரே (Barbarians) ஆவர். செல்வம் தேடுதற்கும், நீதிநெறி முறைகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இத்தகைய கருத்துக்களெல்லாம் திருவள்ளுவர் உடன்படாதவை. இவைகளெல்லாம் திருக்குறளில் ஒருசிறிதும் காணப்படமாட்டா.

உலகப் பேரறிஞர்கள் பலர், மிகப் பழங்காலத்தில் எழுதிய எத்துணையோ கருத்துக்கள், இன்றைய உலகின் நடைமுறைக்கு ஒவ்வாமலும், அறிவுக்குப் பொருந்தாமலும், எள்ளி நகையாடும் வகையிலும், மாறிப் போதலை நாம் கண்டு வருகின்றோம். அரிஸ்டாட்டில் போன்ற பேரறிஞர்கள் பலர் எழுதியுள்ள கருத்துக்கள் பலவற்றைப் பிழையுடையனவாக மறுத்து, 'அறிவுத்துறைக் குப்பைகள்' (Intellectual rubbish) என இகழ்ந்து ஒதுக்கிப் பேரறிஞர் திரு பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் எள்ளி நகையாடுகின்றார்.*

அங்ஙனமெல்லாம் இன்றி, நூற்றுக்கு நூறு விழுமிய கருத்துக்களே பொருந்தி, ஒதுக்கித் தள்ளத்தக்கது எதுவும் இன்றி, "காழில் கனி" எனக் கட்டுரைக்கலாம்படி கவின்மிகச் சிறந்து, காலம் இடம் இனம் நாடு மொழி முதலிய எல்லைகளையெல்லாம் கடந்து, அறிவுக்கும் இயற்கைக்கும் நடைமுறைக்கும் உண்மைக்கும் அணுத்துணையும் பிறழாமலும், தன்னிலையிற் றுழாமலும் நிலைபேறுற்று நிகரின்றித் திகழ்கின்றது நம் திருக்குறள்! இஃது எண்ணுதொறும் நமக்கு மிகவும் இறும்பூது பயப்பதன்றோ ?

முடியாட்சியும் குடியாட்சியும்:

திருவள்ளுவரின் காலத்தில் 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்னும் கொள்கை நிலவி வந்தது. அந்நாளில் முடியுடை மன்னர்களே நாடாளுவது இயல்பாகவும் மரபாகவும் இருந்து வந்தது. ஆயினும் திருவள்ளுவர் தமது திருக்குறளில் முடியாட்சியை மட்டுமன்றி, இந்நாளைய குடியாட்சி முறைக் கருத்துக்களையும் ஏற்றபெற்றி விளக்கியிருக்கின்றார். "இறைமாட்சி" என்னும் அதிகாரத்தில் வரும் பத்துக் குறள்களில், நான்கு குறள்களில், அரசருள் ஏறு, வேந்தன், பண்புடை வேந்தன், முறை செய்து காப்பாற்றும் மன்னன் என்னும் சொற்றொடர்களால், முடியுடை மன்னர்களைக் குறிப்பிடுகின்றார். நான்கு குறள்களில் முடிமன்னரா குடியாட்சித் தலைவரா என்று பிரித்தறிய முடியாதபடி இருக்கும் பொதுவான சொற்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லன், இன்சொலால் ஈத்தளிக்க வல்லான், கொடைஅளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும் உடையான், நிலனாள்பவன் என்னும் சொற்றொடர்கள், முடிமன்னர் குடியாட்சித் தலைவர் ஆகிய இருவருக்குமே உரிய பொதுமைநிலையில் விளங்குதல் காணலாம். இரண்டு குறள்களில் (384, 385).

---

*" Aristotle, in spite of his reputation, is full of absurdities. He says that children should be conceived in the winter when the wind is in the North, and that if people marry too young the children will be female.

He tells us that the blood of females is blacker than that of males; that the pig is the only animal liable to measles; that an elephant, suffering from insomnia should have its shoulders rubbed with salt, olive oil, and warm-water, that women have fewer teeth than men, and so on..."—*Dr. Bertrand Russel.*

'அரசு' என்னும் பொதுச் சொல்லே கையாளப் பட்டுள்ளது.

திருவள்ளுவரின் அரசியலில் குடிமக்கள் வறிதே ஆளப்படுபவர் அல்லர். ஆட்சியிற் பங்கு கொள்பவராகவும் விளங்குகின்றனர். 13 அதிகாரங்கள் கொண்ட குடியியலில், ஒருமுறை யேனும் அரசன் அல்லது மன்னன் என்னும் சொல் வந்திலாமை, இவ்வுண்மையின வலி யுறுத்தும். 'குடிதழீஇக் கோல் ஓச்சும் மன்னன' என்ற தொடர், திருக்குறள் இந்நாளைய பாராளு மன்றக் குடியாட்சி முறையினையே (Parliamentary Democracy) சிறந்ததாகக் கூறுகின்றது என்பதனை யுணர்த்தும்.

ஒப்புரவு :

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட மிகப் பழைய நூலேயாயினும், இந் நாளைய புதுமைக் கருத்துக்களையும்கூட இனிது ஏற்றபெற்றி விளக்குந் தகையதாகத் திகழ் கின்றது. இந்நாளில் உலகமெங்கணும் பரவிப் பெருகிவரும் பொதுவுடைமைக் கொள்கை (Communism), சமவாய்ப்பியற் கொள்கை (Socialism) போல்வனவற்றையும்கூட, ஒரு வகையில் திருக்குறள் உணர்த்துகின்றது என லாம். திருக்குறளில் வரும் 'ஒப்புரவு அறிதல்' என்னும் அதிகாரம், ஒருவகையில் இன்னோ ரனைய புதுக் கருத்துக்களையும், இனிது ஏற் றுத் தழுவிக்கொண்டு விளக்குகின்றது எனல் கூடும். சோஷியலிசம் அல்லது சமதர்மம் எனப் படும் சொற்களால் குறிக்கப்பெறும் கருத் தினையே 'ஒப்புரவு' என்னும் சொல் குறிக்கின் றது எனக் கொள்ள இடனுளது.

(1) "ஊருணி நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு". (2) "பயன்மரம் உள் ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயனுடையான் கட்படின்" (3) "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகையான்கட் படின்" என்னும் குறள்கள், இவ்விருவகைப் புதிய கொள்கை களுக்கும் செவ்விய நல்ல முன்னோடி எனலாம்.

சீர்திருத்தச் செந்நெறி :

திருவள்ளுவர், ஒரு சிறந்த சீர்திருத்தக்கார ரும் புரட்சியாளருமாவர். மக்கட் சமுதாயத் தைச் சீர்திருத்தி, அவர்களை வையத்து வாழ் வாங்கு வாழ்விக்கவந்த மாட்சிமை யுடையவ ராதலின், திருவள்ளுவர் அக்காலத்துச் சமு தாய வாழ்வில் நிலவியிருந்த பலவகைக் குற்றங் குறைகளைக் கடிந்து கூறித் திருத்துவதற்குச் சிறிதும் தயங்கிற்றிலர். அக்காலத்தில் பெருக நிகழ்ந்து வந்தனவாகத் தெரிகின்ற கொலை வேள்விகளைத் திருவள்ளுவர் பெரிதும் வெறுத்து மறுத்துள்ளார். "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண் ணாமை நன்று" எனவும் "நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை" எனவும், திருவள்ளுவர் கொலை வேள்விகளைக்கடிந்துரைத்திருத்தல்காணலாம்.

கொல்லாமையை ஒருபெரும் கொள்கை யாகக் கூறிக்கொண்டு, தாம் உயிர்களை நேரே கொல்லாமல், பிறர் கொன்றுகொண்டு வந்து தந்த புலாலைப் பலர் அக்காலத்தில் உண்டு வந்த னர். புலால் உண்ணுதலை ஒரு குற்றமாக அவர் கள் கருதிற்றிலர். அவர்களை மறுத்து, "தினற் பொருட்டாற் கொல்லாது உலகெனின் யாரும் விலைப்பொருட்டால் ஊன்தருவாரில்" எனவும், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" எனவும், திருவள்ளு வர் அருளிச்செய்தனர். திருவள்ளுவர்,

> "சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருள்இது என்றவர்"

ஆதலின், பண்டைக் காலத்துச் சமயவாதி களில், பலர், தலைமுடியை மழித்தல்-நீட்டல்- பறித்தல் (கேசலோசனம்) முதலிய போலி வேடங்களைப் பூண்டு, புரிந்துவந்த கூடா வொழுக்கச் செயல்களைப் பெரிதும் கடிந்துரைத் தார். "வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று" "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்" என்பன போன்ற திருக்குறள்கள், திருவள்ளுவரின் சீர்திருத்தச் செந்நெறியினைத் தெற்றென உணர்த்தும்.

காமஞ்சான்ற ஞானப் பனுவல்:

திருவள்ளுவரின் மாட்சிமை, அறத்துப்பாலி லும் பொருட்பாலிலும் மட்டுமேயன்றி, காமத்துப் பாலிலும் கவின்மிக்குச் சுடர்விட்டு ஒளிர் கின்றது. காமம் என்னும் சொற்கேட்ட துணை யானே, அதனை மிக இழிந்ததாகக் கருதி வெறுத்து ஒதுக்கி விடுபவர் பலருண்டு. அத்த கைய இழிந்த காமத்தினையும்கூட, நம் திரு வள்ளுவர் மிக உயர்ந்த சிறந்த புனிதப் பொரு ளாக மாற்றிப் போற்றியுள்ளார். அகப்பொருள் நூல்களில் பொதுவாகவும் இயல்பாகவும் "குல் தொடர்அல்" போன்ற சில சொற்கள் அடிக்கடி

போதருவதுண்டு. அணைய சொற்கள் எதுவும் ஒரு சிறிதும் விரவாமல், மிகவும் அரிய இனிய அழகிய முறையில், காமத்துப் பாலைத் திருவள்ளுவர் இயற்றி யருளியுள்ள திறன், மிகப் பெரிதும் வியக்கற்பாலது. மாணிக்கவாசகரின் திருச்சிற்றம்பலக் கோவையாரும், நம்மாழ்வாரின் திருவிருத்தமும் போன்ற "காமம் சான்ற ஞானப் பனுவல்கள்" தோன்றுவதற்கு வழி வகுத்தருளிய பெருமை, திருவள்ளுவரையே சாரும் எனக் கூறுதல் பொருந்தும்.*

முடிவுரை :

இங்ஙனமெல்லாம் மிகச் சிறந்த முறையில், தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானல், இயற்றப்பெற்றமை பற்றியே, ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்ற அருட்பெரும் சான்ரோர்களும், அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிப் போந்த அரும்பெரும் கவிஞர்களும் பிறருமெல்லாம், திருக்குறளின் கருத்துச் சொற் பொருட் சுவை நலங்களைப் பெரிதும் போற்றித் தத்தம் பாடல்களில் அமைத்து மகிழ்வாராயினர். ஆழ்வார்களும் நாயன்மார்களுமே திருக்குறளை வியந்து போற்றியுள்ளனர் எனின், திருக்குறளின் பெருமையினையும், அதனை இயற்றியருளிய திருவள்ளுவரின் மாட்சியினையும், நாம் அளவிட்டுரைத்தல் ஒல்லுமோ! திருவள்ளுவரின் மாட்சிமை உணர்ந்து, திருக்குறளைக்கற்று, அதன்வழி நின்று, நாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும் பேறுகளையும் எய்தும் வகையில், வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலமுற முயலுவோமாக!

(வெண்பா)

காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தாற் குன்ருச் சுவைதிகழும்;-ஏலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்; ஓங்குதிருவள்ளுவர்நூல்
மாட்சிக் கிணையுண்டோ? மற்று

—ஆசிரியர்

*"The spousal love spoken of in Saiva-Vaishnava literatures is entirely a-sexual and corresponds to the Greek 'agape' and differs from worldly love signified by the word 'eros' or 'erotos'". —*Das Gupta*.

*"Age Cannot wither her; nor custom stale Her infinite variety; other women cloy The appetite they feed; but she makes hungry Where most she satisfies".

—*William Shakespeare*,
Antony & Cleopatra.



திருவண்ணமலைக் கோயிலுக்கு மைசூர் மாநில ஆளுநர் மேதகு மோகன்லால் சுகாதியா அவர்கள் வருகை தந்து, வழிபட்டார்கள்.

திருவருட்பிரகாச வள்ளலாரும், திருவருட்பாவும்

திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.B.L., I.A.S.,

ஆணையர்,

அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

உலகில் தீமை பெருகி, நன்மை நலியும் போதெல்லாம், இறைவன் திருஅவதாரம் செய்கின்றான்; அல்லது தனது அருள்பெற்ற அடியவர்களை அனுப்பி வைக்கின்றான் எனப் பெரியோர்கள் கூறுவர். அம்முறையில் அவ் வப்போது நம் தமிழகத்தில் அருட் சான்றோர் கள் பலர் தோன்றி வந்திருக்கின்றனர். அவர் களுள் ஒருவராக அண்மைக் காலத்தில் தோன்றியருளியவர், திருவருட்பிரகாச வள்ள லார் என்னும் நமது இராமலிங்க அடிகளாவார்.

இராமலிங்க அடிகள், "வாழையடி வாழை யென வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒரு வன்" என்று தம்மைக் குறிப்பிட்டுக்கொண்டு இருத்தல் காணலாம். உலகத்தைத் திருத்தி உய்விப்பதற்காக, அந்தந்த யுகம் அல்லது காலத்தில் இறைவன் தன் அருளுலகினின்று அனுப்பிவைக்கும் சான்றோர்களை "யுக புருஷர்" என்பர். அம்முறையில் ஆராய்ந் தால், இந்த யுகம் அல்லது காலச் சூழ்நிலைக்கு ஏற்ப, உலகத்தைத் திருத்தி உய்யும் நெறி காட்டியருள்வதற்காக. இறைவனால் அனுப்பப் பெற்ற அருட்பெருஞ்சான்றோர் இராமலிங்க அடிகளே யாவர் என நாம் துணிந்து கூறலாம்' இவ்வுண்மையினை இராமலிங்க அடிகளாரே, தமது திருவருட்பாப் பாடல் ஒன்றில் இனிது எடுத்து மொழிந்திருத்தல் காணலாம்.

"அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த வுலக ரனைவரையும்,
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திட,வரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுதற்கென்றே, எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
வுற்றேன் அருளைப் பெற்றேனே"

எனவரும் திருவருட்பாப்பாடலில், இக்கருத்தை இராமலிங்க அடிகளார் மிகவும் தெளிவுற எடுத் துக் கூறியிருக்கக் காண்கின்றோம். "உலகர் அனைவரையும் சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத்து அடைவித்திட, எனை இந்த யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன்" என்று மிகத் தெளிவாக அடிகளார் அறிவுறுத்தியிருத்தல், நாம் பொன்னினும் மணியினும் போற்றத் தக்க தாகும்.

இராமலிங்க அடிகளார் தோன்றிய காலத் தில், சாதி, மதம், சமயம், சாத்திரம், கோத் திரம் முதலிய பல முறைகளில், மக்களிடையே போரும் பூசலும் பிணக்கமும் மிகுந்திருந்தன. அன்பினால் ஒன்றுபட்டு இன்புற்று நலனடை வதற்கு உரிய மக்கள், இங்ஙனம் தம்முள் இகலிப் பகைத்துக் கலாய்த்து இடர்ப்படுதல் கண்டு, இராமலிங்க வள்ளலார் அளவிலாத் துய ரம் கொண்டார். மக்களையெல்லாம் எவ்வகை யாலேனும் ஒற்றுமைப்படுத்தி உய்விக்கத் திரு வுளம் பற்றினார். தவறான தீய துன்மார்க்க நெறிகளில் சென்று கெடுபவர்களைத், தூய நல்ல சன்மார்க்கச் செந்நெறியில் செலுத்தித் திருத்தி, இறையருளைப் பெறுவிக்கப் பெரிதும் முயன்றார்.

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச்
சண்டையிலே
ஆதியிலே யபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே,
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நித்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தரவர்
தாமே
வீதியிலே யருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணமிது கூவுகின்றேன்
உமையே"

என்னும் திருவருட்பாப் பாடல், அடிகளாரின் உணர்ச்சிகளை எவ்வளவு தெளிவாகவும் ஆற்றலோடும் வெளியிட்டிருக்கின்றது!

உலகத்தில் தீய துன்மார்க்கங்கள் கெட்டு, தூய சன்மார்க்க ஒழுக்கம் ஓங்கி வளர்தல் வேண்டும் என்று. வள்ளலார் பெரிதும் பாடுபட்டருளினர். மக்களின் மனத்தே நன்கு இனிது பதியும் வண்ணம் பற்பல அருளுரைகளையும் அறிவுரைகளையும் வழங்கினர். அவர்தம் பாடல்கள் ஒவ்வொன்றும், மக்களின் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டி, அவர்களைப் புன்நெறிகளில் போகவொட்டாமல் தடுத்து, நன்நெறிக்கே உய்க்கும் நலம் நிரம்பித் திகழ்கின்றது.

மக்களிடையில் எத்தகைய பேதமும் இருத்தல் கூடாது; அவர்கள் அனைவரும் பேதமின்றி அன்பினால் ஒன்றுபட்டு இன்புறுதல் வேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு நேர்தல் கூடாது. எல்லா உயிர்களும் துன்பமின்றி இன்பமுற்று வாழ்தல் வேண்டும். எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணி, மக்கள் சீவகாருண்யம் என்னும் செந்தண்மை நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதல் வேண்டும். கொலையும் புலையுமாகிய குற்றங்களைச் செய்யாமல், மக்கள் அனைவரும்ஆன்மநேயஒருமைப்பாட்டு உரிமை உணர்வு உடையவர்களாய், சீவகாருண்யம் என்னும் உயிர் இரக்கம் மேலோங்க நல்வாழ்வு நடத்துதல் வேண்டும். உலகியற் களியாட்டங்களில் மயங்கி மாய்ந்து போகாமல், இறையருள் உணர்வோடு மக்களெல்லோரும் ஒத்த உரிமையுடையவர்களாய் உவந்து வாழ்தல் வேண்டும் என்று, இராமலிங்க வள்ளலார், தமது பாடல்களிலெல்லாம் இடைவிடாது அறிவுறுத்தியுள்ளார். இதன்பொருட்டே அவர், சமரச சன்மார்க்கம் என்னும் சான்றாண்மை நன்நெறி இயக்கத்தைத் தகவுறத் தோற்றுவித்தருளினர்.

எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி, உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கின்றார்
யாவர்; அவர்உளம் தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமென நான் தேர்ந்தேன்; அந்த
வித்தகர்தம் அடிக்கு ஏவல் புரிந்திட என்
சிந்தைமிக விழைந்த தாலோ.

தங்கமே யணையார்கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும், சங்கம்
சார்திருக்கோயில் கண்டிடவும்,
துங்கமே பெறும் சற்சங்கம் நீடூழி
துலங்கவும், சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்ற ளைப்பாடி
ஆடவும், இச்சைகா ணைந்தாய்!

இராமலிங்க வள்ளலார், நம் தமிழகத்தில் தோன்றியருளிய ஓர் இணையற்ற பெரும் சான்றோராவர். தமிழ் மொழிக்கே உரிய இனிமை, எளிமை, உருக்கம், தெளிவு, தெய்விகம் என்னும் சிறப்பியல்புகள், அவர் அருளிய திருவருட்பா என்னும் செந்தமிழ்க் கலைப்பெரும் கருவூலத்தில் ஒருங்கு கலந்து நிரம்பித் திகழ்கின்றன. இறையருட் புகழ்த் துதிநூல்களில், உலக இலக்கியங்களில் தலைசிறந்த ஒன்றாகத் திருவருட்பா திகழ்கின்றது என நாம் துணிந்து கூறலாம். இஃது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. ஆதலின், திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் வடலூர் இராமலிங்க அடிகளாரையும், அவர் அருளிச் செய்துள்ள திருவருட்பா என்னும் செந்தமிழ்த் தெய்விகப் பாடல்களையும், நாம் நயந்தினிது போற்றி உய்ய முயலுவோமாக!

சன்மார்க்கம்

திரு. நா. மகாலிங்கம், B.Sc., M.I.E.,

(தலைவர். சத்தியஞானசபைத் திருப்பணிக் குழு)

சரியை கிரியை யோகம் ஞானம் போன்ற ஆன்மாவின் விடுதலைக்கு உள்ள நான்கு வழிகளைத், தாசமார்க்கம் சற்புத்திரமார்க்கம் சக மார்க்கம் சன்மார்க்கம் என்று சைவசித்தாந்த மரபில் குறிப்பார்கள். சைவ சமயத்தைச் சிறப்பாக விளக்கிக் காட்டிய பெருமக்களாகிய நால்வர் ஒவ்வொரு துறையின் வழியாக இறைவனை அடைந்தார்கள் என்று கருதப்படுகின்றது. அவற்றில் மாணிக்கவாசகப் பெருந்தகையார் சன்மார்க்கம் என்ற துறையின் மூலம் நற்கதியடைந்தது மட்டுமின்றி, தாம் அடைந்த அனுபவங்களையும்; பின்பற்றிய முறைகளையும் ''திருவாசகம்'' என்ற தேனினுமினிய நூலில் பிற்கால மக்கள் அனுபவித்து உயர்ந்து வளரத் தக்க வகையில் உருகிப் பாடியுள்ளார்.

ஆயின் மாணிக்கவாசகப் பெருந்தகை காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று தமிழகமெங்கும் பொதுவாகச்சன்மார்க்கமென்று கூறும்போது வடலூர்ப் பெருவெளியில், சென்ற நூற்றாண்டில் 1823-ல் மருதூரில் அவதரித்து,சென்னையில் தன் சிந்தையை வளர்த்து வடலூரில் ஞானநிலை அனுபவங்களைப் பெற்று, அவற்றைப் பல ஆயிரம் பாடல்களாகப் பாடி 1874-ல் மேட்டுக் குப்பத்தில் பரம்பொருளோடு ஒன்றிய வள்ளல் பெருமானுர்தான் எல்லோர் நினைவிலும் வருகிருர்.

இன்றைய நிலையில் சன்மார்க்கம் என்று கூறும்போது வள்ளல் பெருமான் கூறிய சுத்த சத்திய சன்மார்க்கம் என்ற அடைமொழி உலக மக்களின் ஒற்றுமைப் பட்ட முன்னேற்றத்திற்காக வெளியிட்ட சிந்தனையாகும். தமிழனுடைய நீண்டகால ஆன்மீக அனுபவங்களை அறிந்து உணர்ந்ததாலும், அறிவு நூலாகவும், வாழ்க்கை நூலாகவும் தோன்றிய தமிழ் மறையின் கொள்கைகளே, ஆயிரம் ஆண்டுகளில், மக்கள் கண்ட ஆன்மீக உணர்வின் பயனாகத் திருவருட்பாவாக உருவாகியது என்று கருதலாம்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் ஜி. யூ. போப் அவர்கள் ''உலக சமய இலக்கியங்களில் இறைவனை அடைய முயன்று அந்த ஆன்மீக அனுபவங்களை எழுதி வைத்துள்ள பல பெருமக்களின் எந்த நூலுக்கும் திருவாசகம் குறைந்ததல்ல'' என்று கூறினுர்கள். திருவாசகம் தோன்றிய காலத்தில் மக்கள் மத்தியில் சமயம் என்ற பெயரால் நாகரிகத்திற்குப் புறம்பாகப் பல செயல்கள் நடந்தன. சமய வேறுபாட்டிற்காகச் சிறையிலடைப்பதும், அரசியல் அதிகாரத்தின் மூலம் துன்புறுத்தப்படுவதும் சகசமாக நடந்தது உண்டு. 19,20-ம் நூற்றுண்டுகளில் சமயத்திற்காக நாகரிகமடைந்த உலக நாடுகளில் எங்கும் துன்புறுத்தப்படுவது இல்லை என்றாலும், அரசியல் கொள்கைக்காகத் துன்புறுத்துவதும் துன்பப்படுவதும் இன்று வரை நடந்து கொண்டுள்ளன. இன்று பல நாடுகளில் மனிதனுடைய சுதந்திரச் சிந்தனைகளை வெளியிடக் கட்டுப்பாடுகள் இருப்பதை, எதிர்காலம் அநாகரிகமானது என்று கருதும் என்பதில் ஐயமில்லை.

வள்ளல் பெருமான் உலகிற்குக் கூறிய புதிய சிந்தனை என்ன என்று ஆராய்வது அவசியமாகின்றது. நூறு ஆண்டுகளாக அவர் தந்த இனிமையான திருவருட்பா, பக்தியோடு தமிழகமெங்கும் ஒலிக்கப்பட்டு, அவைகள்

அருமையான "உள்ளம் உருக்கும் பாடல்கள்" என்று ஏற்றுக்கொள்ளப்பட்டன. "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே" போன்ற பாடல்கள் பாமர மக்களையெல்லாம் மயக்கியவைகளாகும். 19-ம் நூற்றுண்டில் வறட்சி யடைந்த தமிழகத்தில் பிறந்த அடிகளார், பசியின் கொடுமையைப் போக்க, சத்திய தருமச் சாலையை 1867-ம் ஆண்டு வடலூரில் அமைத்தார். அங்கே வள்ளல் பெருமான் ஏற்றி வைத்த தீ இன்னும் அணையாமல், தினசரியும் மக்களுக்கு உணவு கொடுக்கப்படுவது ஓர் அதிசயமாகும்.

சிவபெருமானை, முருகனை, திருமாலை, அம்மையைச் சிறப்பாகப் பாடிக் காலம் கழித்த வள்ளல்பெருமான் பிற்காலத்தில் உருவ வழிபாட்டு நிலையைக் கடந்து மட்டற்ற அருளையும் கருணையையும் தன் ஆயிரக்கணக்கான பாடல்களில் வெளிப்படுத்தினுர்கள். மக்கள் இறைவனின் பிம்பமாக வழிபடக் காட்டிய வழிதான் "ஜோதி வழிபாடு". முதல் ஐந்து திருமுறைகளில் சுமார் 3000 பாடல்கள் மூலம் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் அமைந்த பாரம்பரியத்தின்படி பாட்டிசைத்த இந்த ஞானக்குயில், பின்னர் புதிய குரலில் ஆரும் திருமுறையைப் பாட ஆரம்பித்தது. இதுநாள் வரையில் தான் பட்ட சிரமங்கள், முயற்சிகள் ஏமாற்றங்கள் இவற்றையெல்லாம் தனது பரம்பரையினர் அடையவேண்டாம் என்று எண்ணி "இதுவரை நான் கூறியவை பிச்சு விளையாட்டு" என்றும் இறைவனுடைய தனிப் பெரும் கருணையமுதை அனுபவித்த பின்னர், உலக மக்கள் மீண்டும் பழைய வழக்கங்களில் சிக்கி இருப்பதைப் பார்த்து மனம் நொந்து சுலபமாக ஆன்மீக லாபம் பெற்று அருட்பெருஞ் சோதி ஆண்டவனை அடையச் சிரமமில்லாத எளிய மார்க்கம் உள்ளது என்ற கருத்தைப் பின் மூவாயிரம் பாடல்களாக ஆரும் திருமுறையாக வெளியிட்டார்கள்.

அந்தப் பாடல்களை எழுதியபோது இந்தப் பாடல்கள் எல்லோருக்கும் ஏற்பட்டவை அல்லவென்றும், அக இனத்தாரில் ஆன்மீக தாகம் உள்ளவர்களுக்குத் தான் இவை கூறப்பட வேண்டும் என்றும் தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டார். உலகத்தில் மனித இனம் மட்டுமின்றி ஜீவராசிகள் அனைத்திடமும் கருணை கொண்டு உயிரினங்களிடமெல்லாம் சகோதரத்துவம் பூண்டு வாழவேண்டுமென்ற பெரும் குறிக்கோளை உருவாக்கிய பெருமை இராமலிங்க அடிகளாருக்கு உண்டு.

சமய சரித்திரத்தை ஆராய்ந்து பார்க்கும் போது புதியமுறையில் வழிகாட்டிய பெருமக்கள் பலர் உள்ளார்கள். இந்திய நாட்டில் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் இறைவன் பெயரால் பலியும், கொலையும் மக்கள் இனத்தால் வேறுபாடும் இருந்த காலத்தில், மனிதனுடைய உலக இன்பங்களைக் குறைத்து உணவுக்காகக் கொலை புரியாமல் உயர்ந்த அன்புடன் வாழ வேண்டும் என்று வலியுறுத்த ஜைன சம்பிரதாயம் தோன்றியது. புதிய சித்தாந்தங்கள் தாங்கள் எந்தக் குறைகளை மாற்ற எழுந்தனவோ அதே குறைபாடுகளில் சிக்கிச் சிரமப்படுவதைத் சரித்திரம் பலமுறையும் காட்டுகிறது. அதன்படி சீர்திருத்தச் சமயங்கள் சாதியில் சிக்கிக் கஷ்டப்பட்டபோது, காலடி என்ற திருத்தலத்தில் தோன்றிய தமிழ மகனுகிய ஆதிசங்கரர் இந்திய மண் முழுதும் தம் கால்தேய நடந்து ஏற்கனவே அமைந்த பல வகைச் சமயங்களையும் ஒழுங்குபடுத்தி அறு வகைச் சமயங்களின் அடிப்படையை உண்டாக்கி, சமுதாயத்தை அமைதிப்படுத்தினுர். பௌத்த, ஜைன சமயத்தின் சிந்தனை வளர்ச்சியை ஏற்று அதன் சகோதரத்துவம், கருணை முதலிய கொள்கைகளையும் கொண்டு, புதிய ஞான ஒளியாக அத்வைதமான வேதாந்த முறையை அவர் உபதேசித்து அருளினுர்.

மறுபடியும் 200 ஆண்டுகளுக்குப் பின்னர்க் காஞ்சியில் தோன்றி அருளாளப் பெருமாளின் சேவைக்குத் தன் ஆயுளை அர்ப்பணித்த இராமானுஜர் உலகப் புகழ்பெற்ற பிறிதொரு தமிழ் மகனுவார். உலக மக்கள் அனைவரும் சுலபமாக இறைவனை அடையப் புதிய சித்தாந்தமான விசிஷ்டாத்வைதத்தை அவர் உருவாக்கி உபதேசித்தார். பதினெட்டு முறை திருவரங்கத்திலிருந்து நடந்து சென்று திருக்கோட்டியூர் நம்பியிடம் பெற்ற இரகசிய உபதேசத்தை, தான் நரகம் சென்றுலும் பரவாயில்லை, உலக மக்கள் இறைவனை அடைய வேண்டுமென்று குரு வாக்குக்கு மாருக உடனடியாகக் கோபுர மீதேறி உபதேசித்து ஞானகுருவாக அவர் விளங்கினுர்.

இதுபோன்ற புதிய வழிகளை அருளிய மாபெரும் ஞானிகள், தீர்க்கதரிசிகள், புரட்சியாளர்கள் வழியிலே வந்த பெருமான் வடலூர்

அடிகள்; ''வாழையடி வாழையென வந்த திருக் கூட்ட மரபில் யானொருவனன்றோ'' என்று அவரே குறிப்பிட்டுள்ளார். அவர்கள் உலகிற்கு உபதேசித்த புதிய கருத்து உயிர்களுடைய சகோதரத்துவம் உயிர் ஒற்றுமைக்காகத்தான், எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி ஒத்துரிமை உடையவராய் விளங்கவேண்டும். ''உயிர்க்கொலையும், புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம் உற வினத்தார் அல்லர்; அவர் புறவினத்தார்'' உணவில் புற இனம் என்றும் அகவினம் என்றும் பிரித்து உயிர்க்கொலை செய்து வாழும் புற இனத்தாரிடமிருந்து ஒதுங்கி வாழ் என்றும், அவர்களுக்குப் பசி தவிர்த்தல் மாத்திரமே புரிக என்றும் கூறினர். சமயத்தின் பெயரால் உள்ள வேறுபாடுகள் மறைந்து உலக சகோதரத்துவத் திற்கு வழி கண்ட பெருமானுருடைய பெரிய துரதிர்ஷ்டம் அவருக்கு சரியான சீடர்குழாம் அமையாததுதான், சங்கரர் அமைத்த நான்கு மடங்கள் இன்றும் உயர்ந்த துறவிகளை உரு வாக்கி அத்வைத சித்தாந்தத்தை உலகில் பரப்பி வருகிறது. சங்கரர், இராமானுஜர் ஆகியோரின் சித்தாங்கள் இந்தியாவில் பொது மொழியாக இருந்த, வடமொழியில் அமைந்த தனுல், அவை நாடெங்கும் பரவின. பின்னர் ஆங்கிலம் மூலம் உலகெங்கும் பரவியுள்ளது.

வள்ளல் பெருமானுடைய சித்தாந்தம் தமிழ் மொழியில் உள்ளது. அவர் காலத் திலேயே அதனைச் சரியாக உணர்ந்த சீடர்கள் அவருக்குக் கிடைக்கவில்லை. அறிவுடைய மக்கள் சமூகத்தை விட்டுப் பிற்போக்கான வடலூரில் நீண்ட காலம் இருந்தார். தமிழகத் தில் வாழ்ந்த சிறந்த ஞானிகளான சித்தர் பரம் பரையின் கருத்துக்களையும், இந்திய நாட்டின் பொக்கிஷமான அத்வைத சித்தாந்தத்தையும் இணைத்து அவர் புதிய ஞான ஒளியைக் கொடுத்திருக்கிறுர்.

குழூஉக்குறிகளையும், சங்கேத பாஷைகளை யும், தத்துவ பரிபாஷைச்சொற்களையும் அறி யாத வடலூர் மக்களுள் சிலர் ''சாகாமல் வாழ வேண்டும்'' ''நித்திய தேகம்'' போன்ற சொற்களுக்கு அவர்கள் கண்ட முடிவின்படி இறந்த பிணங்களுக்கு உயிர் கொடுத்தல் என்று பொருள் கொண்டு, வள்ளல் பெருமானை வருத்தத் தொடங்கினர். புரியாத மக்களின் துன்பத்தையும், அறியாமையையும் கண்டு, மேட்டுக்குப்பத்தில் மறைந்து இருந்த பெருமகனுர் நமக்கு ஆன்மாவின் புதிய பாதையை அருமையாகக் காட்டிச் சென்றுள் ளார் திருவருட்பா மூலமாக. அந்தப் பாடல் களைத் தத்துவம், வேதாந்தம், சமயம் இலக்கியம் அறிந்த ஓர் அறிஞர் குழாம் ஆராய வேண்டியது அவசியம். விவேகானந்தப் பெருமான் தனது குரு இராமகிருஷ்ணரை உலகெங்கும் தம் பேச்சாலும் இராமகிருஷ்ண மடங்கள் நிறுவியதன் மூலமாகவும் அழியாது வாழச் செய்ததுபோல், தமிழ் மக்கள் உலக சமுதாயத்திற்கு ஒப்பற்ற வழிகண்ட ஒரு தமிழ் மகனைக் குடத்திற்குள் இட்ட விளக்காக விட்டு விடாமல் உலகெங்கும் தென்படும் குன்றிலிட்ட ஜோதியாகச் செய்யவேண்டும்.

சுத்த சத்திய சன்மார்க்கம், உலக மக்களை, சமயங்களையெல்லாம் இணைக்கும் ஒரு சிறந்த அமைப்பாக வேண்டும். அருட்பாவும், அத்வைதமும், அருட்பாவும் விசிஷ்டாத் வைதமும்; அருட்பாவும் த்வைதமும்; அருட்பாவும் குறளும்; அருட்பாவும் திருவாசக மும்; அருட்பாவும் திருக்குரானும், அருட்பாவும் பைபிளும்; அருட்பாவும் தொராவும்; அருட் பாவும் பௌத்தமும்; அருட்பாவும் ஜைனமும்; அருட்பாவும் கீதையும் என்று உலகெங்குமுள்ள சமயக் கருத்துக்களுக்கும் அருட்பாவிற்கு முள்ள இணைப்பை ஆராய்ந்து வெளியிடும் அறிவும் குணமும் உள்ள இளைஞர்கள் முன் வரும் காலம்தான் சன்மார்க்க யுகமாக அமையும்.



சென்னைக் குயப்பேட்டை வினைதீர்த்த விநாயகர் கோயில் குடமுழுக்கு விழாக் காட்சி (26—1—72).

இராமலிங்கரின் இலட்சியம்

சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம்

அருட்பிரகாச வள்ளலார், "ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை" என்ற புதிய கோஷத்தை எழுப்பினர். அந்தக் கோஷத்தின் அடிப்படையில் உயிர்களிடையே சகோதர உணர்வை வளர்க்க முயன்றார். அடிகளாரின் குறிக்கோள் பலவாயினும், அவற்றுள் தலையாயது-மற்ற எல்லாக் குறிக்கோள்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குவது "ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை" என்பதாகும். "சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை" என்று அடிகளாரே கூறுகின்றார்.

சன்மார்க்க நெறியிற் சாராதாரைத் 'துன்மார்க்கர்' என்றே கூறுவார் தாயுமானவர். இதனைச் "சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்கனேனையும் தண்ணருள் கொடுத்தாள்வையோ!" என்ற அவரது வாக்காலேயே அறியலாம். இங்குத் தாயுமானவர் வலியுறுத்துவது சித்தாந்த-வேதாந்தங்கள் கலந்த சமய சன்மார்க்கமேயாம். வள்ளலார், சமயங்கடந்த 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற புது நெறியையே போதித்தார்.

ஆன்மநேய ஒருமை:

உயிர்கள் பலவகையான தேகங்களைப் பெற்று வாழ்கின்றன. அவற்றை, மனிதர்-மிருகம்-பறவை-ஊர்வன - நீர் வாழ்வன - தாவரம் எனப் பாகுபடுத்தியுள்ளனர் அறிஞர் பெருமக்கள். அவை அனைத்தும் பரமான்மாவால் படைக்கப்பட்ட ஜீவான்மாக்கள் என்பது சமயக் கொள்கை. அதனால், அந்த உயிர்களிடையே ஆன்மநேய ஒருமைப்பாடு காண்பதனை நம் கடமையாகக்கொண்டார் வள்ளலார். "உலகம், ஆதி பகவானாகிய இறைவனை முதலாக உடைத்து" என்றார் திருவள்ளுவர். அந்த முதற் பொருளைத் தலைமையாகக் கொண்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சமுதாயத்தைக் காண விரும்பினர் வள்ளலார். இதுபற்றித் தாம் இயற்றிய 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ற நூலில், அடிகளார் தரும் விளக்கம் வருமாறு :

"சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய கடவுள் இயற்கை உண்மை ஏக தேசங்களாகிக் கடவுள் அருட்சக்தியால் பூதகாரிய தேகங்களில் வருவிக்கப்பட்டபடியால் இச்சீவர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களேயாகும்.

"சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமை உள்ள சகோதரர்களே யாவர்".

மேலே எடுத்துக்காட்டிய இரண்டு பகுதிகளும் ஒரே கருத்தை வலியுறுத்தியுள்ளனவாக இருப்பினும், முன்னதில் உயிர்கள் அனைத்தையும் ஒரே இனமாகக் குறிப்பிடுகின்றார். பின்னதில், அந்த இன உரிமை பற்றிச் சகோதர ஒருமைப்பாடு இயற்கையாக இருப்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

வாயே பறையானது :

'உயிர்கள் அனைத்திடத்தும் அன்பு செலுத்த வேண்டும்' என்பது ஜீவகாருண்யம். அடிகளார், அதனினும் ஒருபடி மேலே சென்று தேகபேதங்களை மறந்தவராகி, உயிர்களையெல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்தவையாகக் கூறுகின்றார். அது, ஆன்மநேய இனமாகும். அந்த அடிப்படையில் கருணையையே மதமாகக் கொண்ட ஒரு புத்தம் புதிய உலகை அமைக்க முயன்றார் வள்ளலார். அதனைத் தம் கண்ணாரக் கண்டுமகிழும் பேற்றினைத் தருமாறும் கடவுளைப் பிரார்த்தித்தார்.

"கள்ள வாதனையைக் களைந்தருள் நெறியைக்
காதலித்து ஒருமையில் கலந்தே
உள்ளவாறு இந்த உலகெலாம் களிப்புற்று
ஓங்குதல் என்று வந்து உறுமோ?

"வள்ளலே அதுகண்டு அடியேன் உள்ளம்
மகிழ்தல்என் ஞேனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுளம் அறிந்தது
உரைப்பதுஎன் அடிக்கடி உனக்கே"

"உலகத் திரளெலாம் மருவறக் கலந்து
வாழ்வதற்கு வாய்த்த தருணம்
இதுஎன்றே

வாயே பறையாய் அறைகின்றேன்",

என்னும் வரிகளில், தமது இலட்சியச் சித்திரத்தைக் காட்சிப்படுத்துகின்ருர் வள்ளற் பெருமான்.

அடிகளாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை, பேதங்களைக் கடந்த அல்லது பேதங்கள் அற்ற அபேத சித்தாந்தமாகும். ஆம்; கடவுள் வேற்றுமை, வருண வேற்றுமை, சமய மத வேற்றுமை, சாதி வேற்றுமை ஆகியவற்றையெல்லாம் அழித்தும், மொழி நாடு நிற வேற்றுமைகளையெல்லாம் கடந்தும் வளர்வது ஆன்மநேய ஒருமைப்பாடு.

தெய்வம் பலப்பல என்னும் மூட நம்பிக்கைக்கு எதிரான சித்தாந்தம் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை. அதனுல்,

"ஆறு கோடியாம் சமயங்கள்
அகத்தினும் அவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தவே
தாந்தாநா தாந்தம்
தேறும் மற்றைய அந்தத்தும்
சிவம்ஒன்றே அன்றி
வேறு கண்டிரேல்
பெரியர்காள் விளம்பீர்!"

எனப் பாருலகனைத்துக்கும் பறையறைந்து பாடுகின்ருர் வள்ளலார். தெய்வம் ஒன்றுதான் உண்டு என்று உண்மையை உணராத மாந்தர்களைப் பார்த்து, "ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுறுமோ?" என்றும், "ஒன்றே சிவம் என உணர்ந்து இவ்வுலகெலாம்; நன்றே ஒருமையுற்று வாழி!" என்றும் பாடினுர். இங்கு அடிகள் சிவம்,' என்றது உயிர்க்குலம் அனைத்துக்கும் பதியான பரம்பொருளேயாகும்.

அன்பே-அகிலமே கடவுள் :

வள்ளலார் சொல்லும் கடவுள், நாம ரூப பேதங்களுக்கு அப்பாற்பட்டது, இதனை அடிகளாரே கூறக் கேட்போம்.

"உண்மையில் 'கடவுள்' எனப்படுவது அகிலமாம்-அன்பாம். அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது."

முற்காலச் சான்ருேர், 'அன்பே கடவுள்' என்றனர். அத்துடன் அகிலத்தையும் சேர்த்து, 'அன்பாம் அகிலமாம் கடவுள்' என்ருர், உலக ஒருமைப்பாட்டினைக் காண விழைந்த வள்ளலார்.

உயிரினத்திடையே—குறிப்பாக, மனிதர்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்க்கத் தடையாக இருக்கும் எதனையும் தெய்வ சக்தியாகவோ, தெய்வ சம்மதமாகவோ ஏற்க மறுக்கிருர் வள்ளலார்.

இராமலிங்கர் உலகிலுள்ள எல்லா மதங்களையுமே வெறுத்தார்; அம்மதங்களைச் சார்ந்த மக்கள் அனைவரிடமும் ஒருமைப்பாடு காண விழைந்தார், இஃது அவருடைய பொதுக் கொள்கை. ஆயினும், தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் முயற்சியை முதலில் இந்தியாவில் தோன்றி வளர்ந்த இந்து, சமண, பௌத்த மதங்களிடையே மட்டும் மேற்கொண்டார். இஸ்லாம் கிறிஸ்துவ சமயங்களைப் பற்றி அவர் வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை. அதனுல் இஸ்லாம் கிறிஸ்துவ மதங்கள் அல்லாத இந்திய மதங்களை மட்டும் ஒன்றுபடுத்த

விரும்பினுர் என்று கருதுவதற்கில்லை. தமது கொள்கைக்கு இஸ்லாம்-கிறிஸ்து மதத்தை ஈர்க்க விருப்பமிருப்பினும், அதனைக் காலத்தின் கையில்—கடவுள் கையில் விட்டுவிட்டார் என்றே சொல்லவேண்டும். ஆம்; கருத்துப் போர்க்கான களத்தைப் பெரிதாக்கிக்கொள்ள விரும்பாத ராஜதந்திரி வள்ளலார்.

ஆதிசங்கரர் கண்ட ஒருமை :

ஒரு குழுவினருக்கு எதிராக இன்னொரு குழுவினர் ஒன்றுபடுவது ஆன்மநேய ஒருமைப் பாட்டு உரிமையாகாது. அதனைத் தற்காப் புணர்ச்சி என்றே சொல்லவேண்டும். அடிகளார் ஒருமைப்பாட்டினை வற்புறுத்தியது குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு மட்டும் தற்காப்புத் தேடவன்று. 'ஒரே உலகம்' காண்பதற்கேயாம். ஆதி சங்கரர், இந்து சமயத்தின் உட்பிரிவுகளாக இருந்த அறுவகைச் சமயங்களிடையே ஒருமைப்பாடு காண முயன்ருர்.

ஆதி சங்கரரின் சமய ஒருமைப்பாட்டு முயற்சி, அவருடைய வெறுப்புக்கு இரையான சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக-அந்த மதங்களின் தாக்குதலிலிருந்து வேத மதத்திற்குத் தற்காப்புத்தேட-இந்துக்களை எல்லாம் ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சியேயாகும். வள்ளலாரின் குறிக்கோள் அதுவன்று. அவர், மதங்களே இல்லாத மனித சமுதாய ஒருமைப்பாட்டைக் காணவே பாடுபட்டார். ஒன்றுபட்ட அந்த மனித சமுதாயமும், ஒரே தெய்வ நம்பிக்கை கொண்டு பிளவு-பிரிவினை ஆகிய தீய சக்திகளிடமிருந்து விடுபட்டு, உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்துவதாக இருக்கவேண்டுமென்றும் கனவு கண்டார். அதனுற்ருன், 'இந்து நேயஒருமைப்பாட்டுரிமை' என்று சொல்லாமல், 'ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை' என்று கோஷித்தார். கோஷம் புதியதாயினும், அந்தக் கோஷத்தினுள்ளே அடங்கியிருக்கும் குறிக்கோள் உலகத்திற்குப் புதிதன்று.

முன்னேர் கண்ட தோல்வி :

உலகில், மதாசாரியர்களாக - தீர்க்கதரிசிகளாகக் கருதப்படுவோர் அனைவருமே உலகம் முழுவதையும் ஒரே நெறியின் கீழ்க் கொண்டுவர முயன்றவரேயாவர். ஆனுல், காலம் அவர்களுள் ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்திப் பல மதங்களை ஏற்படுத்திவிட்டது. அதனுல், ஒவ்வொரு நெறியும் அல்லது ஒவ்வொரு இயக்கமும், காலத்தில் தனித்தனி மதங்களாகி, அவற்றைத் தோற்றுவித்தவர்களின் ஒரே உலகக் கனவு பலிக்காமல் செய்துவிட்டது.

மதவாதிகளும் ஞானிகளுமேயன்றி, சக்கரவர்த்திகளும் உலகனைத்தையும் ஒரு குடைக்கீழ் கொண்டுவர முயன்று, அதிலே அவர்கள் தோல்வியடைந்தனர். அதன் விளைவாக, சாம்ராஜ்யங்கள் பலவாயின. உலக சாம்ராஜ்யம் காணச் சக்கரவர்த்திகளுள் சிலர் முயன்றதற்குத் தலைமைப் பதவியில் அவர்கள் கொண்டிருந்த ஆசையும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆயினும், ஒரே உலகப் பொதுமை உணர்வும் அவர்களுக்கு இருந்ததென்பதை நாம் மறப்பதற்கில்லை.

ஞானியர்களும் அரசர்களும் அடைந்த தோல்விகளுக்குக் காரணம், அவர்களது 'ஒரே உலக' முயற்சியானது, ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வை அடிப்படையாகக் கொள்ளாததுதான். ஒரே உலக உணர்வுடன் தோன்றிய மதங்கள் தங்களுக்குள்ளே போட்டியிட்டு, போராடத்தொடங்கி, தத்தம் உயிர்க் கொள்கையான உலக ஒருமைப்பாட்டிற்கே கேடிழைத்துவிட்டன. அந்தப் புனிதமான குறிக்கோள் என்றென்றுமே நிறைவேருதபடி மதங்கள் தடைகளாகிவிட்டன.. அதனுற்ருன், மதங்களை அழித்தாலன்றி, ஆன்மநேய ஒருமைப்பாடு தோன்றுவதோ, உலகிலுள்ள மனிதர் அனைவரும் ஒருகுலமாய் ஒன்றுபடுவதோ சாத்தியமில்லை என்ருர் சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைவரான வள்ளலார்.

மதங்கள் பலவாயிருப்பினும், குறிக்கோளில் ஒருமைப்பாடு இருப்பின், வள்ளலார் மதங்களை வெறுத்திருக்கமாட்டார். ஆனுல், அவர் வாழ்ந்த காலத்தில், "போதித்த சமயமோ ஒன்று சொன்னபடி ஒன்று பேசாது,"

என்று தாயுமானவர் எடுத்துக்காட்டிய இழி தன்மையே நிலைத்திருந்தது. அதனால், மதங்களை ஒழித்து, மனித குலத்திடையே ஒற்றுமை காண விழைந்தார்.

எம்மதமும் சம்மதம் :

'எம்மதமும் சம்மதம்' என்பது அடிகளாரின் கொள்கை. இதனை,

''எம்மத நிலையும் நின்னருள் நிலையில்
இலங்குதல் அறிந்தனன்
எல்லாஞ் சம்மத மாக்கிக் கொள்கின்றேன்.''

என்ற அருட்பா வரிகளில் வெளிப்படுத்துகின்றார். இங்கு 'எம்மதமும்' என்று அடிகளார் குறிப்பது, மத ஸ்தாபனங்களையன்று; மத தத்துவங்களையே. இந்தக் குறிக்கோளுக்கிணங்க-சித்தாந்தம், வேதாந்தம், நாதாந்தம், கலாந்தம், யோகாந்தம், போதாந்தம் ஆகிய ஆறு அந்தங்களையும் ஒன்றுபடுத்தி, ''ஷடாந்தம்'' என்றொரு சமரச சமஷ்டித் தத்துவத்தை உருவாக்கினார்.

ஆதிசங்கரர், இந்து மதத்தின் உட்பிரிவுகளான ஆக்னேயம், ஐந்திரம், காணபத்தியம், சைவம், வைணவம், சாக்தம் ஆகிய ஆறு சமயங்களையும் ஒன்றுபடுத்தினார். அது காரணமாக, 'ஷட்மத ஸ்தாபகர்' என்ற சிறப்புப்பெயர் பெற்றார். அவர் காலத்தில் இந்து மதமொன்றே இந்தியா முழுவதிலும் செல்வாக்குப் பெற்றிருந்ததால், அதன் உட்பிரிவுகளை ஒன்றுபடுத்துவதையே தேசிய ஒருமைப்பாட்டுப் பணியாக அவர் கருதியிருக்கக்கூடும்.

அவருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வாழ்ந்த வள்ளலார் காலத்தில், இஸ்லாம்-கிறிஸ்துவ மதங்கள் இந்து மதத்தின் செல்வாக்கை ஊடுருவி, அந்த மதங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்ட அரசாங்கங்களின் துணையால், இந்தியாவில் நிலைத்துவிட்டன. ஆகவே, இந்து மதத்திற்குப் புறச்சமயங்களான சமண-பௌத்த மதங்களையேயன்றி, இந்தியாவிற்கே புறச் சமயங்களான இஸ்லாம்-கிறிஸ்தவ மதங்களையும் ஒன்றுபடுத்தி, உலக ஒருமைப்பாடு காண விழைந்தார் வள்ளலார்.

இஸ்லாம்-கிறிஸ்தவம் :

அடிகள், தமது ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கையை முதலில் இந்திய மதங்களிடையே மட்டும் பரப்ப முயன்றதற்கு முக்கிய காரணம், அந்தக் கொள்கைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் நாடு இந்தியாதான் என்று அவர் நம்பியதேயாகும். இதனைச் சுவாமி விவேகானந்தரும் உறுதிப்படுத்துகின்றார்.

''எல்லாத் தேசங்களிலும் 'எல்லா மதங்களையும் தன்னுயிர்போல் நினை' என்ற உண்மை சொல்லப்பட்டிருக்கிறது. நாம் மனித உயிர்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் வித்தியாசம் காட்டுவதில்லை.''

''ஏன் மற்ற உயிர்களைத் தம் உயிர்போல் நினைத்து அன்பு செய்யவேண்டும்? இதற்குக் காரணம் மற்ற சாஸ்திரங்களில் கொடுக்கப்படவில்லை. கடவுள் அருபமாய் எல்லா உயிர்களிலும் இருக்கிறார். அதனால், எல்லா உயிர்களும் சமம்.'' — இந்தியப் பிரசங்கங்கள், பக். 32.

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சித்தாந்தம், 'தெய்வம் ஒன்று' என வற்புறுத்துவதோடு, 'அத்தெய்வம் எல்லா உயிர்களிலும் இருக்கின்றது' என்றும் சொல்கின்றது. மனிதர் மிருகம் பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்பனவெல்லாம் உடலைக் காரணமாகக் கொண்ட வேற்றுமைகளே. அந்த வேற்றுமைகளுக்கும், ஆன்மாவுக்கும் சம்பந்தமில்லை என்பது அடிகளின் கொள்கை.

புல்லாகி :

உயிர்கள் அனைத்திலும் கடவுள் வியாபித்திருக்கிறார் என்ற உண்மையை உணராதவர், தம்மிடத்திலுள்ள கடவுள் தன்மையையும் உணரத் திறனற்றவராவர் இதனை.

''ஜீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது.''

— ஜீவகாருண்ய ஒழுக்கம்-3!

என்ற அடிகளார் வாக்காலும் அறிகிறோம்.

பானுகவியின் தவறு :

வள்ளலாரை வெறுத்த மருட்பாக் கட்சியினர் சார்பில் தாம் வெளியிட்ட ''நியாய வச்சிர குடாரம்'' என்ற நூலில்,

'எம்மதமும்' சம்மதமென்று பிள்ளையவர்களும் பிறரும் உரைப்பதெல்லாம் வேதாகம பிரதிபாத்திய மதங்களேயாம்.''

என்கிருர், அதன் ஆசிரியரான ரத்னுகரம் ப. தி. பானுகவியார். அதாவது, வேதங்களையும், ஆகமங்களையும் ஏற்றுக்கொண்ட மதங்களையே அடிகள் சம்மதமாகக் கொண்டார் என்ருர். இஃது உண்மையானல், சமணம்-பௌத்தம்-கிறிஸ்தவம் ஆகிய புறச்சமயங்கள், அடிகளார் காண விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சமுதாயத்திற்குப் புறம்பானவையாகிவிடும். பானுகவியாரின் விளக்கம் அடிகளாரின் கருத்துக்குப் பொருந்துவதாக இல்லை. அருட்பாவுக்கு எதிராகப் போர்க் கோலங்கொண்ட சைவர்களைச் சமாதானப் படுத்தவே பானுகவியார் தவருன விளக்கம் தந்தார் போலும். அவருடைய கருத்து அடிகளாரின் கொள்கைக்கு மாருனதென்பதைக் கீழ்வரும் பாடல்களால் அறியலாம்.

'' பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே
நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப்
பேர்புகல்என் கின்ருய்
அருகர்புத்தர் ஆதிஎன்பேன்
அயன்என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன்
ஆதிசிவன்என்பேன்
பருகுசதா சிவம்என்பேன் சித்தசிவம்
என்பேன்
பரமம்என்பேன் பிரமம்என்பேன்
பரப்பிரமம்என்பேன்
துருவுசுத்தப் பிரமம்என்பேன் துரியநிறை
வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை சித்துவிளை
யாட்டே.''

'' சிற்சபையில் நடிக்கின்ற நாயகனுர் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ
என்ருய்
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே
கண்டாய்
பித்தர்என்றே பெயர்படைத்தார்க்கு
எப்பெயர்ஒவ் வாதோ
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயர்என்
பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும்அவர்
பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யும்ஒரு
ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெரியும்இது
தோழி.''

இப்பாடல்களிரண்டும் தலைவி தோழிக்கு உரைக்கும் பாவனையில் அடிகளார் பாடியவையாகும். முதற் பாடலில், அருகர்-புத்தர் என்னும் பெயர்களும் தாம் வணங்கும் ஆண்டவனுடைய பெயர்களே என்கிருர். '' அருகர்-புத்தர் என்பன புறச் சமயங்களின் தலைவர்கள் பெயராயிற்றே, அவை இந்து, ஆகம முறைப்படி வழிபடும் அம்பலத்தரசருக்குப் பொருந்துமா ?'' என்று தோழி கேட்டதாகப் பாவித்து, இந்தியாவின் புராதன சமயங்களின் தலைவர்களாகிய அருகர்-புத்தர் ஆகியவர்களின் பெயர்களேயன்றி, '' பிற்சமயத்தார் பெயரும் அவர் பெயரே கண்டாய் '' என்கிருர். அடிகள் ' பிற்சமயத்தார் ' எனக் குறிப்பிடுவது. பிற்காலத்தில் இந்தியாவில் புகுந்து, வளர்ந்து, நிலைத்துவிட்ட இஸ்லாம்-கிறிஸ்தவ சமயங்களேயாகும். இதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆகவே, அடிகளார், ' எம்மதமும் சம்மதம் ' என்றது, இஸ்லாம்-கிறிஸ்துவ மதங்களுக்கும் பொருந்துவதாகும். '' ஒருமையின் உலகெலாம் ஓங்குக '' என்றுரைத்த அடிகளார், இஸ்லாம்-கிறிஸ்தவ மதங்களை விலக்கி உலக ஒருமைப்பாடு காண விரும்புவாரா ?

நெய்விளக்கு ஏற்றுக

அருளாளர் வருகின்ற தருணம் இது! தோழி;
ஆயிரம் ஆயிரம்கோடி அணிவிளக்கு ஏற்றிடுக!
தெருளாய பசுநெய்யே விடுக! மற்றை நெய்யேல்
திருமேனிக்கு ஒருமாசு செய்தாலும் செய்யும்!
இருள்ஏது காலைவிளக்கு ஏற்றிடவேண் டுவதேன்?
என்னுதே; மங்கலமாய் ஏற்றுதலாம் கண்டாய்!
மருளேல்! அங்கு அவர்மேனி விளக்கமது. எண் கடந்த
மதிகதிர்செங் கனல்விரவி எண்ணினும் சாலாதே!

—திருவருட்பா

நால்வர் தமிழ்

(கூசாதுரைக்கும் சொல்)

தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M. L. C.

பொய்! அம்மம்ம! அது இன்றைக்கும் பெற்றிருக்கும் செல்வாக்குக்கு எல்லையே இல்லை. எங்கும் இன்று பொய் நடமாடுகிறது; ஆட்டம் ஆடுகிறது. இன்றையப் பேச்சுலகில் உண்மைக் கலப்பும் இருக்கலாம். ஆனுல் பொய்யே முதல்! இன்றைய மனிதன் பொய்யைப் புதுப்பாணி யாக்கி விட்டான். வள்ளுவன் கூறியதைப் போல் பொய்யைச் சொல்வன்மை ஒப்பனை செய்து காப்பாற்றி வருகிறது. அதுமட்டுமா? ''பொய் சொல்லலாம்'' என்று வள்ளுவரே கூறி யிருக்கிருர். இப்படி ஓர் ஆதரவுப் படலம்! ஆம்! பொய்ம்மையும் வாய்மையிடத்த என்று வள்ளு வர் கூறியது உண்மை. ஆனுல், பொய் வாய்மை யாகிறது என்பது வள்ளுவத்தின் கருத்தல்ல. பொய், பொய்யேதான்! ஆனுல், விளையும் பயன் நோக்கி வாய்மையிடத்தில் வைத்தெண்ணலாம் என்பதேயாம். ஆம்! சொல்லும் செயலும் பயன் நோக்குடையன. என்ன பயன்? உயிர்த் தகுதி மேம்பாடு அடைய வேண்டும். உயிர்கள் அறத்தில் அருளில், தூய்மையில், வாய்மை யில் தோய்ந்து வளர்தல் வேண்டும். செடிக்கு நீரூற்றுதல் செயல், அதன் பயனுகச் செடி வளரவேண்டும். கரும்பலகையில் எழுதல் செயல்-சடங்கு. அதன் பயன் கரும்பலகையில் எழுதுவதைச் சிந்தையில் எழுதிக்கொள்ளுத லாகும். ஒளியைத்தாங்கிப் பேரொளிப் பிழம் பாகிய பரம்பொருளை வழிபடுதல் செயல்-சடங்கு அதன் பயன் உயிர் ஒளிமயமாதல். ஆதலால் பயன் நோக்கியே செயல்-சடங்கு

மனம் வாழ்க்கையின் அடிநிலம். அது எண்ணவல்லது; நினைக்கவல்லது; உணர வல்லது. ஏன் இத்தனை தொழிற்பாடு? மனம் நல்லவண்ணம் விளைந்து பயனுறுதற்கே! மனம் தானே மனிதனுக்கு உருவம் கொடுப்''து; வாழ்விப்பது. மனத்தின் வண்ணமே மனிதனின் வடிவு-செயல். ஆங்கிலக் கவிஞன் மில்ட்டன் ''மனமே நரகத்தையும் சொர்க்கத்தையும் படைப்ப''தென்ருன். இன்று சிலர் சொர்க் கத்தை நிலவரைப்படத்தில் தேடுகின்ருர்கள்! பரிதாபம்! மனமே சொர்க்கத்தின் பிறப்பிடம் அப்பரடிகளுடம், ''மனத்தகத்தான்'' என்ருர். வாய்மை சொல்லி, மற்றவர்க்கு நன்மை வராது தீமைவரின் அது வாய்மையல்ல, சொல்லளவில் வாய்மைபோலத் தோற்றினுலும். இயல்பால்—தன்மையால் வாய்மையன்று. பொய் சொல்லுவ தின் மூலம் பிறர்க்கு நன்மை விளையுமானல் 'பொய்ம்'மையை வாய்மையாகக் கருதலாம்என் பதே வள்ளுவத்தின் கருத்து. வாழ்க்கையின் இலட்சியம் நன்மை விளைவித்தலே. அந்த முழு நன்மையே கடவுள். ''நன்றுடையானை'' என் பது தேவாரம். புரைதீர்ந்த நன்மை எது? அது எப்படி இருக்கும்? இன்று அதைப் பார்த்தது யார்? யாருக்கும் தீமை தராமல் நன்மை தரு வதே புரைதீர்ந்த நன்மை. ஆதலால் இன்றைய உலகியல், நன்மை—தீமைக் கலப்படமாகவே விளங்குகிறது. அதற்கு முதற்காரணம் மனிதன் வாழ்வித்து வாழவும், மகிழ்வித்து மகிழவும் விரும்புவதில்லை. அவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையுணர்வே பூதாகாரமாக வளர்ந்திருக் கிறது. ஒரு மனிதனுடைய 'தன்னலம்' பெரும் பகுதி மற்றவர்க்குத் தீமையாகவே இருக்கும். 'பிறர் நலம்' பெரும்பகுதி நன்மையாகவே இருக்கும். தன்னலத்தில் பொதுநலம்-பிறர் நலம் உள்ளடங்குவதில்லை. ஆனுல் பொது நலத்தில் தன்னலம் நிச்சயமாக உள்ளடங்கி

யது. கழனியில் கிடக்கும் தண்ணீர் கழனியையும் தொடர்ந்து காப்பாற்ருது; கண்மாயையும் காப்பாற்ருது. ஆனல், கண்மாயின் தண்ணீர் கழனியைக் காப்பாற்றும். கண்மாய், பொது நலம், கழனி, தன்னலம், கண்மாயின் வாயிலாகக் கழனிக்குத் தண்ணீர் பாய்ச்சுதலே வாழ்வியல் முறை. கழனியின் மூலம் கண்மாய்க்குத் தண்ணீர் தேக்க முடியாது.

ஆதலால், உயர்ந்த நன்மை விளைவிக்கக் கூடிய சொற்களே வாய்மை. சிந்தனையே வாய்மை, செயலே வாய்மை. இத்தகைய வாய்மையில் மனமும், வாயும் தோய்ந்து பழக வேண்டும். யாருடைய மனத்திற்கும் வாய்க்கும் பொய் கூச்சப்படும் பொருளாக இருக்கிறதோ, அவர்களே வாழ்வோர் வாழ்விப்போர். மனமும் வாயும் கூச்சப்படாமல் பொய்யைச் சொல்லுதலைத் திருஞானசம்பந்தர் கண்டிக்கின்ருர். அவர்தம் பாடல்.

மாசூர் வடிவின்னுர் மண்டையுணல் கொள்வார்
கூசா துரைக்குஞ்சொற் கொள்கை குணமல்ல
வாசார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஈசா வென்பார் கட் கில்லை யிடர்தானே.

முதல் திருமுறை பதிகம் 83 பா. 10

அன்பர்கள் கவனிக்க

சென்ற திங்களில் "திருக்கோயில்" இதழில் அறிவிக்கப்பட்ட "**திருமுறைக் கருத்தரங்கம்**" வருகிற மே மாதம் 12, 13, 14-தேதிகளில் **திருவிடைமருதூர்த்** திருக்கோயிலில் நடைபெறும்.

மேலும் ஓர் அறிவிப்பு: சென்ற கருத்தரங்கின்போது அறிஞர்கள் நிகழ்த்திய ஆய்வுரைகளைத் தொகுத்து, அச்சிட்டு 12—5—72 அன்று வெளியிடவும், அன்பர்களுக்குப் பிரதி ஒன்று (ரூபா 3-க்கு மேற்படாத) அடக்க விலையில் வழங்கவும்; ஏற்பாடாகியுள்ளது. பிரதிகள் வேண்டுவோர் 20—4—72-க்குள், பின்கண்ட முகவரிக்கு எழுதித் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ள வேணும்.

மேலாளர்,
ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவத்தானம்,
திருவிடைமருதூர்,
(தஞ்சை மாவட்டம்)

திருநாவுக்கரசர் தில்லைக்காட்சி

தவத்திரு. சுந்தர சுவாமிகள்,
கௌமார மடாலயம், கோவை-6.

சைவ சமய ஆசிரியர்களாகிய நால்வர் பெருமக்கள், திருத்தில்லையாகிய சிதம்பரத்துக்குச்சென்று வழிபடும்போதும், பாடியருளும் போதும் தம்மை மறந்த ஒரு பேரின்பநிலை எய்தியமை, வரலாற்றாலும், அவர்கள் பாடியருளிய பாடல்களாலும் உணர்கிறோம். 7-ம் நூற்றாண்டில் திருவாமூரில் அவதரித்துச் சைவநெறி பாலித்தருளிய திருநாவுக்கரசு நாயனார், திருத்தில்லையில், அம்பலவாணன் அடியிணை போற்றிய திறத்தினைச் சிறிது பார்ப்போம்.

மருள்நீக்கியார், சமணசமயம் சார்ந்து தருமசேனராகிப் பின், சிவபெருமான் அருளும் பெருஞ் சூலையினால் ஆட்கொள்ளப்பெற்றுத் திருவதிகையில் திகழும் காலத்தில் மன்னன் மகேந்திரவர்ம பல்லவன், ஆணைவழி அமைச்சர்கள் அழைத்தமைக்காகச் சென்றபொழுது, சமணர்கள் சொற்படி, மன்னன் நீற்றறையிலிடச் சொன்னான். அவ்வாறே திருநாவுக்கரசரைப்பெருந்தழல் வெம்மை நீற்றறையினுள்ளிருத்தி எளிதில் திறக்க இயலாதபடி இரும்புத் தாளினை இட்டுக் காவல் அமைத்தனர்.

ஆண்ட அரசுகளாகிய நாயனார் நீற்றறையினுள் அணைந்தபொழுது, அம்பலத்துத் தாண்டவம் முன்புரிந்தருளும் தாள் நிழலைக்கொண்டு, ''ஈண்டு வருந்துயர் உளவோ ஈசனடியார்க்கு'' என்று முதல்வனையே தொழுதிருந்தார் என்று, சேக்கிழார் பெருமான் கூறுகின்றார்.

நீற்றறையானது ஐம்பொறிகட்கும் கேடு பயப்பது, வெய்ய ஓசை காதினையும், வெய்ய ஒளி கண்ணினையும், நச்சுக்காற்று மூக்கினையும், சுண்ணாம்புச்சுவை நாவினையும், வெப்பம் மெய்யினையும், ஊறுசெய்து உடலுக்குக் கேடு விளைத்து உயிர் போக்கும்.

நீற்றறை, திருநாவுக்கரசர் பெருமானுக்குத் துன்பம் தராததோடு, இன்பமாகவும் மாறியது எதனால் என்றால், அம்பலத்துத் தாண்டவம் முன்புரிந்தருளும் எந்தை இணையடி நீழலைத் தவிர, வேறொன்றும், அறியாத அவருக்கு, நீற்றறை திருவடி நீழலாகவே இன்பந் தந்தது. காதுக்கு மாசில் வீணையாக, கண்ணுக்கு மாலை மதியமாக, மூக்குக்கு வீசு தென்றலாக, உடம்புக்கு மிக்க இளவேனிலாக, நாக்குக்கு மூசுவண்டறை பொய்கையாக, அமைந்தது. ''வெய்ய நீற்றறை ...... திருவடி நீழல் அருளாகிக் குளிர்ந்தது'' என்கிறார், சேக்கிழார்பெருமான். நீற்றறையில், ''ஆனந்த வெள்ளத்தினிடை மூழ்கி அம்பலவர், தேனுந்து மலர்ப்பதத்த முதுண்டு தெளிவெய்தி'', என்றும் குறிப்பிடுகின்றார் சேக்கிழார் பெருமான். நீற்றறையிலேயே, திருநாவுக்கரசர் அம்பலவர் திருவடியை மனத்தகத்தில், கண்டு அனுபவித்துக் கொண்டிருந்தார்.

பின்பு சமணர்கள் செய்த, பலவகையான சூழ்ச்சியை, அம்பலவாணர் அருளால் வெற்றி கண்டு, திருப்பாதிரிப்புலியூரை வழிபட்டுத் திருவதிகை சென்றார். திருவதிகைப் பதி மருங்குள்ள தலங்களைப் பரவி வழிபட்டுச் செல்லும் பொழுது, நீற்றறையில் மனத்தகத்தில் கண்டு அனுபவித்த, அம்பலவனுடைய திருவடியைத் தூலக்கண்களாலும் கண்டு வணங்க வேண்டும் என்று எண்ணுகிறார். ஊனடைந்த உடம்பின் பிறவி, தானடைந்த உறுதியைச்சார, தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள், மாநடஞ் செய்தானைக் காண எண்ணினார்.

ஆனாத சீர்த்தில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
வானாறு புடைபரக்கும்
மலர்ச்சடையார் அடிவணங்கி
ஊனாலும் உயிராலும்
உள்ளபயன் கொளநினைந்து
தேனாறும் மலர்ச்சோலைத்
திருப்புலியூர் மருங்கணைந்தார்

என்று சேக்கிழார்சுவாமிகள் குறிப்பிடுகிறார். மருதத் தண்பணை வழி வரும்போது மூங்கில் போல் செறிந்து, உயர்ந்து வளர்ந்த கரும்புகளில் கணுக்கள் வெடித்து முத்துச் சொரிந்த காட்சி, நாவரசர் வடிவைக் கண்டு இன்பக் கண்ணீர் பொழிதல் போன்றிருந்தது என்பார்

சேக்கிழார் பெருமான். நந்தவனம் கண்டு பணி கின்றார். நாயனர் வடிவைக் கண்டு, கிளியும் பூவையும் சிவமொழி கூறுகின்றன. நெஞ்சில் பெருகிய மகிழ்வும், காதலும் நிறைய அன்பி ஞல் உரைதடுமாறத் திருத்தில்லை எல்லையில் மேற்குத் திருவாயில் அணைந்து வணங்கிச் சிவமே நிலவிய, திருவீதியைப் பணிந்து, ஏழ் நிலைக் கோபுரத்தை அடைந்து மெய்யுற வணங்கித் திருமாளிகை வலம்வந்து, கனக மன்றில் பொது நடனங் கண்ணுற்ருர் திருநாவுக் கரசர். ஆடுங்கழல் புரியும் அமுதத் திருநடம் தொழுது, ஆர்வமிகுதியினுல் வேருென்றின் தொடர்ச்சியும், முயற்சியும், இன்றிக் கை கண் கரணம் மெய் ஆகிய கருவிகள், இன்பப் பெருக் கால் தாமே செயல்பெற்றன.

கையுந் தலைமிசை பொலியஞ்சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங் களுமுடன்
உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யுந் தலமிசை விழுமுன் பெழுதரும்
மின்ருழ் சடையொடு நின்ருடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடும்அவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்ருல்

—பெரியபுராணம்

இவ்வாறு பலமுறையும் தொழலும், எழலும் செய்யும் திருநாவுக்கரசர் பெருமானை, மன்ருடும் அத்தன் திருவருள் பொழிகின்ற கருணையினுல் "என்று வந்தாய்" என்று இன்முகத்துடன் ஏற்றுக்கொண்ட குறிப்பைக் காட்டியருளினர் இத்தகைய காட்சியை,

"ஒன்றியிருந்து நினைமின்கள்
உந்தமக் கூனமில்லை,
கன்றிய காலனைக் காலாற்
கடிந்தான் அடியவர்க்காச்,
சென்று தொழுமின்கள் தில்லையுட்
சிற்றம்பலத்து நட்டம்
"என்றுவந்தாய்" என்னும் எம்பெருமான்
தன் திருக்குறிப்பே"

கோயில் திருவிருத்தம் இரண்டாம் பாடலாகிய இந்தப் பாடலால், கான்கின்ருேம்.

உட்கரணம். புறக்கரணங்களை ஒருமுகப் படுத்தி அதில் பிறழாமல், அழுந்தி அறிந்தால் (தியானித்தால்) நீங்களும் அந்தக் காட்சியை "என்று வந்தாய்" என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பைக் கொவ்வைச் செவ்வாயின் குமிண் சிரிப்பால் உணரலாம்; என்று தாம் கண்ட அனுபவத்தை இந்தத் திருவிருத்தத் தால் உபதேசித்தருளுகின்ருர். அம்பலவாணன் அருட் கூத்தியற்றும் அழகில் தோய்ந்து அனு பவித்த காட்சியை. நான்காவது திருவிருத்த மாகிய "குனித்த புருவமும் கொவ்வைச் செவ் வாயில்" என்னும் பாடலால் தெரிவிக்கின்ருர்.

பின்னும் "பத்தனுய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி" என்றும், திருநேரிசை பாடித்திரும்பும்போது, திருமுன்றிலும், தேர்வீதி யுள்ளும், கூடிய பணிகள் செய்து, கும்பிடுந் தொழிலராகிப் பாடிய புனித வாக்குப் பணி களும், செய்கின்ருர். தாம் பெற்ற அம்பல வாணரின் அருட் காட்சியால், மகிழ்ச்சி பொங்கி "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்று பாடிப் பரவுகின்ருர். தில்லைச் சிற்றம்பலம் அன்னமும், பொன்னும், இன்னும் எதுவும், பாலிக்கும், இப்பிறவியில், வேறு எதுவேண்டும்? இதனைச் சென்றடைமின், உய்மின் இதனை அடைந்து அடிமை பூண்டவரே "அல்லல் என் செயும் அருவினை என்செயும்", தொல்லை வல் வினை தான் என்செய்யும்? சிறுகாலன் தில்லையை அணுகிய சிட்டர்பால் அணுகான். சிற்றம் பலவனர் அடியாரை அறிவர் என்று அனுபவமாகப் பாடி அருளுகிருர். திருவேட் கனம் திருக்கழிப்பாலை சென்று வழிபாடு செய்து திரும்பும் வழியில் அம்பலக் கூத்தனைத் தினைத் தனையாம் பொழுதும் மறக்க மாட்டேன் என்பதை.

"பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே"

என்று பாடி அருளுகிருர். நாளும் அம்பலவனைப்

பேசவேண்டும். அப்படி அவனைப் பேசாத நாளெல்லாம், பிறவாத நாளே ஆம், என்று அருளுகின்றார். "அரி யானை அந்தணர்தம் சிந்தையானை" என்னும் திருத்தாண்டகத்தில்.

இதுவரை குறிப்பிட்டுள்ளதிலிருந்து திருநாவுக்கரசு நாயனார், தில்லைப்பெருமானை அகத்தும் புறத்தும். எவ்வாறு கண்டார் என்பதை உணருகிறோம். அவன் ஆடலை நினைப்பதே நியமம் என்பது நமது சமயத்தலைவர்கள் நமக்கு உணர்த்தும் உபதேசமாகும்.

மதிப்புரை

(2) **தேவி தோத்திரங்கள்:** தேவாரப் பதிகங்களிலும், திருவிசைப்பாப் பாடல்களிலும் சிறப்பிக்கப்பெற்ற, 282 தலங்களிலுள்ள அம்பிகையின் மீது இயற்றிய, சிறந்த இனிய பல தோத்திரங்களைக் கொண்டது இந்நூல். இதன்கண் மொத்தம் 401 பாடல்கள் உள்ளன. இவற்றைத் திருச்சிராப் பள்ளி, உறையூரில் வாழும் பசிப்பிணி மருத்துவர், தேவாரப் புரவலர், அருட்கவி, மௌனகுரு வழிபாட்டுக் கழகத்தின் காப்பாளர் **திரு. மு. ஆ. அருணாசல முதலியார்** அவர்கள் இயற்றியுள்ளார்கள். இவர்கள் **திருப்பைஞ்ஞீலி** ஆலயத்தில் மின் விளக்குகளும் நந்தவனமும் தென்னஞ் சோலையும் திருக்குளமும் அமைத்துத் திருப்பணி புரிந்தவர்கள். அங்கே அப்பருக்குச் "சோறு அளித்த விநாயகர்" கோயில் எடுப்பித்தவர். மற்றும் **அவிநாசி, பவானி, வயலூர், திருப்பாச்சி லாச்சிராமம், தஞ்சை இராசராசேச்சரம்** முதலிய தலங்களில், அறப்பணிகள் பற்பல புரிந்து வருபவர். தேவாரம் பாடும் ஓதுவார் பெருமக்களுக்கு அவ்வப்போது சோறும் கூறையும் பொருளும் வழங்கி மகிழ்பவர். நாள்தோறும் பற்பல சிவத்தலங்களுக்கு மலர்த் தொண்டும், நெய்த் தீபத் தொண்டும் புரிந்து வரும் புண்ணிய சீலர்.

இப்பெருந்தகையார் பாடியுள்ள **"தேவி தோத்திரங்கள்"** என்னும் இந்நூல், தமிழ்மணமும் சிவமணமும் பக்திமணமும் கவிதைமணமும், ஒருங்கே அமைந்து திகழ்கின்றது. தேவாரத் தலங்களைப் பற்றிய குறிப்புக்கள் பலவும் சேர்க்கப்பெற்றுள்ளன. வெளியிட்டருளியவர் **திருமுருக கிருபானந்தவாரியார்.** பதிப்பித்தவர்: ஞானமணி வித்துவான் **திரு. வை. இரத்தினசபாபதி,** M.A., B.O.L., அவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறையின் துணைப்பேராசிரியர் **திரு. க. வெள்ளைவாரணர்** அவர்கள் சாற்றுக்கவியும், திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர் திருவார் திரு. காசிவாசி **அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் ஆசியுரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர். பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும் **சிறந்த நல்ல தெய்விக நூல். கிடைக்குமிடம்:** திரு. மு. **ஆ. அருணாசலமுதலியார்,** 30 **வண்டிக்காரத்தெரு, உறையூர்,** **திருச்சி-3. விலை குறிக்கப்பெறவில்லை.**

(வெண்பா)

அன்புருவாம் சான்றோர் அருணா சலனார்தாம்,
துன்பொழிக்கும் நற்றேவி தோத்திரங்கள்,—நன்றுமிகச்
செய்யுள் வடிவில் சிறப்போங்கச் செய்தளித்தார்,
வையமெலாம் போற்ற மகிழ்ந்து.

—ஆசிரியர்.

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிய

திருமாலை

(மூலமும் உரையும் ; முற்றொடர்ச்சி)

குளித்துமூன் றனலை ஓம்பும்
குறிகொள்அந் தணமை தன்னை
ஒளித்திட்டேன்; என்கண் இல்லை;
நின்கணும் பத்தன் அல்லேன்;
களிப்பதென் கொண்டு? நம்பீ!
கடல்வண்ணா! கதறு கின்றேன்;
அளித்தெனக்கு அருள்செய் கண்டாய்
அரங்கமா நகரு ளானே!

(பொழிப்புரை) : அரங்கமா நகருளானே! வைகறையில் நீராடி, ஆகவனீயம். தட்சிணாகினி, காருக பத்தியம் என்னும் மூன்று நெருப்பையும் வளர்ப்பதற்குரிய தகுதியைத் தருவதும் குறிக்கொளத்தக்கதும் ஆகிய அந்தணத் தன்மையை இழந்துவிட்டேன். மெய்யுணர்வும் என்பால் இல்லை, நின்னிடத்தில் யான் பக்தியுடையவனுமல்லன். கடல் வண்ணனே! புருடோத்தமனே! நான் எதனைக் கொண்டு களிப்பு அடைவேன். துன்பத்திற்குப் போக்குவீடாக வாய்விட்டுக் கதறிப் புலம்புகின்றேன். என்பால் இரக்கம் கொண்டு அருள் புரிவாயாக!

(குறிப்புரை) ; அந்தண்மை என்னும் சிறப்பைப் பெற்றிருந்தும், அதனைத் தாம் தம் இழி செயல்களால் இழந்துவிட்டதாக ஆழ்வார் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார். இறைவனின் அருளைப் பெறுவதற்குக் கருமயோகம் ஞான யோகம் பக்தியோகம் என்னும் மூன்றுவகை நெறிகள் நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றையும் தாம் கடைப்பிடித்தொழுகும் தகுதி பெறவில்லை என்றும், ஆழ்வார் தம்மைத் தாமே பழித்து இகழ்ந்து கொள்ளுகின்றார். 'ஒளித்திட்டேன்' என்பதனால் கருமயோகமும்; 'என்கண் இல்லை' என்பதனால் ஞானயோகமும்; 'நின்கணும் பக்தன் அல்லேன்' என்பதனால் பக்தியோகமும் தம்பால்இல்லாமையைக் குறிப்பிட்டு வருந்தியபடி. (25)

போதெல்லாம் போது கொண்டுன்
பொன்னடி புனைய மாட்டேன்;
தீதிலா மொழிகள் கொண்டுன்
திருக்குணம் செப்ப மாட்டேன்;
காதலால் நெஞ்சம் அன்பு
கலந்திலேன்; அதுதன் னாலே
ஏதிலேன் அரங்கர்க்கு எல்லே
என்செய்வான் தோன்றி னேனே?

(பொழிப்புரை): எல்லாக் காலங்களிலும் மலர்களைக்கொண்டு, உன் பொன் போன்ற உன்னுடைய அழகிய திருவடிகளில் அணிவிக்க மாட்டேன். குற்றமற்ற சொற்களினால் உன்னுடைய சிறந்த குணங்களைப் புகழ்ந்து பேச மாட்டேன். உண்மையான பக்தியால் உண்டாகிய அன்பு மேலீட்டால் உன்பால் என்நெஞ்சம் ஒன்றிக் கலந்து நிற்கமாட்டேன். ஆதலால் அழகிய மணவாளராகிய தங்களுக்கு யான் யாதொரு தொடர்பும் உடையவனல்லேன், ஐயோ! இத்தகைய நான் எதற்காக இவ்வுலகிற் பிறந்தேனோ தெரியவில்லை.

(குறிப்புரை) : இறைவனை மலர்கள் கொண்டு அருச்சித்தல், குற்றமற்ற சொற்களால் இறைவனின் புகழைப் பேசுதல், நெஞ்சில் அன்புடன் இறைவனை எப்போதும் இடையருது நினைந்து தியானித்தல் முதலிய செயல்களை யான் செய்திலேன்; ஆதலின் என்னுடைய பிறவி வீணேயாகும் என்னும் கருத்தில், 'என்செய்வான் தோன்றினேன்'என வினவி மனம் நொந்துகொள்ளுகின்ருர். இவ்வாறே திருநாவுக்கரசரும் 'என்செய்வான் தோன்றினேன் ஏழையேனே' எனத் தம் திருத் தாண்டகத்தில் அருளிச் செய்திருத்தல் அறிந்து இன்புறற்பாலது. (26)

குரங்குகள் மலையை நூக்கக்
குளித்துத் தாம் புரண்டிட் டோடித்
தரங்கநீர் அடைக்க லுற்ற
சலமிலா அணிலும் போலேன்;
மரங்கள்போல் வலிய நெஞ்ச
வஞ்சனேன் நெஞ்சு தன்னுல்
அரங்கனுர்க்கு ஆட்செய் யாதே
அளியத்தேன் அயர்க்கின் றேனே.

(பொழிப்புரை) : வானர வீரர்கள் மலைகளைத் தள்ளிக்கொண்டு வர, நீரிலே முழுகிக் கரையிலுள்ள உலர்ந்த மணல்களிலே புரண்டு ஓடிச் சென்று அலைகள் மிக்க கடலைத் தூர்ப்பதற்கு முனைந்த கள்ளம் இல்லாத அணில் என்னும் சிற்றுயிர்களையும், யான் ஒத்திருக்கின்றேன் இல்லை. மரங்களைப்போல உணர்ச்சியற்ற கடினமான நெஞ்சை உடையவனுய், வஞ்சனையே தொழிலாகக்கொண்டு, பெறுதற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நான், திருவரங்க நாதர்க்கு வெறும் நினைவளவினுலும்கூட அடிமை செய்ய முயலாமல் வீணே பாழ்பட்டுப் போகின்றேன்.

(குறிப்புரை) : வானர வீரர்கள் இராமபிரானின் திருவாணைப்படி சேதுபந்தனம் அமைக்கும் அரிய பெரிய முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது, அருகிருந்த அணில்களாகிய சிற்றுயிர்களும் இராமபிரானுக்குத் தம்மால் இயன்ற சிறிய அளவு தொண்டேனும் செய்வதற்கு விரும்பி, தம் உடம்பை நீரில் நனைத்துக்கொண்டு மணலில் புரண்டு ஓடிச்சென்று, அம்மணல் நுண் துகள்களைக் கடல்நீரின் ஓரத்தில் சிதறி மகிழ்ந்தன என்பது, ஒரு பழைய கதை. இக்கதையினை வான்மீகரோ கம்பரோ பிறரோ தம் நூல்களிற் பாடிற்றிலராயினும், இதனை ஆழ்வார். இப்பாடலில் வியந்து புகழ்ந்து குறிப்பிட்டருளியிருப்பதனுல், இது மிகப் பழங்காலத்தே மக்களிடையே பேச்சு வழக்கில் நிலவி வந்த சுவைமிக்க கதை என்பது புலனுகின்றது. சுமத்திரா.ஜாவா முதலிய அயல்நாடுகளில் காணப்படும் இராமாயண வரலாற்றுச் சிற்பங்களில் இவ்வணிற் கதை அமைந்த சிற்பங்களும் காணப்படுகின்றன என்று பேரறிஞர் திரு காளிதாசநாக் என்னும் ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டிருத்தல் இங்கு நாம் உணர்ந்து கொள்ளத்தக்கது. (27)

உம்பரால் அறிய லாகா
ஒளியுளார் ஆனைக் காகிச்
செம்புலால் உண்டு வாழும்
முதலைமேற் சீறி வந்தார்;
நம்பர மாய துண்டோ?
நாய்களோம் சிறுமை ஓரா
எம்பிராற்கு ஆட்செய் யாதே
என்செய்வான் தோன்றி னேனே?

(பொழிப்புரை) : தேவர்களாலும் அளந்து அறிந்துகொள்ளமுடியாத பெரும்புகழ் வாய்ந்த திருமால், கஜேந்திரன் என்னும் யானைக்காகக் குருதி கலந்த புலாலை உண்டு வாழ்கின்ற முதலையின் மேல் சீற்றங் கொண்டு, பரமபதத்தை விட்டு மடுவின் கரைக்கு ஓடிவந்தருளினுர். இங்ஙனம் அடியார்கள்பால் பெருங் கருணைகொண்டு காப்பாற்றுகின்றவராகிய பெருமான் இருக்கவும், நம்முடைய பாதுகாப்பில் நமக்கு ஏதேனும் சுமை உண்டோ? நாய்களைப் போன்ற இழிவுடையவர்களாகிய நம்முடைய சிறுமையினை ஆராய்ந்து பார்க்காத எம்பெருமானுக்கு அன்புடன் அடிமை செய்யாமல் யான் எதன்பொருட்டுப் பிறந்தேன்?

(குறிப்புரை) : தம்முடைய அடியவர்களின் குற்றங்குறைகளைக் கருதாமலும், அவர்களைக் காப்பாற்றுதலில் கண்ணும் கருத்துமாகவும் இருப்பவர் திருமால், அத்தகைய பெரும் கருணையுடைய அவரை வழிபட்டு அடிமை செய்து உய்யாமல், யான் என் வாழ்நாளை வீணுகக் கழிக்கின்றேனே என்று ஆழ்வார் இரங்குகின்ருர். ஒளி-பரமபதம் எனினுமாம். 'நாய்களோம்' என்றது. அவற்றின் நன்றியுணர்வும் நமக்கில்லையே என்று குறித்தற்கு. பரம்-சுமை. (28)

ஊரிலேன்; காணி யில்லை;
உறவு மற்று ஒருவர் இல்லை;
பாரில்நின் பாத மூலம்
பற்றிலேன்; பரம மூர்த்தி!
கார் ஒளி வண்ணனே! என்
கண்ணனே கதறு கின்றேன்!
ஆருளர் களைகண் அம்மா?
அரங்கமா நகரு ளானே!



பழநி திரு தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் தமிழக முதல்வர் மாண்புமிகு தமிழவேள் டாக்டர் கலைஞர் திரு. மு கருணாநிதி D. Litt அவர்களும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு கண்ணப்பர் அவர்களும், ஆலய மரியாதைகளுடன் வரவேற்கப் பெறுதல் (6—3—72)

திருப்பணித் தொடக்க விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்றும் பிற அமைச்சர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தல். (6—3—72)



திருப்பணித் திட்டத்தின்கீழ் உருவாக இருக்கும் பழநிமலைக் கோவிலின் புதிய பொலிவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பார்வையிடுதல் (6—3—72)



பழநியில் செவிடர்பள்ளி, & மருத்துவமனைத் தொடக்க விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள் உரை நிகழ்த்துதல்

(பொழிப்புரை) : இவ்வுலகத்தில் தேவரீர் உவந்து இருக்கும் திருப்பதிகளில் பிறக்கப் பெற்றிலேன்; திருப்பல்லாண்டு பாடுகை முதலிய தொண்டுகளுக்காக விடப்பட்ட காணி ஆட்சியும் எனக்கு இல்லை; உறவினர்களும் இல்லை. மேலும் எனக்கு நண்பர் முதலிய துணையாக ஒருவரும் இல்லை. தேவரீருடைய திருவடிகளையும், யான் அடைக்கலம் புகுந்து பற்றிக் கொண்டேன் இல்லை. எல்லோர்க்கும் மேலான பெருமானே! மேகத்தைப் போன்ற ஒளியும் நிறமும் மிக்கவனே! கண்ணபிரானே! வேறு துணையின்றி உன்னையே அழைத்து யான் கதறி அழுகின்றேன். தாய்போன்ற தண்ணளி உடையவனே! திருவரங்கநகரில் எழுந்தருளி யிருப்பவனே! உன்னைத் தவிர எனக்குத் துணையாவார் வேறு யார் இருக்கின்றனர்?

(குறிப்புரை) : இறைவன் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்களில் பிறத்தல் அல்லது வசித்தல், இறையருட் பேற்றுக்கு ஏதுவாகும் என்னும் குறிப்பை,'ஊரிலேன்' என்னும் தொடர் உணர்த்துகின்றது. திருப்பல்லாண்டு பாடுதல் முதலிய தொண்டுகளுக்காகப் பண்டைக் காலத்தில் மானியம் எனப்படும் நிலங்கள் விடப்படுவதுண்டு. அதுவும் தமக்கு வாய்த்திலது என்பர் 'காணி இல்லை' என்றார், பசுவின் பாலைப் பெறுதற்குக் கன்று துணையாதல் போல இறைவனின் அருளை நாம் பெறுவதற்கு நமக்குத் துணையாவார் அடியவர்கள். அத்தகைய அடியவர்கள்பால் பழகும் பேறும் பண்பும் தமக்கு இல்லை என்பார் 'உறவுமற்று ஒருவரில்லை' என்றார். இவைகளெல்லாம் இல்லையாயினும்; இறைவனின் திருவடிகளையே புகலிடமாகப் பற்றிக் கொள்ளும் மன உறுதியேனும் இருத்தல் வேண்டும். அதுவும் தமக்கு அமைந்திலது என்பார் 'பாரில்நின் பாதமூலம் பற்றிலேன்' என்றார். உயிர்களாகிய நாம் பெறும் எல்லாவித நன்மைகளுக்கும் மூலகாரணமாகத் திகழ்வது இறைவனின் திருவடிகளே யாதலின், அவற்றைப் 'பாதமூலம்' என்றுப் போற்றிப் புகழ்ந்தார். ஞாயிற்றின் வெப்பத்தால் வாடிய பயிர்களை மேகமானது மழை பொழிந்து காப்பாற்றுகின்றது; அதுபோல உலக வாழ்வின் துயரங்களால் வெதும்பி வருந்தும் தமக்கு அருள் புரிந்து காப்பாற்றுதல் நின்கடனே என்பார். 'காரொளி வண்ணனே கதறுகின்றேன்' என்றார். யான் படும் துன்பங்களை நின் கண்களாற் கண்டு இரங்கிக் காத்தருள்க என்பார் 'கண்ணனே' என்றார். களைகண் - துன்பம் போக்கிக் காப்பாற்றும்துணை. உன்னையல்லால் வேறு துணையில்லை என்பார் 'யாருளர்' என வினவி அரற்றுகின்றார். (29)

மதிப்புரை

ஈரோடு வாசவி கல்லூரித் தமிழ் விரிவுரையாளரும், முன்பு சில ஆண்டுகள் பழநியாண்டவர் கல்லூயில் தமிழ்ப் பணிபுரிந்து வந்தவரும், அன்பும் பண்பும் அடக்கமும் ஒழுக்கமும் இறையருளுணர்வும் நிறைபெரும் புலமையும் ஒருங்கே வாய்ந்து திகழ்பவரும் ஆகிய கெழுதகை நண்பர் திரு. மு. சதாசிவம் M.A., அவர்கள், விநாயகர் அருட் பெருமை, விநாயகர் அருட்செல்வம், விநாயகரின் ஆயிரம் திருநாமங்கள், திருமகள் அருட் செல்வம், கலைமகள் அருட்செல்வம், இராமன் அருட்செல்வம், கம்பர் காட்டும் பெண்ணோவியம் என்னும் சிறந்த தெய்வத் தொடர்புடைய, பல நூல்களைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றார்கள். அவருடைய அரிய உழைப்பும், பக்தியும், புலமையும், பெரிதும் போற்றத் தக்கவை. இந்நூல்களில், அந்தந்தத் தெய்வங்களுக்குரிய சிறப்புப் பெயர்களாகப், பல்வேறு பிரபந்தங்கள் இலக்கியங்கள் புராணங்கள் முதலியவற்றில் வந்திருக்கும் அரிய இனிய அழகிய தொடர்கள், அகர வரிசையில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அப் பெயர்த் தொடர்கள் வந்துள்ள நூல்களின் பெயர்களும், கவிதை எண்களும், ஆங்காங்கே குறிக்கப்பட்டிருக்கின்றன. இடை இடையே அத்தொடர்களுக்கு உரிய பொருள்களும் தரப்பெற்றிருக்கின்றன. ஆசிரியர் பெரிதும் உழைத்து, இந்தத் தெய்விக சம்பந்தமான பெயர்களையும் தொடர்களையும் தொகுத்து வெளியிட்டிருக்கின்றார். இவைகள் அரிய உழைப்பும், நல்ல ஆராய்ச்சித் திறனும் அமைந்தவை. காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள்,சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாட்சிமிகு திரு. பா. ச. கைலாசம், காரைக்குடி திரு. சா கணேசன், கம்பராமன் என்னும் திரு. எஸ். கே. இராமராசன், திருமதி சௌந்திரா கைலாசம் அம்மையார் ஆகிய பெருமக்கள் பலர், இந்நூல்களுக்கு ஆசியுரையும் அணிந்துரையும் வழங்கியுள்ளனர். மிகவும் சிறந்த தெய்விகத் தொடர்புடைய இத்தொகுப்பு நூல்கள், பக்தர்களுக்குப் பெரிதும் பயன்படும். கிடைக்கும் இடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.

சைவத் தமிழ்நலம்சால் நண்பர் சதாசிவம்தான்,
தெய்வத் திருப்பெயராம் சீர்த்தொடர்கள்;—மெய்வைத்த
அன்பார்வம் கொண்டரிதின் ஆய்ந்து தொகுத்தளித்தார்;
மன்பெரிதும் போற்றத் தகும். —ஆசிரியர்.

இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம்

தமிழ்நாடு அரசின்

அறநிலைய அமைச்சர் மாண்புமிகு

திரு. மு. கண்ணப்பர்

அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்

நிகழ்த்திய

மானியக் கோரிக்கைச் சிறப்புரை

27—3—72

இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக)த் துறை 10,865 அறநிலையங்களைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுள்ளது. இவைகளின் வருவாய் ரூ. 5,55,78,000 என்று மதிப்பிடப்படுகிறது. இந்த அறநிலையங்களில் 157 மடங்களும், 9,876 கோயில்களும், 832 குறிப்பிட்ட அறக்கட்டளைகளும் அடங்கியுள்ளன. கோயில் நிலங்களுக்காக நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் பலனாக இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் பெற்ற ஒரு மடமும் 824 கோயில்களும் இதில் அடங்கும். மேலே சொல்லப்பட்ட சமய நிறுவனங்களின் நிர்வாகம் வட்டாரக்குழு முறை நீக்கப்பட்டபோது, 1968-ஆம் ஆண்டுத் திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தினாலும் முறைப்படுத்தப்பட்டது. இத்துறையை நடத்தி வருவதற்கான வருவாய் மேற்படி சட்டத்தின் 92-வது பிரிவின் கீழ்க்கொடுக்கத்தக்க சகாயத் தொகைகளிலிருந்தும், தணிக்கைக் கட்டணங்களிலிருந்தும் கிடைக்கின்றது இப்பிரிவின்படி ரூ. 200-க்கு குறையாத வருவாய் உள்ள ஒவ்வொரு அறநிலையமும் குறிப்பிட்ட சகாயத் தொகையினை இத்துறைக்குச் செலுத்த வேண்டும். ரூ. 10,000-க்கு மேற்பட்ட வருவாய் உள்ள 561 கோயில்களும், ரூ. 1,000 முதல் ரூ. 10,000 வரை வருவாய் உள்ள 4,680 கோயில்களும் ரூ. 1,000-க்கும் குறைவாக வருவாய் உள்ள 5,624 கோயில்களும் உள்ளன. ஆண்டுதோறும் கிடைக்கும் துறை வருவாய்

ரூ. 49 லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில் மேலே சொல்லப்பட்ட 825 புதிய அறநிலையங்கள் சேர்க்கப்பட்டதின் காரணமாக இந்தத் துறை பெறும் வருவாய் ரூ. 18.562 ஆக இந்த ஆண்டில் கூடுதலாகி உள்ளது. கோயில்களின் வருவாயைப் பெருக்க வும், நிதி தவருகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கவும் வேண்டி, கோயில்களின் நிர்வாகம் இந்து சமய அறக்கட்டளை (நிர்வாக)த் துறையின் முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.

2. சமய நிறுவனங்களின் வருமானம்:—

கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி சமய நிறு வனங்களின் வருமானம் 1381-ஆம் விளைச்சல் ஆண்டிலும் ஒழுங்காக உயர்ந்து வருவது நிகழ்ந்துள்ளது:

			ரூபாய்.
விளைச்சல் ஆண்டு	1377	..	3,98,52,754
	1378	...	4,99,25,142
	1379	...	4,87,51,314
	1380	...	5,51,65,419
	1381 (நிகழக்கூடியது).		5,55,78,000

3. செலவுகள்:—

1959-ஆம் ஆண்டின் இந்து சமய அற நிலையச் சட்டத்தின் நிர்வாகத்திற்கான செலவு கள் ஆரம்பத்தில் அரசு நிதியினின்றும் செல விடப்பட்டு, முடிவில் இந்து சமய அறநிலைய நிர்வாக நிதியிலிருந்து திரும்பப் பெறப்படு கின்றது. இதனைப் போலவே தணிக்கைக்கான செலவும் ஆரம்பத்தில் அரசு நிதியிலிருந்து செலவிடப்பட்டு முடிவில் திரும்பப் பெறப்படு கின்றது. இந்தச் சட்டத்தின்படி நிர்வாகம் மற்றும் தணிக்கைக்காக ஆன செலவுகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

நிர்வாகச் செலவு.	ரூபாய்.
1969—70	32,47,643.66
1970—71	39,40,636.24
1971—72 (நிகழக்கூடியது)	49,74,300.00
தணிக்கைச் செலவு,	
1969—70	9,64,631.59
1970—71	11,32,260.14
1971—72 (நிகழக்கூடியது)	13,76,500.00

கூடுதல் பதவிகள் ஏற்படுத்தப்பட்டதா லும், ஊதிய விகிதங்கள் மாற்றி அமைக்கப் பட்டதாலும். புதிய ஜீப்புகள் வாங்கப்பட்டதா லும், நிர்வாகத்திலும், ஊதிய மாற்றத்தினுல் தணிக்கையிலும் 1971—72-ல் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

4. பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்:—

பொதுமக்களுக்குக் கல்விக்காகத் தன்னு லான சிறப்பு முறையில் இந்தத் துறை பணி யாற்றி வருகின்றது. சமய நிறுவனங்களின் நிதிகளிலிருந்து கீழ்க்கண்ட கல்வி நிலையங்கள் பராமரிக்கப்படுகின்றன.

கல்லூரிகள்

1. திரு. பழனி ஆண்டவர் கலைக் கல்லூரி. பழனி.

2. திரு. பழனி ஆண்டவர் செந்தமிழ்ப் பெண்கள் கல்லூரி, பழனி.

3. திரு. பழனி ஆண்டவர் பெண்கள் கலைக் கல்லூரி, பழனி.

4. திரு. தேவி குமாரி பெண்கள் கல்லூரி குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி. (தேவாஸ்வ வாரியத்தினரால் நடத்தப்படுவது).

5. திரு. பராசக்தி பெண்கள் கல்லூரி, குற்ருலம்.

திருத்தணி திரு சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி திரு சுப்பிரமணியசுவாமி கலைக் கல்லூரிக்கு ரூ. 5 லட்சம் நன்கொடை யாகக் கொடுக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது.

இந்தியப் பண்பாட்டுக் கல்லூரிகள்

1. இந்தியப் பண்பாட்டுத் திரு. பழனி ஆண்டவர் கல்லூரி, பழனி.

2. திரு. பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி, மேலையூர், திருவெண்காடு அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.

மாணவர் மற்றும் பெண்டிர் உயர்நிலைப் பள்ளிகள்

1. இராமேசுவரம் தேவஸ்தானத்தினுல் இராமேசுவரத்தில் நடத்தப்பெறும் திரு பர்வத வர்த்தினி அம்பாள் உயர்நிலைப் பள்ளி.

2. திரு. திருமலைக் குமாரசாமி பெண்கள் உயர்நிலைப்பள்ளி, குற்ருலம், தென்காசி வட்டம் (திருநெல்வேலி மாவட்டம். பண்பொழி, திரு

திருமலை குமாரசுவாமி கோயிலினால் நடத்தப் படுவது)

3. திரு. காந்திமதி அம்பாள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை. (திருநெல்வேலி திரு சுவாமி நெல்லையப்பர் தேவஸ்தானத்தினால் நடத்தப்படுவது.)

4. திரு. மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி. (மதுரை திரு. மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானத்தினால் நடத்தப்பெறுவது.)

5. திரு சுவேதாரண்யேசுவரர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி. (தஞ்சாவூர் மாவட்டம். திருவெண்காடு திரு சுவேதாரண்யேசுவரர் கோயிலினால் நடத்தப்பெறுவது,)

6. திரு. கலியுக வரதராஜப் பெருமாள் தேவஸ்தானப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அரியலூர், திருச்சி மாவட்டம். (அரியலூர் வட்டம், கள்ளக் குறிச்சி, திரு. கலியுக வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தினரால் நடத்தப்பெறுவது.)

7. சாமளாபுரத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி (அய்யம்பாளையம், திரு வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலினால் நடத்தப் பெறுவது.)

8. பெண்கள் உயர்நிலைப் பள்ளி, கோவிலூர், தஞ்சாவூர் மாவட்டம், (கோவிலூர், திரு மந்திரபுரீசுவரர் கோயிலினால் நடத்தப் பெறுவது.)

மேற்சொன்ன நிலையங்களைத் தவிர, கீழே சொல்லப்பட்டுள்ள சமய நிறுவனம் 1971—72ல் ஆரம்பிக்கப்பெற்றுள்ளது:—

வேதவல்லியிலுள்ள மருதமலை திரு. சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர் வட்டம் மற்றும் மாவட்டம்.

5. தொல் பொருட் களஞ்சியம்:—

கோயில்களில் கலை மற்றும் சிற்பக்கலை காட்டும் தொல்பொருட் களஞ்சியங்களைக்கீழ்க் காணும் சமய நிலையங்கள் பேணி வருகின்றன,-

(1) திரு அரங்கநாதசுவாமி கோயில், திருவரங்கம்.

(2) திரு மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில், மதுரை.

(3) திரு ஜம்புகேசுவரர் கோயில், திருவானைக்கோவில், திருச்சி.

ஆயிரக்கால் மண்டபங்கள் உள்ள கோயில்கள் கலைக்கூடங்களைப் பராமரிக்க முடியும். இந்த முறையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

6. அனாதை இல்லங்கள் பராமரிப்பு:—

இந்த மாநிலத்தின் சமூகநலனுக்காகவும், இத்துறைதன் பங்கினைச் செலுத்தி வருகின்றது அனாதைகளுக்காக அனாதை இல்லங்களை, சமய நிறுவனங்களின் உபரி நிதியிலிருந்து பராமரித்து வருகின்றது. பல ஆண்டுகளாக இவைகள் நடத்தப்பட்டு வந்தாலும்கூட, அவைகளைப் பேணுவதில் அதிகக் கவனம் செலுத்தியும், கூடுதலான எண்ணிக்கையில் சிறுவர்களைச்சேர்ப்பித்தும் புத்துயிர் கொடுக்கப் பட்டுள்ளது. கீழே சொல்லப்பட்டுள்ள கோயில்கள் அனாதை இல்லங்களைப் பேணிவருகின்றன:—

1. திரு. சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணி நகர் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

2. திரு. நவநீதேசுவரர் கோயில். சிக்கல், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

3. திரு. வைத்தியநாதசுவாமி கோயில், வைத்தீஸ்வரன் கோயில், சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

4. திரு. சீநிவாசப்பெருமாள் கோயில், நாச்சியார் கோயில், கும்பகோணம் வட்டம்.

5. திரு. மீனாட்சி சுந்தரேசுவரர் தேவஸ்தானம், மதுரை.

6. திரு தண்டாயுதபாணிசுவாமி தேவஸ்தானம், பழனி.

7. திரு. நெல்லையப்பர் தேவஸ்தானம், திருநெல்வேலி.

8. திரு. சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் திருச்செந்தூர்.

1971—72-ஆம் ஆண்டில், கீழ்க்காணும் கோயில்களில் இரு புதிய அனாதை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.—

1. திரு. வாழைத்தோட்டத்து அய்யன் கோயில், அய்யன்பாளையம், பல்லடம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

2. திரு. திருமலைக்குமாரசாமி கோயில், பண்பொழி, தென்காசி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

அதிக எண்ணிக்கையில் அனாதை இல்லங்களை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7. குழந்தைகள் காப்பகம்:—

அறநிலையங்களின் உபரி நிதியிலிருந்து குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு அவற்றில் பள்ளிப் பருவத்திற்கு முற்பட்ட குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர். இவற்றில் இந்து சமய நெறிமுறைகளில் போதனை அளிக்கப்படுகின்றது.

குழந்தைகள் காப்பகங்கள் கீழே சொல்லப்பட்ட அறநிலையங்களால் நடத்தப்பட்டு வருகின்றன: —

1. திரு. வேதநாராயணப் பெருமாள் கோயில், திருநாராயணபுரம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

2. திரு. சுப்பிரமணியசுவாமி கோயில், குமார வயலூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3. திரு அரங்கநாதசுவாமி தேவஸ்தானம் காரமடை, அவிநாசி வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

4. திரு. மாரியம்மன் கோயில், இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.

8. ஊமை மற்றும் செவிடர்களுக்கான பள்ளிகள்:—

சமயபுரம், திரு மாரியம்மன் கோயில் நிதியிலிருந்து 1971-ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஒன்றும், பழனி திரு தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம் நிதியிலிருந்து 1972ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மற்றொன்றும் ஆக இரண்டு ஊமை-செவிடர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

9. சித்த வைத்திய மருத்துவ மனைகள் பராமரிப்பு:—

1970-ஆம் ஆண்டுவரை, 14 சித்த வைத்திய மருத்துவ மனைகளைப் பல திருக்கோயில்கள் தங்களது உபரி நிதியிலிருந்து நடத்தி வந்தன. வழிபாட்டுப் பயணிகள் உள்பட வழிபடும் பொதுமக்களின் உபயோகத்திற்காக அதிக மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் ஆரம்பித்து நடத்தி வருவதன் அவசியம் உணரப்பட்டது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர நடவடிக்கையின் காரணமாக 1971-ம் ஆண்டில் 24 புதிய சித்த வைத்திய மருத்துவ மனைகளை ஆரம்பிக்க அனுமதித்ததில் 5 சித்த வைத்திய மருத்துவ மனைகள் செயல்படத் துவங்கியுள்ளன. பொதுமக்களுக்குச் சமயநிறுவனங்கள் செய்யும் மகத்தான தொண்டாக இதனைப் பொதுமக்கள் பாராட்டுகின்றனர்.

10. வழிபாட்டுப் பயணிகளுக்கும் வழிபடுபவர்களுக்கும் வசதிகள்:—

வழிபாட்டுப் பயணிகள் மற்றும் வழிபடுபவர்களின் பயனுக்காக ஓய்வு விடுதிகளையும், வழிபாட்டுப் பயணிகள் விடுதிகளையும் கட்டும் ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று இருந்து வருகின்றது. இது குறித்துச் சீரான முன்னேற்றம் எய்தப்பட்டுள்ளதைப் பின்வரும் புள்ளிவிவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்: —

வழிபாட்டுப் பயணிகளுக்கு விடுதிகள் கட்டுதல்

ஆண்டு				ஒப்பளிப்பு வழங்கப்பட்ட மதிப்பீடு
				ரூ.
1969	...	...	...	1,10,700
1970	...	...	...	2,65,800
1971	...	...	...	11,14,000

ஓய்வு விடுதிகளைக் கட்டுதல்.

1969	...	...	...	6,34,000
1970	...	...	...	10,60,000
1971	...	...	...	5,24,400

திருச்செந்தூர், திரு. சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் ரூ. 6 லட்சம் செலவில் 96 அறைகளைக் கொண்ட புதிய கட்டடம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறது.

திருமண மண்டபங்கள் கட்டுதல்

திருமணம் முதலியவற்றிற்காகத் திருமண மண்டபங்களைப் பொதுமக்கள் குறைவான வீதத்தில் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வசதி செய்யும் பொருட்டுத் திருமண மண்டபங்களைக் கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த மண்டபங்கள் வழிபாட்டுக் கூடங்களாகவும் பயன்படுத்தப்படலாம். கீழே சொல்லப்பட்ட ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படியான வேலைகள் பல கோயில்களில் ஆரம்பித்தும், ஆரம்பிக்கப்பட்டும் இருக்கின்றன:—

ஆண்டு	மதிப்பீட்டுத் தொகை ரூ.
1969	4,12.000
1970	18,42,700
1971	27,94,600

11. அரசு மானியமும் புதுப்பித்தலும்:—

வருவாயற்ற, வறிய கோயில்களுக்கு அவைகளில் அவசரமாகச் செய்ய வேண்டிய பழுது பார்த்தல் மற்றும் அதிக அளவிலான பழுது பார்த்தலுக்கும் அரசு மானியங்கள் அளிக்கப்படுகின்றன. கோயிலின் நிர்வாகிகள் கோயிலைப் புதுப்பிக்க, திருப்பணிக் குழுக்கள் அமைத்துப் பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்தும், இதர சமய நிறுவனங்களிலிருந்து நிதி மாற்றம் மூலம், நிதிகள் பெற்றும் நடவடிக்கை மேற்கொள்ள அரசு மானியம் ஊக்கமளிப்பதாக உள்ளது. அரசும். கோயில்களைப் புதுப்பிக்க, மானியம் அளிப்பதன் மூலம் கீழே சொல்லியுள்ளபடி நிதி உதவி அளித்து வருகின்றது :—

ஆண்டு	அனுமதிக்கப் பட்ட தொகை (ரூபாய் லட்சத்தில்.)	பயனடைந்த கோயில்களின் எண்ணிக்கை
(1)	(2)	(3)
1968—69 ...	4	60
1969—70 ...	4	49
1970—71 ...	4	48
1971—72 ...	4	59

1972—73-ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஐந்து லட்சத்தினை மானியமாகக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

12. திரு வில்லிபுத்தூர்க் கோயில் கோபுரத் திருப்பணி:—

திரு வில்லிபுத்தூரிலுள்ள திருவடபத்திரசாயி கோயிலின் பெரிய கோபுரத்தை ரூபாய் நான்கு லட்சம் மதிப்பீட்டுச் செலவில் செப்பனிட்டுப் புதுப்பிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு ஏற்பளித்துள்ளது. இப்பணி பொதுப் பணித் துறையிடம் பிறர்க்கான பணியாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்து சமய அறக் கட்டளைகள் ஆணையாளரின் பொதுநல நிதியிலிருந்து இதற்கென மொத்தம் ரூ. 3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள தொகை கோயில் நிதியிலிருந்தும், பொது மக்களிடமிருந்து நன்கொடையாகவும் திருப்பணிக் குழுவினால் வழங்கப்படும். நடப்பு ஆண்டில் கோபுரம் அருகிலிருந்து தூரமான இடத்திற்குக் கழிவு நீர்களைத் திசை மாற்றும் வேலை முடிக்கப்பெற்றுள்ளது. கோபுரத்தின் ஐந்தாவது அடுக்கு வரையில் உள்ள பழைய மர உத்திரங்கள் அகற்றப்பட்டுப் புதிய உத்திரங்கள் அமைக்கும் வேலை முடிவுற்று, பிற அடுக்குகளிலும் இப்பணி நடைபெற்று வருகிறது. கோபுரத்திலுள்ள வெடிப்புகளை அடைக்கும் வேலைக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதுவரை ரூ. 60,000 வரை செலவிடப்பட்டுள்ளது.

13. பழனி கோயில் திருப்பணி:—

பழனி திரு தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் திட்டமிட்டபடி செய்ய இருக்கும் திருப்பணிக்கான தலைசிறந்த திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 40 லட்சமாகும். ரூ. 3 லட்சம் மதிப்புள்ள வேலைகளான பிராகாரங்களை அகலப்படுத்துதல், தெற்கு, மற்றும் வடக்குக் கோபுரங்களைப் புதுப்பித்தல் ஆகிய வேலைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14. கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறையினைக் கொண்டு வருதல்:—

எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும், தமிழில் அர்ச்சனை செய்யும் முறையினைக் கோயிலில் தொடங்கி நடைபெறுவதை எதிர்த்துச் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை முடிவுறு நிலையில் உள்ளது. வழிபடுவோர்கள் தாங்கள் விரும்பியபடி தமிழிலோ அல்லது வட

மொழியிலோ வழிபாடு செய்யும் வசதியினைப் பெற்றிருக்கின்றனர்.

15. கோயில் நிலங்கள்:—

மாநிலத்தில் உள்ள கோயில் நிலங்களைப் பொறுத்த எல்லாப்பொருள்கள் பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ளச் சிறப்புப் பணியாளர்களாக மாவட்ட வருவாய் அதிகாரி மட்டத்தில் ஒருதனி அதிகாரி, மற்றும் 4 தனித்துணை ஆட்சியர்களையும்,அவர்களுக்குரிய பணியாளர் தொகுதியினையும் பணியில் அமர்த்திக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. ஆய்வுப் பணியினை விரைவு படுத்துவதற்காக 1971-ஆம் ஆண்டில் கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்கு, அவைகளின் பெயரில் பதிவாகி உள்ள எல்லா அசையாப் பொருட்களும் அவைகளின் சொத்து விவரப் பதிவேட்டில் குறிக்கப்பட்டும், சமய நிறுவனங்களின் உடைமையில் இல்லாத சொத்துக்கள் அனைத்தும் அவைகளின் உடைமையாக்கப் பட்டும் கணக்கில் கொண்டுவரப்பட்டும் அந்தச் சொத்துக்களின் வருமானம் முறையாகக் கணக்கிடப்பட்டும் வருவதைச் சரிபார்ப்பதற்காக இவ்விதம் ஏற்படுத்தப்பட்டது. நிலங்கள் முறையானபடி குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா என்றும் ஆக்கிரமிப்புக்கள் அனுமதியில்லாத இருப்பு அல்லது உடைமை முதலியன இருக்கின்றதா என்பதனைச் சரிபார்ப்பதற்காகக் கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள நிலங்கள் கட்டடங்கள், மனைகள் முதலியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. முதல் நிலை ஆய்வின் பலனாகச் சிறப்புப் பணியாளர்கள், 1,59,322,27 ஏக்கர் நிலங்களையுடைய 32,450 சமய நிறுவனங்களைக் கண்டுபிடித்துள்ளனர். இவைகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள் இல்லாதவை. இந்தக் கோயில்களை நிர்வாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக நிர்வாக இலாக்காவின்கீழ் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள நிறுவனங்கள் குறித்தும் சிறப்புப் பணியாளர்கள் விவரமான ஆய்வுப் பணியினை மேற்கொண்டுள்ளனர். ஒவ்வொரு சமய நிறுவனத்துக்கும் வருவாய்த் துறை, மற்றும் கோயில் ஆவணங்களைக் கொண்டு கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள், குத்தகையில் உள்ள நிலங்கள், தரிசாக இருந்து வரும் விவசாய நிலங்கள், அனுமதியற்ற இருப்புக்கள் உள்ள நிலங்கள் போன்றவற்றிற்குத் தனிப் பதிவேடுகள் தயாரிக்கின்றனர். இந்த வேலை முன்னேற்றமடைந்து வருகின்றது, 1,869 நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பார்வையிடுதல், மற்றும் ஆய்வுப் பணியினை முடித்தும், 1,704 நிறுவனங்களுக்குக் கணக்குகள் தயாரித்தலும், 1972 ஜனவரி முடிய சிறப்புப் பணியாளர்கள் செய்துள்ளனர். கோயில்களுக்குச் சொந்தமான 19,697.00 ஏக்கர் நிலங்கள் அந்தக்கோயில்களின் வசமும் அனுபவத்திலும் இல்லை என்பது விவரமான ஆய்வு மூலம் தெரிய வந்தது அங்கீகரிக்கப்படாத அனுபோகதாரர்கள் வசம் உள்ள நிலங்களை உடைமை யாக்குவதற்கு நிலையான நிர்வாகப் பணியாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்,

16. இணைக்கப்பட்ட பகுதிகளிலும் மாற்றப் பட்ட ஆட்சிப் பகுதிகளிலும் உள்ள கோயில்கள், அற நிலையங்கள்:—

1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாளுக்கு முன்பு, புதுக்கோட்டையிலுள்ள புதுக் கோட்டைத் தேவஸ்தானத்திற்கு ஏற்பட்ட செலவு நேரிடையாக அரசு நிதியிலிருந்து சரிக் கட்டப்பட்டது, 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள் முதற்கொண்டு கோயில்களைப் பேணிவரும் பொருட்டுத் தொடர் மானியமாக ரூ. 4 லட்சம் அல்லது கோயில்களுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நிகரச் செலவு, இவற்றில் எது குறைவாக உள்ளதோ, அத் தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியதன் மூலம் புதுக்கோட்டைப் பகுதியிலுள்ள கோயில்களைப் பேணி வருவதற்காக நேரடிப் பொறுப்புக்கள் அனைத்தினின்றும் அரசு தன்னை விடுவித்துக் கொண்டது.

மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்கள், அவற்றின் சொத்துக்கள். நிதிகள் ஆகியவற்றின் நிர்வாகம், மேற்பார்வை, கட்டுப்பாடு அனைத்திற்கும் கன்னியாகுமரி தேவஸ்வ வாரியம் பொறுப்பு வகிக்கின்றது. மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதியிலுள்ள இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத தேவஸ்வங்கள் குறித்துத் தனி நிர்வாகத்திற்கு வகை செய்யும் பொருட்டு, தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு 30-வது சட்டம் அதாவது தமிழ் நாடு 1959-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட ஆட்சிப்பகுதி) இணைக்கப்பட்ட,

இணைக்கப்படாத தேவஸ்வம் சட்டம் இயற்றப் பட்டது. தேவஸ்வ வாரியத்தில் ஒரு தலை வரும், வேறு இரு உறுப்பினர்களும் இருப்பர். இவ்விருவரில் ஒருவர் திருவாங்கூர் மாநில முன்னாள் மன்னரால் நியமனம் செய்யப்பட்டு வருகிறார். தலைவரும் மற்றுமொரு உறுப்பினரும் தமிழ் நாடு அரசினால் நியமிக்கப்பட்டு வரு கின்றனர். தேவஸ்வங்களைப் பேணி வருதல் முதலியவற்றிற்காகத் தமிழ்நாடு அரசிட மிருந்து ஆண்டு தோறும் ரூ. 13,68,000-ஐ மானியமாக தேவஸ்வ வாரியம் பெறுகிறது.

17. "யுனெஸ்கோ" உதவி:—

(அ) இம் மாநிலத்திலுள்ள வரலாற்று முக் கியத்துவம் வாய்ந்த தொன்மையான கோயில் கள் சிலவற்றைப் பாதுகாப்பதிலும், புதுப்பிப்ப திலும் "ஐக்கிய நாடுகள், கல்வி விஞ்ஞானப் பண்பாட்டு நிறுவனம்" அக்கறை காட்டி வந் துள்ளது. திருவரங்கத்திலுள்ள திரு அரங்கநாத சுவாமி கோயிலுக்கு இந்த நிறுவனம் 12,000 டாலர்களை இந்தியாவில் தயாரிக்கப்படாத பொருள்களின் வடிவில் அதாவது பென்காப் சுலா (ஒருவகை தெளிக்கும் எண்ணெய்) உட் பட அக்கோயிலின் பண்டைக் காலப் பண்பாடு கெடாத வகையில் சுதை வேலைகளைப் பாதுகாப் பதற்குப் பயன்படும் பொருட்களை வழங்கியுள் ளது. 1970—71-ஆம் ஆண்டு முடியக் கிழக்குக் கோபுரம், மற்றும் ஆயிரக்கால் மண்டபம், சேச ராயர் மண்டபம் மேல்தளம் ஆகியவை பழுது பார்த்தல் வேலை முடிக்கப்பெற்றுள்ளது. 1971—72-ஆம் ஆண்டில் சேசராயர் மண்டபத் தில் நீர்கசியும் மேல்தளம் பழுது பார்த்தல் மற்றும் சேசராயர், ஆயிரக்கால்மண்டபங்களின் தூண்களைச் சுத்தப்படுத்துதல். வெள்ளைக் கோபுரச் சுதை வேலைகள் பழுதுபார்த்தல், அடைப்பு அமைத்தல் மற்றும் பென்காப்சுலா தெளித்தல் ஆகிய வேலைகள் முடிக்கப் பெற்றுள்ளன.

(ஆ) இராமேசுவரத்திலுள்ள திரு இராம நாதசுவாமி கோயில் "யுனெஸ்கோ" நிறுவனத் தின் உதவி பெறுவற்காக இரண்டாவது கோயி லாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. "யுனெஸ் கோ" வல்லுநர், திரு ஜி. ஆர். எச். ரைட் என்பவர், இக் கோவிலை வந்து பார்வையிட்டு, தனது அறிக்கையினைக் கொடுத்துள்ளார். இந்தக் கோவிலுக்குத் தேவையான பொருட் கள் "யுனெஸ்கோ" நிறுவனத்தால் வழங்கப்பட விருக்கிற பொருட்கள் ஆகியவற்றின் பட்டிய லும் கொடுக்கப்பட்டுள்ளன. இதுவரை "யுனெ ஸ்கோ நிறுவனம்" இந்தக் கோவிலுக்குத் தனது உதவியினை வழங்கவில்லை. இது குறித்துப் புது டெல்லி, இந்திய அரசு கல்வி, மற்றும் சமூக நல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகின்றது.

(இ) மாநில யுனெஸ்கோ குழு, காஞ்சிபுரத் திலுள்ள திரு வரதராஜ சுவாமி கோயிலையும், சிதம்பரத்திலுள்ள திரு நடராஜர் கோயிலையும், மூன்றாவது நான்காவது கோயில்களாக "யுனெ ஸ்கோ" நிறுவனத்தின் உதவித் திட்டத்தின் கீழ்த் தேர்ந்தெடுத்துள்ளது. இது குறித்தும், புது டெல்லி இந்திய அரசு கல்வி, மற்றும் சமூக நல அமைச்சகத்துடன் கடிதப் போக்குவரத்து இருந்து வருகின்றது.

18. அறநிலையத் துறையின் திங்கள் வெளியீடு:—

"திருக்கோயில்" என்னும் திங்கள் வெளி யீட்டினை 1958-ஆம் ஆண்டிலிருந்து இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாக) துறை வெளி யிட்டு வருகின்றது. இந்த வெளியீடு அனைவரா லும் பாராட்டப்படுகிறது. சிறந்த தமிழறிஞர் களால் எழுதப்படும் கட்டுரைகள், தகவல்களை அளிப்பதாகவும், அறிவுரை அளிப்பதாகவும் உள்ளன.

1—1—1972ல் இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா, மற்றும் அமெரிக்க நாடுகள் உள்பட, 4,000 சந்தாதாரர் களை உடையதாக இவ்வெளியீடு உள்ளது.

19. பொதுமக்களின் நலனுக்காக இம்மா நிலத்திலுள்ள கோயில்களின் நிர்வாகத்தினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இத் துறை தனது செயல்களை விரைவு படுத்தத் தொடர்ந்து முயற்சித்து வருகின்றது.

மு. கண்ணப்பன்,
அற நிலைய அமைச்சர்.

சென்னை-9.
20—3—1972.

அறநிலையத் துறைச் சுற்றறிக்கைகள்

கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ. ஏ, எஸ்.,
ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

சென்னை—34.
22—2—1972.

ந. மு. க. எண். 41234/71/இ5 நாள் 22—2—72

அன்புள்ள ஐயா,

பொருள்; திருக்கோயில்—திங்கள் இதழ்—அறங்காவலர்களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்தல்—சம்பந்தமாக.

நமது அறநிலையத்துறையின் சார்பில் நடைபெற்றுவரும் " திருக்கோயில்" இதழ் பற்றிக் கீழ்க்கண்டபடி அவசியம் செய்யவேண்டும்.

1. " தமிழகத்தில் அறநிலையத்துறையின் நிர்வாகத்தில் உள்ள எல்லாக் கோயில்களிலும் கட்டாயமாக இத்திங்கள் இதழை வாங்க ஏற்பாடு செய்யவேண்டும் ".

2. " அறநிலையத்துறையின் சார்பில் உள்ள கோயில்களின் பொறுப்பேற்றுள்ள அறங்காவலர்கள் அனைவருமே இவ்விதழுக்குத் தமது சொந்தப் பணத்தில் சந்தா செலுத்தி இதன் உறுப்பினர்கள் ஆகி, இவ்விதழை வாங்குமாறு செய்தல் வேண்டும் ".

3. "புதிய அறங்காவலர்கள் நியமன விண்ணப்பங்களில், அவர்கள் திருக்கோயில் இதழின் சந்தாதாரர்களாக உள்ளனரா? என்று வினவும் குறிப்பு சேர்க்கப்படவும், சந்தா செலுத்தி உறுப்பினரான பிறகே விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும் ".

4. "திருக்கோயில்" இதழின்பழைய சந்தா நிலுவைகளை வசூல் செய்யத் துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும் தனிப்பட்ட அக்கரையும், ஆர்வமும் முயற்சியும், மேற்கொள்ளவேண்டும்.

5. " கோயில்களில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்கள், திருக்குடமுழுக்கு விழா நிகழ்ச்சிகள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை, வேறு பிற பத்திரிகைகளிலும் வெளியீடுகளிலும் விளம்பரப்படுத்துகின்றனர். அவைகளைத் திருக்கோயில் இதழிலும் உரிய கட்டணங்கள் செலுத்தி விளம்பரப்படுத்தும்படி செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் ".

6. " கோயில்களில் நடைபெறும் திருப்பணி வேலைகள், கலியாண மண்டபங்கள் ஆகியவற்றின் வேலைகள் முதலியவற்றிற்காக, கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் திருக்கோயில் இதழில் உரிய கட்டணம் செலுத்தி வெளியிடப்பெறுதல் வேண்டும் ".

இவற்றின் மூலமாக அறநிலையத்துறையின் பொதுவான வருவாயானது, கணிசமான அளவு மிகுதிப்படுவதற்கு நிரம்ப வாய்ப்புக்கள் உள்ளன. ஆதலின், ஆராய்ந்து தெரிவித்துள்ள கருத்துக்களின்படி, தக்க சிறந்த நடவடிக்கைகளை உடனடியாகவும் தீவிரமாகவும் எடுக்கவும், எடுத்த நடவடிக்கைகளுக்கான அறிக்கைகளை இவ்வலுவலகத்துக்கு உடனுக்குடன்

அனுப்பி வைக்கும்படியும், அறிவுறுத்திக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்த அறிக்கை கிடைத்த் ஒரு மாதத்திற்குள் துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும் கீழ்க்கண்டபடி அறங்காவலர் களைச் சந்தாதாரர்களாகச் சேர்த்துத் தகவல் அனுப்பவேண்டும்.

உதவி ஆணையர்கள் (1)	ஆட்சியின் கீழ்உள்ள கோயில்கள் (ஆயிரம் ரூபாய் வருவாயுடையவை) (2)	மொத்தம் சேர்க்க வேண்டிய உறுப்பினர் களின் எண்ணிக்கை (3)
சென்னை	395x3	1185
கடலூர்	440x3	1320
சேலம்	200x3	600
நாகப்பட்டினம்	380x3	1140
இராமநாதபுரம்	167x3	501
கோயம்புத்தூர்	200x3	600
வேலூர்	188x3	564
சுசீந்திரம்	116x3	348
திருநெல்வேலி	171x3	513
திருச்சி	300x3	900
காஞ்சிபுரம்	283x3	849
மதுரை	253x3	759
கும்பகோணம்	215x3	645

துணை ஆணையர்கள்	பட்டியலிட்ட கோயில்கள்	சேர்க்கவேண்டிய சந்தாதாரர் எண்ணிக்கை
சென்னை	82x3	246
கோயம்புத்தூர்	68x3	204
மதுரை	86x3	258
தஞ்சாவூர்	135x3	405

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள,

(கே. எஸ். நரசிம்மன்)

ஈசு 222
பெறுநர் :
எல்லா உதவி ஆணையர்களும்,
துணை ஆணையர்களும்.

ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை—34.

சுற்றறிக்கை

ந. க. எண். 10824/72/இ5 நாள் 1—3—1972

பொருள் : திருக்கோயில்—திங்கள் இதழ்—விளம்பரங்கள் வெளியிடுதல்—சம்பந்தமாக.

நமது அறநிலைய ஆட்சித்துறையைச் சேர்ந்த கோயில்களிலெல்லாம்; பிரமோற்சவ விழா, கந்தர் சஷ்டி விழா பாவை விழா, பங்குனியுத்தர விழா முதலிய பலவகை விழாக்கள் நடைபெறுகின்றன. மற்றும் திருப்பணித் தொடக்க விழாக்கள், திருமண மண்டபக் கால்கோள் விழாக்கள், குடமுழுக்கு விழாக்கள் முதலியனவும், ஆங்காங்கே பரவலான வகையில், பெரும் பொருட்செலவில் நடைபெற்று வருகின்றன. இவைகளைக் குறித்துத் தினசரி இதழ்களில் கட்டணம் செலுத்திப் பலவகையான விளம்பரங்கள், நமது கோயில்களால் செய்யப்படுகின்றன. இத்தகைய விளம்பரங்கள் அறிக்கைகள் முதலியவற்றிற்காக எல்லாக் கோயில்களிலிருந்தும் கணிசமான தொகை அவ்வப்போது செலவழிக்கப்பட்டு வருகின்றது.

இனி; அத்தகைய பலவகை விழாக்களின் விளம்பரங்கள், அறிக்கைகள், கும்பாபிடேக நிகழ்ச்சிகள், திருப்பணி வேலை சம்பந்தமான ஒப்பந்தப் புள்ளிகள் முதலியவற்றை, நமது அறநிலையத் துறையின் சார்பில் நடைபெற்றுவரும் "திருக்கோயில்" இதழின் மூலம் விளம்பரங்கள் செய்து, பயன்படுத்திக்கொள்ளுமாறு, கோயில்களின் அறங்காவலர்களும் நிர்வாக அதிகாரிகளும் இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இதனால் கோயில்களுக்குத் தம்முடைய விழாக்களுக்குரிய விளம்பர வசதிகள் கிடைப்பதுடன், பொதுமக்களாகிய பக்தர்களுக்கும், கோயில் விழாக்கள் முதலியனபற்றிய சரியான தகவல்களை அறியும் பயன் கிடைக்கும்.

இத்திட்டத்தின்படி, பின்வருமாறு கட்டண விவரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கட்டண விபரங்கள்

(1)	அட்டையின் மேல்பக்கம் முழு அளவு	ரூ.	250–00
(2)	அட்டையின் உட்பக்கம் முழு அளவு	ரூ.	200–00
(3)	அட்டையின் மேல்பக்கம் அரை அளவு	ரூ.	125–00
(4)	அட்டையின் உட்பக்கம் அரை அளவு	ரூ.	100–00
(5)	இதழுக்கு உள்ளே முழுப்பக்க அளவு	ரூ.	100–00
(6)	இதழுக்கு உள்ளே அரைப்பக்க அளவு	ரூ.	50–00

எல்லாக் கோயில்களின் அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரிகளும், தத்தம் கோயில்களில் நடைபெறும் விழாக்களுக்கு, இவ்விளம்பரத்திட்ட வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு, கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எல்லா உதவி ஆணையர்களும், துணை ஆணையர்களும், இவ்விவரத்தினைத் தம் ஆளுகைக்குட்பட்ட எல்லா ஆலயங்களுக்கும் தெரிவிக்குமாறும், இத்திட்டம் வெற்றி பெறுவதற்கு ஏற்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வப்பகுதிக்குரிய துணை ஆணையர்களும், உதவி ஆணையர்களும், தங்கள் ஆட்சியின் கீழுள்ள கோயில்களிலிருந்து மேற் குறிப்பிட்டுள்ளபடி உரிய கட்டணங்களைத் தங்கள் அலுவலகத்தில் முன்கூட்டியே வசூலித்துக்கொண்டு. அவ்வக் கோயில்கள் தரவிரும்பும் விளம்பரச் செய்திகளை, அவை எந்த மாத இதழில் வெளிவர வேண்டுமோ, அம்மாத இதழுக்குப் பல நாட்கள் முன்னதாகவே வாங்கி அனுப்பி உதவும்படி கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

இங்ஙனம் செய்வதனால், வெளியார்கள் பிறர் பெற்று வருகின்ற வருவாயில் கணிசமான பகுதி, நம்முடைய அறநிலையத்துறைக்குக் கிடைப்பதற்குப் பெரிதும் வாய்ப்பாக இருக்கும். ஆதலின் சம்பந்தப்பட்ட அனைவரும், இதில் மிக்க அக்கறையும் ஆர்வமும் எடுத்துக்கொண்டு செயலாற்றுமாறு, இதன்மூலம் வேண்டிக்கொள்ளப்படுகின்றர்.

(ஒப்பம்) ....
ஆணையாளருக்காக.

பெறுநர் ;
எல்லா உதவி ஆணையர்களும்.
எல்லாத் துணை ஆணையர்களும்.

நான்கில் ஒன்று

திரு. இரா. மாணிக்கவாசகம், M.A., M.Litt.,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

சைவ சமயத்தில் சிவனை வழிபடுதற்குரியன என, நான்கு வழிகள் (மார்க்கங்கள்) கூறப்படுகின்றன. அவை சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம் என்பன. இதைச் சிவஞானசித்தியார் (269), "சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம் தாசமார்க்கம் என்றும், சங்கரனை அடையும் நன்மார்க்கம் நான்கு" எனக் கூறுகின்றது. இந்த நான்கு மார்க்கங்களும் சரியை கிரியை யோகம் ஞானம் எனவும் கூறப்படும். இவைகளை முறையே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமய குரவர்கள் நால்வரும் கடைப்பிடித்து ஒழுகி உலகுக்கு வழிகாட்டினர் என்பர்.

சென்ற நூற்றாண்டில் தோன்றிய இராமலிங்க அடிகளார், சன்மார்க்க நெறியின் பெரும் பிரதிநிதியாகக் காட்சியளிக்கின்றார். தம் முன்னோர் அமைத்துத்தந்த சன்மார்க்கமாகிய பெருநெறியைச் செப்பனிட்டு, அதில் பீடுநடை பயின்றவராகத் திகழ்கின்றார். வாழையடி வாழை என வருகின்ற சமரச சுத்த சன்மார்க்க அடியார் திருக்கூட்டத்தில் தலையாய இடம்பெறும் இராமலிங்க அடிகளார், சமரச சுத்த சன்மார்க்க சங்கம் எனச் சங்கம் வைத்துச் சன்மார்க்கம் பரப்பியவராவர்; தமக்கு முன்னர் வாழ்ந்த மணிவாசகர் தாயுமானார் முதலியோர் போன்று சன்மார்க்கத்தைப் பாடியதன்றி, தம்வாழ்வில் கடைப்பிடித்து, மக்கட் சமுதாயத்தில் பரவவும் வகைசெய்தவர் ஆவர். அருட்பாக்களில் மட்டும் சுமார் 210 இடங்களில் சன்மார்க்கம் பற்றிக் குறிப்பிடும் இவர், சுமார் 23 வேற்றுப்பெயர் தந்தும் இம்மார்க்கத்தைச் சிறப்பிக்கின்றார் என்பதும் குறிக்கத்தக்கது ஆகும்.

நல்லநெறி, தூநெறி, சற்சங்கம், சிவநெறி, பெருநெறி, அருள்நெறி, பெருநிலை, சிவசன்மார்க்கம், சுத்தசன்மார்க்கம், திருநெறி, தனிநெறி, அருட்பெருநிலை, சத்துவநெறி, ஞானசன்மார்க்கம், மலைவறுசன்மார்க்கம், நன்மார்க்கம், சித்தசிவ சன்மார்க்கம், கொல்லாநெறி, தலைநெறி, கலைநெறி, ஞானநெறி என்பன அவை.

"ஆன்றசன் மார்க்கம் அணிபெற எனைத்தான்
ஈன்றமு தளித்த இனியநற் றாயே"

—அகவல் (538).

எனத் தம் தோற்றத்தின் காரணம் கூறுகின்றார் அடிகளார். ஏன் இவ்வுலகில் சன்மார்க்கத்தைப் பரப்பவேண்டும் என்னும் வினாவிற்கும், அடிகளாரே பதில் தருகின்றார். "உலகில் சமய மத நெறி எலாம் பேய்ப்பிடிப்புற்ற பிச்சுப்பிள்ளை விளையாட்டு என உணர்ந்திடாது, உயிர்கள் பலபேதமுற்று அங்கும் இங்கும் போருற்று இறந்து வீண்போயினர். இன்னும் வீண் போகாதபடி விரைந்து புனிதமுறும் சுத்தசன் மார்க்க நெறிகாட்டி மெய்ந்நெறி உணர்த்து

எனத்தன் பிள்ளையான அடிகளாரிடம் இறைவன் ஆணையிட்டதாகக் கூறுதல் இங்குக் குறிக்கத்தக்கது. இங்ஙனம் இவர் பாடும் பல பாடல்களில் இருந்து, சாதி சமயம் இனம் குலம் முதலிய செயற்கைப் பாகுபாடுகளைக் குலைத்து, இறைவன் ஒருவனே ஆதலின் அவனை அடையும் வழியும் ஒன்றே ஆதல் வேண்டும் என்னும் குறிக்கோளை, அடிகளார் பெற்றிருந்தார் என்பது தெற்றெனப் புலனாகின்றது.

சாகாத கல்வியும், சிவம்ஒன்றே பொருள் எனஅறியும் சிறந்த அறிவும், மலம் ஐந்தும் வெல்லும் பூரணவல்லபமும், வேகாத காலாதி காணும் திறமும், எப்பொருளும் விளையவிளைவிக்கும் தொழிலும், இவற்றைப்பெற்று உலகமெலாம் மாகாதல்உற எல்லாம்வல்ல சித்தாகி இன்பமயமாய் நிலைபெற்று வாழவகுப்பதே சன்மார்க்கம் என, இறைவன் அடிகளார்க்கு உணர்த்தியதாகச் சன்மார்க்கத்தின் கொள்கையை விளக்குகின்றார்.

இராமலிங்க அடிகளார் குறிக்கும் சிவம் என்னும் சொல், செம்பொருள் அல்லது பரம்பொருள் என்னும் பொருள் உடையதே அன்றி, சிவனை (சிவபெருமானை)க் குறிப்பது அன்று. அடிகளார் சைவசமயச் சார்புடையவராக விளங்கிப் பின் ஆன்மீக உணர்வுபெற்றவராக வளர்ந்தவர். அடிகளாரது அருட்பாக்களை நுண்ணிய முறையில் ஆராய்வோர் இதனை உணர்வர். மேலும் சித்திவளாகத்தில் அடிகளார் நிகழ்த்திய மகாஉபதேசம், நம் கருத்துக்குப் பெரிதும் துணைசெய்யும்; தாம் ஆதியில் சமயச்சார்போடு இருந்து, பின் சமயங் கடந்த ஆன்மீக உணர்வு பெற்றமையை அவரே ஒப்புக்கொள்ளுகின்றார். எனவே சைவ அடியார்களாகிய நாயன்மார்கள் பாடும் சிவத்திற்கும், சித்தர்கள் வரிசையில் வந்த அடிகளார் குறிக்கும் சிவத்திற்கும், பொருளில் வேறுபாடு உண்டு என்பது உறுதி. நாயன்மார்கள் சைவம் என்னும் எல்லைக் கோட்டுக்குள் இருந்துகொண்டு, உருவப்பொருளான சிவபெருமானைக் கோயில்தோறும் சென்று பாடியவர்கள், அடிகளாரும் ஆரம்பகாலந்தில் இவ்வழியைப் பின்பற்றியவரே என்பதற்கு, அருட்பாவின் முதல் ஐந்து திருமுறைகள் சான்று பகரும். ஆனால் ஆறும் திருமுறையில் குறிக்கப்படும் சிவம் என்னும் சொல், உருவற்ற செம்பொருளைக் குறிப்பது. உலகில் காணப்படும் அனைத்து ஆன்மாக்களிலும் காணப்படும் ஒருவித ஆன்மீக இணைவைக் குறிப்பது, இதனைச் சிறிது ஆராய்வோம். அடிகளாரது சன்மார்க்க தத்துவம், உயிர் இரக்கத்தின் அடிப்படையில் அமைவது ஆகும்.

எவ்வுயிர்த்திரளும் என்னுயிர் எனவே எண்ணிநல் இன்புறச் செய்யவும், அவ்வுயிர்களுக்கு வரும் இடையூற்றை நீக்கி அச்சம் தவிர்த்திடவும் உரியநிலையே சன்மார்க்கத்தின் அடிப்படை எனக் குறிப்பால் உணர்த்துகின்றார். புலை கொலை இவற்றைச் சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகக் கருதும் அடிகளார், கருணை ஒன்றே சீவர்களுக்கு இயல்பாய் இருத்தல் வேண்டும். ஏனெனில் இறைவன் இயல்பு கருணைவடிவாய் அமைதலேயாகும் என, வற்புறுத்திக் கூறுவனவற்றை நோக்கின், புலையும் கொலையும் செய்யாதவரே சன்மார்க்கம் சார்ந்தவர் என்னும் உண்மை விளங்கும்.

"தயையுடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம்
சார்ந்தவரே ...."

என அடிகளார் கூறுவர்.

அடிகளாரது வாழ்க்கையினின்று இதனைச் சிறிது ஆராய்வோம், அடிகளார் கருங்குழியினின்று வடலூர் அடைந்தது 1867-ஆம் ஆண்டு ஆகும். இஃது அவர்தம் வரலாற்றை ஆராயின் புலனாகும். உயிர் இரக்கம் பற்றியே இவ்வுலகில் இலங்கிய அடிகளார், அகத்தே கறுத்தும் புறத்தே வெளுத்தும் இருக்கின்ற உலகினர் அனைவரையும் இச்சகத்தே திருத்திச் சன்மார்க்கத் தடைவித்திடச் சங்கம் ஒன்று நிறுவுதல் வேண்டும் என்னும் எண்ணம் கொண்டது, இவ்வாண்டேயாதல் வேண்டும். அடிகளார் சீவகாருண்யம், சன்மார்க்கம் பற்றிக் குறிக்கும் பாடல்களும், அறிக்கைகளும் விண்ணப்பங்களும் 1867-க்கு மேற்பட்ட காலத்தில் எழுதப்பட்டனவாகவே காணப்படுதல் நோக்கின், அக்கூற்றின் உண்மை புலப்படும். 1867-ஆம் ஆண்டிலேயே தருமச்சாலையும், சன்மார்க்க சங்கமும் தொடங்கப்பெற்றன. ஆனாலும் அவை அப்பெயர்பெற்றது 1872-ஆம் ஆண்டிலேயே ஆகும் என்பதை ஓர் அறிக்கையால் அறியலாம்.

"இன்று தொடங்கிச் சபைக்குச் சமரசசுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை என்றும், சாலைக்குச் சமரசசுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை என்றும், சங்கத்திற்குச் சமரச சுத்தசன்

மார்க்க சத்திய சங்கம் என்றும், திருப்பெயர் வழங்குதல் வேண்டும் என்பது அவ்வறிக்கை.

சன்மார்க்கம் சிறப்புவகையால் மூன்று வகைப்படும். அவை மத சன்மார்க்கம், சமய சன்மார்க்கம், சுத்த சன்மார்க்கம் என்பன. இவற்றில் அடிகளார் பின்பற்றி உபதேசம் செய்தது சுத்தசன்மார்க்கமாகும். இதுவே ஷடாந்த சுத்த சன்மார்க்கம் எனவும்படும். ஷடாந்தம் என்பது வேதாந்தம் முதலிய ஆறு அந்தங்களைக் குறிக்கும். எனவே அந்த அதீத மானதே சுத்தசன்மார்க்கம். அடிகளாரின் கருத்தின் வண்ணம் ஆறு அந்தங்களும் வேதாந்தம் சித்தாந்தம் இவற்றுள் அடங்கும். இவற்றுள் போதாந்தமும் யோகாந்தமும் வேதாந்தத்திலும், நாதாந்தமும் கலாந்தமும் சித்தாந்தத்திலும் அடங்கும். இவற்றுள் வேதாந்த சித்தாந்தங்களுக்கு அதீதம் சுத்த சன்மார்க்கம்.

சுத்தசன்மார்க்கத்தின் சாதனம் இரு வகைப்படும். அவை பரோபகாரம் சத்விசாரம் என்பன. பரோபகாரம் என்பது தேகத்தாலும் வாக்காலும் திரவியத்தாலும் உபகாரம் செய்வது; சத்விசாரம் என்பது ஆன்மநேய சம்பந்தமான தயாவிசாரத்தோடு இருப்பது; கடவுள் புகழை விசாரித்தல், ஆன்மாவின் உண்மையை விசாரித்தல். தன் சிறுமையைக் கடவுளிடத்தில் விண்ணப்பித்தல் என விளக்கி, இந்த மார்க்கத்தால்தான் சுத்தமாதி மூன்று தேகங்களைப் பெறவேண்டும் எனச் சுத்தசன்மார்க்கத்தினை விளக்கிக் காட்டுவார்.

" சுத்த சிவ சன்மார்க்க நிதியே "

—நடராசபதிமாலை.

" சுத்தசன் மார்க்கம் பிடித்துநின்றேன் "

—அநுபவநிலை.

" சமரச சுத்தசன்மார்க்கச் சத்துவநெறி "

—அருள்விளக்கமாலை.

எனப் பல இடங்களில் இச்சுத்த சன்மார்க்கத்தைக் குறிக்கின்றார். அடிகளார் இச்சுத்தசன் மார்க்க எண்ணங்களையும், கொள்கைகளையும் பிள்ளைச்சிறுவிண்ணப்பம், பிள்ளைப்பெருவிண்ணப்பம், அருள்விளக்கமாலை, நடராசபதிமாலை, சற்குருமணிமாலை முதலியனவற்றில் அதிக அளவு வெளியிட்டுள்ளார்.

இத்தகைய சுத்த சன்மார்க்கத்தின் முடிவாக அடிகளார் குறிப்பது சாவாமையாகும். 'சாகாதவனே சன்மார்க்கி' என்கின்றார்.

" மற்றறிவோம் எனச்சிறிது தாழ்ந்திருப்பீர்
ஆனால்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும்அவை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்கள்
அல்லால்அதனை
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லை கண்டீர் "

எனப் பல பாடல்களில் மரணமிலாப் பெரு வாழ்வு சன்மார்க்கத்தாலே விளைந்திடும் எனக் குறிக்கின்றார். இச்சன்மார்க்க ஒழுக்கங்களாக இந்திரியவொழுக்கம், கரண ஒழுக்கம், சீவ வொழுக்கம், ஆன்மவொழுக்கம் என நான்கு குறிக்கின்றார்.

இந்திரியவொழுக்கம் :

நாதம் முதலிய ஸ்தோத்திரங்களை உற்றுக் கேட்டல், மற்றவைகளைக் கேளாதிருத்தல். கொடுஞ்சொல் முதலியவை செவி புகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், ருசியின் மீது விருப்பமின்றியிருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல். இவை ஞானேந்திரிய ஒழுக்கம் எனப்படும்.

இனிய வார்த்தையாடுதல், பொய்சொல்லாதிருத்தல், சீவஇம்சை நேரிடுங்கால் எவ்விதத் தந்திரத்திலாவது தடைசெய்தல், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல், உயிர்க்கு உபகாரம் செய்தல்.

கரணவொழுக்கம் :

சிற்சபையின்கண் மனத்தைச் செலுத்துவது தவிர மற்றெந்த வகையான ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற்குறித்த இடத்தில் நிறுத்தல். பிறர் குற்றம் விசாரியாதிருத்தல்; செயற்கைக் குணங்களாலுண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கையாகிய சத்துவ மயமாயிருத்தல்; பிறர்மேல் கோபியாதிருத்தல்;

த்னது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல் முதலியன.

சீவவொழுக்கம் :

எல்லா மனிதர்களிடத்தும் சாதி சமயம் குலம் கோத்திரம் சூத்திரம் சாத்திரம் தேசம் உயர்வுதாழ்வு முதலிய பேதமற்று நிற்றல் முதலியனவாம்.

ஆன்மவொழுக்கம் :

எண்பத்துநான்கு நூருயிரம் யோனிபேதங் களிடத்துள்ள ஆன்மாக்களிடத்துமிரங்கி ஆன் மாவே சபையாகவும், அதனுள் ஒளியே பதியாக வும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலி யனவாம். இங்ஙனம் மிகவிரிந்த நிலையில் சன் மார்க்கம்பற்றி அடிகளார் குறித்துள்ளார்.

இன்றைய உலகம் இருக்கும் நிலையில், சன் மார்க்கம் காட்டும் சமரசக் கொள்கை மிகப் பரவுதல் வேண்டும். அடிகளார் குறிக்கும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப் பதன்மூலம் உலக அமைதியை நிலைநாட்ட முடியும் எனலாம்.

14869
000 008.

திருவாவடுதுறை ஆதீனத்தில், திருவார்திரு. அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப்பாங்கின்படி நடைபெற்ற 19-ஆம் திருமந்திர மாநாட்டில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S. அவர்கள் கலந்துகொண்டு உரைநிகழ்த்துதல். (19—1—72)

JL
Q2m24,N57TK.

தொகையில் ஒரு தொகை

புலவர் திரு. அ. அறிவொளி, M.A.,

பூம்புகார்ப் பேரவைக் கல்லூரி, பூம்புகார்.

திருத்தொண்டர்களின் வரலாற்றைத் தொகுத்து அளித்து, "தீதகன்று உலகம் உய்யுமாறு" செய்தவர் சுந்தரர். திருத்தொண்டத் தொகை என்னும் அந்தத் தெய்வநலம் மணக்கும் பகுதியில் இலக்கிய நலம் செறிந்து விளங்கும் சீரிய இடமொன்றுண்டு. திருமுறைகளில் முதலாவதாக எண்ணத்தகும் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தரைப் புகழும் இடம்தான், அந்தச் சீரிய இடம்.

தேவாரங்களிலேயே பக்தியோடு இயற்கை எழிலையும், இலக்கிய நலத்தையும் வாரி வழங்கிய பெருஞ் சிறப்பு ஞானசம்பந்தரையே சாரும். அதனால் அவரைப் பாடத்தொடங்கியதும் சுந்தரருக்கு உணர்ச்சி மிகுந்து இலக்கியச்சிறப்புக்கு இடந்தந்தாரோ என்று எண்ணத் தோன்றியது-பிறகுதான் அந்தத் திருத்தொண்டத் தொகையில் மறைந்து சிறக்கும் தொகைப் பொருள் புலப்பட்டது. மேலோட்டமாக ஆன்றோர் பாடலை நோக்காது, ஆழமாக ஈடுபடும்போது தோன்றிமலரும் இன்பத்திற்குக் குறையே இல்லை.

"வம்பரு வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"

இப்பாட்டடிகளினால், "கொன்றை மாலையை அணிந்த சிவபெருமானின் திருவடிகளைத் தவிர வேறுயாதனையும்வணங்காதஎம்தலைவராகிய ஞானசம்பந்தருடையஅடியார்க்கும்அடியேன்" என்ற பொருளைத்தான் சுந்தரர் நமக்கு உணர்த்த விரும்புகிறார். சிவபெருமானின் திருவடிகளைத் தவிர வேறு வணங்காத சிறப்பு ஞானசம்பந்தருக்கு மட்டுமன்றி ஏனைய அடியார்களுக்கும்பொருந்தும் சிறப்புத்தான். ஆனால் சிவபெருமானைக் குறிக்க நினைந்த சுந்தரர், அவனுடைய அடையாளப்பூ ஆகிய கொன்றை மலரைச் சிறப்பித்தார். அந்தக்கொன்றையைப் பற்றிச் சிறப்பித்த பகுதிதான் இலக்கிய நலமும் தொகைப் பொருளும் செறிந்த இடமாகும்.

வரிவண்டுகள் ஊதி மலரவைக்கவும், அவ்வண்டுகளின் மேனி மணக்கும்படியாக மலர்கள் மலரவும், அது மதுவினை உடையதாயிருக்கும் படியும் உள்ள சிறப்புத்தான் அக்கொன்றைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவும்கூட எல்லா மலர்களிலும் உள்ள பொதுவான இயல்புதான்; எனினும் இதனைப் பாடிய முறையில் அமைந்த அமைப்புத்தான் நம்மைக் கவர்ந்து இலக்கியத்திலும், பக்தியிலும், தத்துவத்திலும் கொண்டு செலுத்திவிடுகிறது.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் மிக்கவர் சுந்தரர். இறைவனே "அம்மா" என்று அழைத்த காரைக்கால் அம்மையாரைப் "பேயார்க்கும் அடியேன்" என்று மட்டும் கூறி அவ்வம்மையாரின் வரலாறு பக்தி ஆகியவைகளைக் காட்டிவிட்டுத்தாம் அவரிடம் கொண்ட மதிப்பையும் புலப்படுத்திவிடுகிறார் சுந்தரர். அத்தகைய சொற் சுருக்கப் புலவர் பெருமான், ஆறு சீர்களால் கொன்றையைப் புகழ்ந்துள்ளார் என்றால், அதன் நுட்பம் ஆராய்வதற்குரியதன்றோ?

உலகைப் படைத்துக் காத்து அழிக்கும் முப்பெருந் தொழில்களை முடிக்கும் இறைவனின் பெருமையை விளக்குவது 'ஓம்' என்ற பிரணவ மந்திரமாகும். அந்தப் பிரணவத்தின் வடிவ

மாக இருப்பது கொன்றைப்பூ. இவ்விடத்தில் சிவபெருமானைக் குறிப்பதற்கு எவ்வளவோ சிறப்புக்கள் இருந்த போதும், அவைகளை விலக்கிவிட்டுக் கொன்றையை மட்டும் சிறப்பிக்கும் உள்நோக்கம் எதுவாக இருக்கும்?

இறைவனின் அடையாளப் பூவை நினைத்ததும் பிரணவம் நினைப்புக்கு வந்திருக்க வேண்டும். மறை முதல்வராகிய ஞானசம்பந்தரை நினைக்கும்போதே சுந்தரருக்குப் பிரணவத்தின் நினைப்பும் உடன் வந்து நெஞ்சில் நிலை கொண்டிருந்தாலும் தகுதி யாகுமன்றோ?

வம்பு என்பது, புதுமை மணம் என்று இரண்டு பொருளும் உடையதொரு சொல்லாகும். ''வம்பரு'' என்றால் புதுமை நீங்காத என்று பொருள். மணம் நீங்காத என்று பொருளுரைப்பது சிறப்பில்லை; ஏனெனில் இவ்வடியில் மூன்றாம் சீரில் ''மணம் நாற'' என்று அதே பொருட் சொல் வருதலால். ''வம்பார் கொன்றை'' எனவும் ''வம்பமாரி'' எனவும் பழம் பாடல்களில் புதுமை என்ற பொருளே மிகவும் பயின்று வந்திருப்பதுவும் சாட்சியாகும். எனவே, 'வம்பருவரி வண்டு, என்பது புதுமை நீங்காத வரிகளையுடைய வண்டு என்று பொருள்படும்.

இனி வண்டுகள் புதுமை நீங்காதவை என்று சிறப்பிக்கக் காரணம்தான் என்ன? முதலாவதாக, தேன் கூட்டில் நிறைய தேன் செறிந்திருந்தபோதும் மேலும் மேலும் புதுப்புது வகையில் தேனை எடுத்துவரும் தொழிலைக் கைவிடாது, அலைவது வண்டுகளுக்கு இயல்பு, எனவே இவ்வகையில் வண்டுகள் புதுமை நீங்காது இருப்பவை என்பது விளங்குகிறது.

இரண்டாவதாக வண்டு என்றதொரு பொதுச்சொல் மட்டும் இங்குப் பெய்யப்பட்டிருக்கிறது. வண்டுச் சாதி பலவற்றுள்ளும் தும்பி என்னும் வகை வண்டுகளே தலையாய சாதி வண்டுகளாம். இறைவனின் அடையாளப் பூவாகிய கொன்றையை ஊதும் வண்டு என்று கூறப்பட்டதாலும், திருத்தொண்டத் தொகையாகிய பக்திப் பாடலில் பயிலும் வண்டாதலாலும் இங்குத் தும்பி என்ற வண்டைக் கொள்வதே தகும்; அந்தத் தும்பியின் இயல்பு தான் என்ன ?

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'' என்பது சங்கப்பாடல். இதனுள் தும்பிகளின் இயல்பு விரிவாகப் பேசப்படுகிறது, அதாவது எல்லாப் பூக்களும் தேனைப் பெற்றிருந்தாலும் இழிந்த இடத்திலோ இழிந்த வகையிலோ உள்ள பூக்களின் தேனை உண்ணாது உயர்ந்த பூவின் தேனை மட்டுமே தேடி ஆராய்ந்து உண்ணுவதைச் சிறப்பாகவும், தனது வாழ்க்கையாகவும் கொண்டது தும்பியாகும். எனவே இங்கு வரிவண்டுகளாகக் குறிப்பிடப்பட்ட தும்பிகள்தாம் தம் இயல்புக்கு ஆக்கம் செய்யும் வகையில் உயர்ந்த புதுமலர்களைத் தேடிப்போகும் புதுமையை விட்டு நீங்காத இயல்பை உடையன என்பது பெறப்படும்.

மூன்றாவதாக; தேன் இருலில் இருந்து வெளியேறாமல் முட்டையிட்டு இனத்தைப் பெருக்கும் ஒருவகை வண்டு '' அரசி '' என்று பெயர்பெறும். நாள்தோறும் வெளிவந்து தேன் நுகர்ந்துசெல்லும் வண்டுகள் வேலைக்காரத் தேனீக்கள் எனப்படும். இங்குப் புதுமையறாது வெளிவரும் தேனீக்கள் யாவும் வேலைக்காரத் தேனீ என்பதும் பெறப்பட்டது. மேற்கூறிய வாறு மூன்று இயல்புகளை வண்டுச் சாதியிடம் நாம் நினைத்துக்கொண்டு பொருள் பார்க்குமாறுதான் ''வம்பருவரிவண்டு'' என்ற சொற்றொடர் நமக்கு அறிவுறுத்துகிறது.

கொன்றையான் என்றே சிவபெருமானை அழைப்பதாலும், கொன்றை பிரணவத்தின் வடிவமாக இருப்பதாலும், கொன்றை என்ற பூவைச் சிவனாகவே எண்ணிக்கொள்ளுதல் வேண்டும். கொன்றை மலரையே சிவனாகக் கொண்டால் அதில் படியும் வண்டுகளை உயிர்களாகவும் பாவிக்கவேண்டும். கொன்றையின் மணம் திருவருளாகவும், கொன்றையின் மது வீடு பேறாகவும் கருதிக்கொள்ள வேண்டியதாகும். எனவே மேற்கண்ட வண்டுகளின் மூன்று இயல்புகளையும் உயிர்களுக்கு ஏற்றியுணர்தல் வேண்டும்.

விறன்மிண்டர் மெய்கண்டார் அப்பரடிகள் மணிவாசகர் ஆகிய பெரியோர்கள் மெய்ஞ்ஞானம் மிக்கவர்கள். ஆயினும் அவர்களும் கூட, பிற எளிய உயிர்களைப் போலத் தொண்டு செய்தும், இறையருள் பெறாதவர்போலும் வாழ்கின்றனர். அவர்கள் யாவரும் இறைவனுடைய திருவருளை முழுதுமாக உண்டு கண்டவர்கள். அப்படி இருந்தும்கூட அத்தகைய பெருமக்கள் யாதோ வருத்தம் மிக்கவர்கள் போலவும், துன்பத்தில் சிக்கி உழல்பவர்கள் போலவும் கலங்கு

கின்றனர். அஃதாவது, இறைவனுடைய அருள் நோக்கத்தைப் பெற்ற அளவில் மகிழாது மேலும்மேலும் புதிது புதிதாக அத்திருவருளைப் பெறுவதற்கு முயல்கிறார்கள். இத்தகைய இயல்பு தேன் கூட்டில் தேன் மிகுதியாயிருந்தும்கூட மேலும் தேனை விரும்பித் திரியும் புதுமையறாத வண்டுகளின் இயல்புக்கு ஒத்ததாகும்.

''உன், தேன் இருலில் மிகுதியாக இருக்கும் தேனைப் பருகி இன்புறாமல் ஏன் என்னிடத்து வந்தாய்?'', என்று கேட்டுத் தடுக்காமல் வாரி வழங்கும் வண்மையது கொன்றை மலர். தேன் இருலில் இருக்கும் தேன் உலகுக்குப் பயன்படுவதற்குச் சேர்க்கப்படுகிறது. அத்தகைய வள்ளல் தன்மையுள்ள வண்டினிடம் கொன்றைமலர் மறுக்கமுடியுமா? அதுபோல இறைவனுடன் இரண்டறக் கலந்த மெய்ஞ்ஞானிகள் அவ்வளவில் மகிழாது அந்தத் திருவருள் பேற்றை, இன்ப வெளிப்பாட்டை உலகுக்கு வெளிப்படுத்தும் வள்ளல்களாகி வழிபடுவதனால் இறைவனும் கொன்றை மலர்போலத் தடுக்காது, மறுக்காது திருவருள் தேனைப் பொழிந்து அருளுகிறான் என்பதாம்.

அவதாரப் பெருமை உடையவர்களைத் தவிர ஏனைய உயிர்கள் யாவும் இவ்வுலகில் பிறந்து தமது முன்னைய வினைப்பயனை அநுபவிக்கின்றன. அப்படிப்பட்ட உயிர்கள் இம்மாய உலகின் தன்மைகள் அறிந்து இதனை வெறுத்து மேல் உலகமாகிய துறக்க உலகத்தின் மீது பற்றுக்கொண்டு அதனை அடையச் செய்யவேண்டிய அறங்கள் யாவும் செவ்வையாகச் செய்யும். இவ்வாறு இழிந்த உலக வாழ்வை வெறுத்து உயர்ந்த வாழ்வை எண்ணும் அவ்வுயிர்களைக் ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி''யாக எண்ணலாம். தேன் தேர்ந்து வாழும் வாழ்க்கையை உடைய தும்பிகளை நோக்கி ''உங்களுக்குத் தேன் தானே வேண்டும். யாதேனும் ஒரு பூவில் தேன் நுகராமல் என்னிடம் ஏன் வருகிறீர்கள்?'' என்று கொன்றை மலர் கேட்டு மறுப்பதில்லை. இழிந்த பூக்களை நீக்கி உயர்ந்த பூக்களை நாடும் தும்பிகளைப் போன்ற இத்தகைய உயிர்களுக்கும் இறைவன் அருள் மழை பொழிகின்றான்.

''ஐயோ! எவ்வளவு அலைச்சல். நெடுந்தூரம் அலைந்து திரிந்து நாம் வருந்துவது போல நம் ''அரசி'' யாகிய வண்டு வருந்துவதில்லையே! என்று தன் கடமைக்கு நொந்து கொண்டு பிறர் உடைமைக்குப் பொறாமையும் கொள்ளுகின்ற மனப் பாங்கு 'வேலைக்கார' வண்டுகளிடத்தில் இல்லை.

இவ்வாறே முன்வினைப்பயனை அநுபவிக்கப் பிறந்த உயிர்கள் மேலுலக எண்ணமின்றி விருப்பமின்றி, இவ்வுலகில் தனக்கு வாய்த்த கடன்களை மட்டும் குறைவின்றிச் செய்துவிட்டு வாழ்கின்றன. இவ்வுயிர்கள் தீமையும் செய்வதில்லை. நன்மையும் செய்வதில்லை. எதுவும் ஆற்றுதலில்லை. இவ்வுலகத்தோடு தம் நிலையையும் நிகழ்த்தி விடுகின்றன. இத்தகைய உயிர்கட்கும் கொன்றை மலர்போல இறைவன் தவறாது திருவருட் டேனை வழங்குகிறான் என்று குறிப்பிட்டார். இவ்வாறு மூவகை உயிர்களுக்கும் அருள் வழங்கப்படுவதைக் கண்டோம். இவைகள் வரிசையாகச் சிறந்த உயிர்கள்.

இனி ''வம்பரு வரிவண்டு'' என்பதனை வேறு விதமாகவும் எண்ணுதல் தகும். மேற்கூறியவாறு வரிசையாகச் சிறந்த நல்லவர்களுக்கு மட்டுமே அருள்புரிவான் இறைவன் என்று நிறுத்திவிட்டால், தீமையே நாளும் செய்து என்றேனும் எண்ணித் திருந்தி வருந்தும் எளிய உயிர்களுக்கு இறையருள் அறவே கிட்டாமற் போய்விடும் என்று எண்ணவேண்டியதாய் விடுமே!

இப்படியாகிவிட்டால் இறைவனுடைய 'பரங்கருணைத் தடங்கடலை' இந்தத் திருத்தொண்டத் தொகை முற்றவும் விளக்காமல் போய்விட்டது என்ற குற்றமல்லவா வந்து சேரும். ஆகவே நுணுகி ஆய்ந்தால் இத்திருத்தொண்டத்தொகை மேலும் சிறந்த பொருள் தருதலை அறியலாம்.

படைப்புக் காலத்திற்கு முன்பு, உயிர்களிடம் ஆணவம் முதலிய மும் மலங்களும் ஒடுங்கியிருந்தன. அவ்வுயிர்களிடத்திலுள்ள மலங்களைக் கழுவிக்கொள்ள ஒருவாய்ப்பாகத் திருவருள் மிகுதியாலே இறைவன் புதிதாகிய இம்மாய உலகைப் படைத்தனன். அந்த மாய உலகத்தில் பிறவி மேற்கொண்டன அவ்வுயிர்கள். தூய செம்பினிடத்திலே களிம்பு புதிதாக ஆனால் இயல்பாகவே தோன்றுதல் போல மலங்களும் உயிர்களுக்குத் தோன்றுகின்றன. எனவே புதிதாகத் தோன்றிய மலங்களை விட்டு

நீங்காத உயிர்கள் என்று அறிவு விளக்கவந்த சுந்தரர் ''வம்பரு வரிவண்டு'' என்று பாடினுர்.

நோயுள்ளவர்கள் வாயில் இறைவனின் திருநாமம் வாழ்த்தப்படுவது உண்மை. அப்படியே மலங்களில் மயங்கித் தீமை செய்தார்கள் நோய் பெறுதலும் இயற்கை; அப்படி நோய் பெற்ருர் இறைவனிடம் முறையிட்டுப் புலம்புதலும் இயற்கை. வம்பாகிய மலக்கட்டு அறுந்து போகாமல் வண்டுகளாகிய உயிர்கள் புலம்புகின்றன என்பதை ''வரிவண்டு'' என்ற ஆட்சிச் சொல்லால் சுந்தரர் தெளிவுறுத்துகின்ருர்.

வரிவண்டு என்ருல் கோடுகளைத் தம் உடலிடத்துப் பெற்ற வண்டுகள் என்று பொருளாகாதோ எனின்? ஆகாது. '' கானல்வரி '', '' ஊசல்வரி '', எனும்போது வரி என்ற சொல் பாடல் என்னும் சொற்குறிப்பை வெளிப்படுத்துவதுபோல, இங்கும் 'வரி' என்பது வண்டின் இசையையும் குறித்து நிற்கின்றது. வண்டின் இசை மலரின் மதுவிணைப் பெறுவதற்குச் செய்யப்படும் முயற்சியாகும். உயிர்களாகிய இந்த வண்டுகள் பாடும் இசையானது இறைவனுடைய அருள்நோக்கைப் பெறுவதற்குச் செய்த புலம்பலாகும், ஆகவே அந்தப் புலம்பலின் காரணம் என்ன? உயிர்கள், தம்மிடத்துத் தோன்றிய புதுமையான மலங்களை எண்ணியும், புதுமையாகப் படைக்கப்பட்ட உலகின் மாயா மருட்சியை எண்ணியும், புலம்புவதாகவே அமையும். எனவே தீமைகள் செய்தாலும் அவற்றை உணர்ந்து வருந்தித் திருந்த முயலும்போது அவ்வுயிர்களையும் இறைவன் ஆட்கொள்ளுதல் பெறப்படும்.

கலைகள் குறைந்து அழிந்துபோய்க் கொண்டிருந்த நிலவின் பிறை இறைவனை வேண்டியது. பாவத்தால் அழிந்த அப்பிறையை இறைவன் ஆட்கொண்டான். தன் தாளில் கிடந்த பிறையைத் திருவருள் செய்த இறைவன், தன் தலையில் சூட்டிக்காட்டினுன். 'சந்திரசேகரனு'க விளங்கி நின்று, பாவிகளையும் அருள்செய்யும் அவனுடைய தத்துவ உண்மையையும் இந்த ''வம்பருவரி வண்டு'' என்ற சொல்லாட்சி குறிப்பிடுகின்றது.

மொட்டாக இருந்து கட்டுவிடாது நிற்கும் போதுகளைத் தன் வாயாலே இசைபாடி ஊதி அக்கட்டுக்களை அவிழ்த்து மதுவை உண்ணுவது வண்டுகளுக்கு இயற்கையாகும். வண்டுகள் இவ்வாறு ஊதாமற்போனுல் மலர்கள் மலராவோ? எனின், மலரும்! ஆயினும் வண்டுகள் ஊதியபின் மலர்வதாகப் பாடுவது கவிமரபாகும்.

இங்குக் கொன்றையாகக் கூறப்பட்ட இறைவன் தானேயே மலரும் மலர்போல இயல்பாகவே உயிர்களுக்கு அருள்சுரந்து ஊட்டி உயிர்களை வாழ்விப்பவனுவான்; ஆயினும் உயிர்களாகிய வண்டுகள் ஊதியபின் அதாவது வாழ்த்தியபின் திருவருள் மலர்வதாகக் கூறுவதும் ஒரு கவிதை மரபாகும்,

பல பிறவிகளில் பிறந்து அநுபவித்தபின் கிடைக்கப்போகும் பெரும்பேற்றை இந்தப் பிறவியிலேயே வழிபட்டால், சிவமயமான பேரறிவால் பெறுவது கூடுமாயின் அது மிகவும் நேரிதல்லவா? வண்டு ஊதாமலே மலர்கள் தாஞக மலருமாயினும் வேறு ஒருவன் சென்று தேனை நுகர்ந்துவிடாதபடி தானே முன்னதாகச் சென்று, தன் வெப்பக் காற்ருல் ஊதி மொட்டுகளின் கட்டை அவிழ்ப்பதும், யாரும் வரும் முன்பாகவே தேனை உண்ணுதலும் வண்டுகட்கு நலமன்ருே? அப்படிப் போலவே இயல்பாகவே இறைவனின் திருவருள் வந்து சேருவதற்கு முன்பே அதனைப் பெற முயலுதல் உயிர்களுக்குக் கடனுதலையும் இம்மரபு விளக்குகின்றது.

இம்மரபு பற்றித்தான் இறைவன் திருவடிகளை ''மலர்''கள் என்றும், முயற்சியை வற்புறுத்தும் சொல்லாகிய 'தாள்' என்றும் ஆன்ருேர் உரைத்தார்களோ என்று தோன்றுகிறது. மொட்டுகளை ஊதிய உடன் அந்த முகைமொக்குகளின் உள்ளிருந்து வரும் நறுநாற்றம் மலரின் உள்ளே வாழும்' தேனின் பெருமையை வண்டுகளுக்கு அறிவிக்கும். அதனுல் அந்நிலையிலேயே வண்டுகள் ஆனந்தமடையும்! அதுபோலவே கொன்றை மலரை ஊதியதும் ஏற்பட்ட மணமானது அம்மலரின் தேன் சிறப்பை உணர்த்தியது. அதாவது மலராகிய இறைவனுடைய மணமாகிய திருவருள், மதுவாகிய அவன் வழங்கும் செல்வத்தை (பேறுகளை)க் குறித்தது. இதையெல்லாம் ''மணம் நாற மலரும்'' என்ற சொற்பொருளால் சுந்தரர் விளக்குகிருர். எனவே திருவருளானது இறைவன் உதவும் பேறுகளை வெளிப்படுத்தும் அறிவிப்பு என்பது பெறப்படும்.

மணம் வெளிப்பட மலரும் என்று பாடுவதே சுந்தரரின் கருத்தாஞல் ''மணம் பரவ

மலரும்'' என்று பாடுவதுதான் பொருத்தம். ''மணம்நாற'' என்றால் மணமானது மணக்க என்றுதான் பொருளாகும். மணம் மணக்காமல் வேறு என்ன செய்யும்? எனவே ''நாற'' என்ற மிகுதிச் சொல்லின் நுட்பத்தை மேலும் ஆய்தல் தேவைப்படுகிறது. கொன்றையினை ஊதிய வண்டுகளின் உடலில் கொன்றையின் மணமானது படிந்துவிடுகிறது. அம் மணத்தை மேற்கொண்டு வண்டுகள் எங்குச் சென்றாலும் மணம் மாறாது தொடர்ந்து வாழ்ந்து மணப்பது இயல்பாம். அப்படி அக்கொன்றை மலர்வதாகவே ''மணம் நாற மலரும்'' என்ற அமைப்பாகும்.

மாணிக்கத்தைச் சேர்ந்த படிகமானது அம் மாணிக்கத்தின் நிறத்தைப் பெற்று ஒளிர்வது போலக் கொன்றையை ஊதியபின் வண்டுகளின் மேனியிலும் அக்கொன்றையின் மணம் விடுபடாமல் மணக்கின்றது. இதுபோலவே உயிர்கள் சிவபெருமானை எண்ணி வழிபட்ட போது அவன் திருவருளை அடையும்; அடைவதேயன்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் வாய்ப்பாகிறது. அதாவது இறைவன் திருவருள் எய்தப் பெற்றார்களும் இறைவனாகவே கருதப்படுவர் என்பதாம்,

மதுவின் பெருமையை மணம் உணர்த்துவதுபோலத் திருவருள் வழங்கும் இறைவன் அருளுவதாகிய இன்பம் துறக்கம் வீடுபேறு ஆகிய மதுவையும் திருவருளாகிய மணம் குறிப்பாக உணர்த்தியது. அதுபற்றியே ''மதுமலர் நற்கொன்றை'' என்று பாடுகின்றார். ''நற்கொன்றை'' என்ற இடத்தில் உள்ள நல்ல என்ற அடைமொழியைக் கொன்றைக்கு மட்டும் ஆக்காமல், மதுவிற்கும் (நல்லமது) ஆக்கி, மது என்பது இறைவன் அருளும் வீடு பேறு முதலிய செல்வங்களை உணர்த்தியதாகக் குறிக்கவேண்டும்.

இவ்வாறு இறைவனின் சிறப்பை ''வம்பரு வரிவண்டு மணம்நாற மலரும் மதுமலர் நற்கொன்றையான்'' என்ற அடி அழகுற விளக்கி நிற்பது எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இன்பம் பயக்கும் எழில்மிக்க இலக்கியச் சிறப்பாம். ஆக்கல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் உணர்த்தப் பிறந்த ''ஓம்'' என்னும் உணர்வரிய பெரும் பொருளாகிய பிரணவத்தின் வடிவமாகக் கொன்றையை, ஆன்றோர் கூறியது கண்டோம். எனவே இவ்வடியில் முத்தொழில்களும் உணர்த்தப்பட்ட சிறப்பையும் அறிதல் வேண்டும்.

''வம்பரு'' என்பதால் புதிதாக உலகு படைக்கப்பட்டதை நிறுவி ஆக்கல் தொழிலைக் காட்டினார். படைக்கப்பட்டவை அழிக்கப்படும் ஆகையாலும், அந்த அழிவை, ஆக்கும் வல்லமை மிக்கவன்தான் செய்யமுடியும் ஆகையாலும் அழித்தற்றொழிலை உய்த்து உணரவைத்தார். எவ்வகை உயிர்க்கும் உறுதியும் அருளும் வழங்குவான் என்பதாலே காத்தல் தொழிலையும் உணர்த்தினார். இம்மூன்று தொழில்களைக் கொண்டே ஏனைய இரண்டு தொழிலும் உய்த்து உணரப்படும் ஆகையால் இறைவனுடைய ஐந்தொழிலும் இதனுள் கூறப்பட்டமை அறியலாகும். இத்தகுவதோர் பிரணவ மந்திரத்தின் பெருமையை இங்குக் குறிப்பிடக் காரணம் என்ன? மறை ஓதுவதற்கு முன்பு ''ஓம்'' என்னும் மந்திரம் ஓதுதல் மரபு. மறையோதுவாராய்த் தோன்றிய சுந்தரர் மறை முதல்வராய்த் திருமுறைகளில் முதலாவது திருமுறையைப் பாடியவராகக் கருதப்படும் ஞான சம்பந்தப்பிள்ளையாரை நினைத்ததுமே, தம்மைப் பக்தியில் இழந்துவிட்டார். எனவே பிரணவத்தை அடையாளப் பூவால் விளக்கி அதன்மூலம் இலக்கியநலம் செழிக்கச்செய்து இறையருளின் திறம் விரியக் காட்டிப் பக்தி நலம் கனியக் கனியப் பாடியருளினார்.

திருத்தொண்டத் தொகையுள்ளே ஒரு பெரிய தொகைப் பொருளைப் பொதிந்துவைத்த பெருமை சுந்தரரின் தெய்வப் புலமையை நமக்கு வெளிக்காட்டுகிறது.

சிதம்பரம் சிவகாமியம்மை திருக்கோயில்

"திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்"

திரு க. வெள்ளைவாரணர் அவர்கள்,

தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சிவநெறிச் செல்வர்களால் பூலோக கயிலாயம் எனவும், கோயில் எனவும் போற்றப்பெறுவது பெரும்பற்றப்புலியூர் என்னும் சிதம்பரமாகும். இத்தலம் உலக புருடனுக்கு நெஞ்சத்தாமரையாகவிளங்குவது. இதன்கண் ஞானமாகிய நுண்ணிய ஆகாயமாகிய திருச்சிற்றம்பலத்திலே சிவபெருமான் ஆனந்தத் திருக்கூத்தினை எக்காலத்திலும் நிகழ்த்தியருளுகின்றார்.

இமயம் முதல் குமரி வரையுள்ள இந்தியப் பெருநிலத்திலும் கடல்கடந்து, இலங்கையிலும், உலகின் பல்வேறிடங்களிலும் வாழும் எல்லா மக்களையும், தன்பால் ஈர்க்கவல்ல தெய்வத் தன்மை வாய்ந்த திருத்தலங்களுள் தலைமை வாய்ந்தது சிதம்பரம். அழியுந்தன்மையனவாகிய உலகப் பற்றுகளை அறவே அகற்றி எவ்வகைப் பொருள்களுக்கும் சார்பாகிய இறைவன் திருவடிகளைப்பற்றி வழிபட்டு மகிழ்வதனையே பெரும் பற்றாகக் கொண்டவர் புலிக்கால் முனிவர். வியாக்கிரபாதராகிய அவர், உலக உயிர்கள் நலம் பெறுதல் வேண்டித் தில்லை வனமாக இருந்த இத்தலத்தில் திருமூலநாதராகிய சிவலிங்கத் திருவுருவினைப் பூசித்துப் போற்றினார். அதனால் இத்தலம் 'பெரும்பற்றப் புலியூர்' என வழங்கப்பெறுவதாயிற்று. இத்தில்லையில் சிவபெருமான் பதஞ்சலி முனிவர் செய்த வழிபாட்டிற்குத் திருவுளம் மகிழ்ந்து அம்முனிவர் வேண்டிய வண்ணம் நடராசப் பெருமானாக வெளிப்பட்டு அருளி உலகமீன்ற அன்னையாகிய சிவகாமி அம்மை காண ஆனந்தத் தாண்டவமாகிய அருட்கூத்தினை இடைவிடாது இயற்றி அருள்கின்றான் என அருள் நூல்கள் கூறுகின்றன.

முற்காலத்தில் சிம்மவர்மன் என்னும் வேந்தன் தில்லையை அடைந்து, வியாக்கிரபாதரை இறைஞ்சிச் சிவகங்கையில் நீராடித் தனது உடல் நோய் நீங்கிப் பொன்மேனிபெற்றமையால் இரணியவர்மன் என்னும் சிறப்புப் பெயர் பெற்று, நடராசப் பெருமானுக்கு நாள் வழிபாடும் திருவிழாக்களும் நிகழ நிபந்தம் வழங்கினான். இச்செய்தி கோயிற் புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

திருமந்திர மாலையினை அருளிய சிவயோகியாகிய திருமூலர் முதல், அருள்மொழித் தேவராகிய சேக்கிழார் நாயனார் ஈறாகவுள்ள சைவத் திருமுறை ஆசிரியர் அனைவரும், தில்லைச் சிதம்பரத்தில் (சிற்றம்பலத்தில்) திருக்கூத்தியற்றியருளும் இறைவனது திருநடனத்தை இறைஞ்சிப் போற்றியுள்ளார்கள். கோச்செங்கட்சோழன் முதலிய சோழமன்னர்கள் அனைவரும் தில்லையம்பல வாணரைத் தமது குலதெய்வமாக வழிபட்டுத் தில்லைக் கோயிலுக்குப் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். சோழ மன்னர்களும் அவர்தம் அரசியலதிகாரிகளும், தில்லைக் கோயிலுக்குச் செய்த திருப்பணிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும்,

கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த பல்லவவேந்தன் சிம்மவர்மன் என்பான் கூத்தப்

பெருமானை வழிபட்டுத் தில்லையில் பொன் வேய்ந்தனன் என்பர். திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இங்குக் கூத்தப் பெருமானை இறைஞ்சிப் போற்றிய காலத்தில் இத்திருக் கோயில் தூய செம் பொன்னினுல் எழுதி வேய்ந்த சிற்றம்பலமாக விளங்கியுள்ளது என்பது, அவர்கள் பாடிய திருப்பதிகங்களால் நன்கு விளங்கும். வரகுணபாண்டியன் தில்லையை வழிபட்ட செய்தியை மணிவாசகர் குறித்துள்ளார். கி. பி. 9-ஆம் நூற்ருண்டின் இறுதியில் ஆட்சிபுரிந்த முதல் ஆதித்த சோழன், கொங்கு நாட்டினை வென்று அங்குப் பெற்ற பொன்னைக் கொண்டு தில்லையம்பலத்தை மீளவும் பொன் வேய்ந்தனன் என நம்பியாண்டார் நம்பி குறித்துள்ளார்.

முதற் குலோத்துங்கனது 44-ஆம் ஆட்சியாண்டில் இராசராசன் குந்தவையார், தில்லை நாயகர்தம் கோயிலெல்லாம் செம்பொன் வேய்ந்துள்ளார். மூன்ருங் குலோத்துங்க சோழன் நடராசப் பெருமான் திருநடம் புரியும் திருச்சிற்றம்பலத்தின் முகப்பிலுள்ள முன் மண்டபமாகிய எதிரம்பலத்தைச் செம்பொன் வேய்ந்தான். சிவகாமியம்மையின் திருக்கோபுரத்திற்குச் செம் பொன் வேய்ந்தான். இச்செய்தி,

> ''எத்தரையும் தொழும் இறைவற்கு
> எதிரம்பலஞ் செம்பொன் வேய்ந்து,
> சித்திரை விழா அமைத்து, இறைவி
> திருக்கோபுரஞ் செம்பொன்
> வேய்ந்து''

எனவரும் அவனது மெய்க்கீர்த்தியிற் கூறப் பட்டுளது.

இவ்வாறே பாண்டியர், பல்லவர் முதலிய பேரரசர்களும், பிற குறுநில மன்னர்களும், அன்பிற் சிறந்த அடியார்களும் தில்லையில் நடராசப் பெருமான் திருக்கோயிலிற் காலந்தோறும் புதிய புதிய திருப்பணிகளைச் செய்து, நாள் வழிபாட்டிற்கும், திருவிழாக்களுக்கும், நந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகளுக்கும் வேண்டிய நிபந்தங்களை நிலமாகவும், பொருளாகவும் வழங்கியுள்ளமை, இத்திருக்கோயிலில் வரையப்பெற்றுள்ள 270-க்கு மேற்பட்ட கல் வெட்டுக்களால் இனிது விளங்கும்.

கி. பி. 1239 முதல் 1251 வரை ஆட்சிபுரிந்த இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் தில்லையிற் கூத்தப்பெருமானை வணங்கித் துலாபார தானஞ் செய்ததுடன் தில்லைச் சிற்றம்பலத்தைப் பொன் வேய்ந்தும் மேலைக்கோபுரம் கட்டியும் திருப்பணி புரிந்துள்ளான். பல்லவ மரபினனாகிய கோப்பெருஞ்சிங்கன் என்பான் சொக்க சீயன் என்ற பெயரால் தில்லையில் தெற்குக் கோபுரத்தைக் கட்டியதுடன் ஆண்டுதோறும் அதனைச் சீர்திருத்தற்கு வேண்டும் செலவுக் காகச் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஆற்றூர் என்ற ஊரை நிபந்தமாக வழங்கியுள்ளான். விசயநகர வேந்தர் கிருஷ்ண தேவராயர் பொட்டலூரில் வெற்றித்தூண் நாட்டித் தில்லையிற் பொன்னம்பல நாதனைச் சேவித்துச் சிதம்பரம் வடக்குக் கோபுரத்தைக் கட்டியுள்ளார்.

இவ்வாறு தமிழ் வேந்தர்களாலும் குறுநில மன்னர்களாலும் படைத் தலைவர்களாலும் நாட்டு மக்களாலும் பல்வகைத் திருப்பணிகளைப் புரிந்து போற்றப் பெற்றுவரும் தில்லைப் பெருங்கோயிலில் நடு நாயகமாகத் திகழ்வது, நடராசப்பெருமான் ஆனந்தத் திருக்கூத்தியற்றும் பொன்னம்பலமாகிய திருச்சிற்றம்பலத் திருக்கோயிலாகும். இதனைச் சூழத் திருமூலட்டானம் முதலாகப் பல திருக்கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மூன்ருும் திருச் சுற்றில் சிவகங்கைத்தீர்த்தத்தின் மேல் கரையில் அமைந்துள்ள சிவகாமியம்மை திருக்கோயில் மிகவும் சிறப்புடையதாகும். இத் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவகாமியம்மையைத் ''திருக் காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார்'' எனக் கல்வெட்டுக்கள் போற்றுகின்றன.

நடராசப் பெருமான் நிகழ்த்தியருளும் திருக்கூத்தினை உள்ளவாறு கண்டு மகிழும் மெய்யுணர்வு வாய்க்கப்பெருத நம்மனோர் பொருட்டு அம் முதல்வனை விட்டுப் பிரிவிலாத

திருவருளின் வடிவாகிய சிவகாமியம்மையார் அப்பெருமானது ஆனந்தக் கூத்தினை உடனிருந்து கண்டு அதன் பயனை உலக உயிர்களுக்கு அளித்தருளுகின்றார் என அருள் நூல்கள் கூறுகின்றன. தாய்ப் பாலையே உணவாகக் கொண்டு வளரும் கைக்குழந்தைக்கு நோய் வந்தால் அந் நோயினைத் தீர்க்கும் மருந்தினைப் பிள்ளைக்குக் கொடுப்பதில்லை. மருந்தின் வேகத்தைக் குழந்தையின் மென்மையான குடர் தாங்காதென்று கருதிக் குழந்தையின் நோய் தீர்க்கும் மருந்தினைத் தானேயுட் கொண்டு அதன் பயனைத் தாய்ப்பால் வழியாகக் குழந்தைகள் பெற்று நோய் நீங்க உதவுவது, பால் நினைந்தூட்டும் தாயின் செயலாகும். அதுபோலவே உலக அன்னையாகிய சிவகாமியம்மையும் மன்னுயிர்த் தொகுதியாகிய நம்மனோரின் தீராத பிறவிநோய் நம்மை விட்டு நீங்குமாறு இறைவன் திருக்கூத்தினைத் தாம் இடைவிடாது கண்டு அதன் பயனை நமக்கு அளித்தருளுகின்றார் என்பது அருளாளர் கண்டுணர்ந்த அனுபவ உண்மையாகும், இறைவனது திருக்கூத்தின் பயனை உயிர்கள் பெற உதவும் அருளன்னையாகிய சிவகாமசுந்தரிக்கு, தில்லைப் பெருங்கோயிலில் சிவகங்கைத் தீர்த்தத்தின் மேல்கரையில் தனிக் கோயில் அமைத்து நாள் வழிபாடும், திருவிழாக்களும் நிகழ்த்தும் வழக்கம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றது,

கி. பி. 1118-1136 வரை ஆட்சி புரிந்த விக்கிரமசோழன் காலத்தில் சிவகாமியம்மை திருக்கோயில் கருங்கற்றளியாக அமைக்கப் பெற்றது. அவ் வேந்தனது படைத் தலைவன் மணவிற் கூத்தன் காலிங்கராயன் என்பான் சிவகாமியம்மை திருக்கோயிலைச் சூழ்ந்த திருச்சுற்றுத் திருமாளிகைப் பத்தியும் அமைத்து அம்மைக்கு அபிடேகத்திற்குரிய பாற்பசுவும், அம்மைக்குச் சாத்தப் பீதாம்பரமும் அளித்துள்ளான்.

சிவகாமியம்மை திருவிழா நாட்களில் திருவோலக்கமாக எழுந்தருளியிருத்தற்கும் தேவாரத் திருப்பதிகம் பாராயணம் செய்வதற்கும் ஏற்றவாறு சிவகாமியம்மை திருக்கோயிலுக்குத் தென்புறத்தில் விக்கிரமசோழன் திருமண்டபம் என்ற பெயருடன் நூற்றுக்கால் மண்டபத்தை அமைத்துள்ளான், இவ்வாறு விக்கிரம சோழன் காலத்தில் தொடங்கப்பெற்று நிகழ்ந்த சிவகாமியம்மை திருக்கோயில் திருப்பணி, இவன் மகன் இரண்டாம் குலோத்துங்கன் ஆட்சியில் மிகச் சிறப்பாக நிறைவேறியது. தில்லையில் பேரம்பலத்தையும், உட் கோபுரத்தையும் திருச்சுற்று மாளிகையையும் அமைத்துத் தில்லைச் சிற்றம்பலத்தை மிகவும் விரிவுடையதாகச் செய்த இரண்டாங் குலோத்துங்க சோழன், உமாதேவியார் தாம் பிறந்த இமய வெற்பையும் மறக்கும்படி சிவகாமியம்மை திருக்கோயிலை மிகப் பெரியதாக அமைத்தான். திருவிழா நாட்களில் சிவகாமியம்மை உலாவருதற்குப் பொன்னாலும் மணியாலும் புனையப்பெற்ற அழகிய தேரினைச் செய்தளித்தான். பொன்னாலாகிய கற்பக தருக்களை அமைத்தான். திருக்குளத்தைச் செம்மைப் படுத்தினான், கோயிலுக்குப் பசு நிரைகளும் களிற்றினங்களும் மிகுதியாக வழங்கினான் என்று, அவனது அவைக்களப் புலவர் ஒட்டக் கூத்தர் தம் நூல்களிற் குறித்துள்ளார். இவன் செய்த தில்லைத் திருப்பணிகளுள் சிவகாமியம்மை திருக்கோயிற் பணி மிகவும் சிறப்புடையதாதலின் அதுபற்றி இவ்விரண்டாங் குலோத்துங்கனை ''ஸ்ரீபீடங்கண்ட பெரிய பெருமாள்'' என மக்கள் பாராட்டிப் போற்றுவாராயினர். இச்செய்தி,

'நீடிய வெண்டிசை நீழல் வாய்ப்ப.
நீடிய தெக்கிண மேருவென்னப்

பீடிகை தில்லை வனத்த மைத்த
பெரிய பெருமாளை வாழ்த்தினவே'

எனவரும் தக்கயாகப் பரணியாலும், அதன் பழைய உரையாலும் இனிது விளங்கும்,

''ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்'' என மணிவாசகப் பெருமான் அருளியவாறு கூத்தப்பெருமானது அருளினீர்

148696.

மையதாய்த் திகழும் சிவகங்கைத் தீர்த்தத்தின் மேல்கரையில் அருள்வடிவாகிய சிவகாமியம்மையின் திருக்கோயில், நம் முன்னோர்களது சிவபத்திக்கும் சோழ மன்னர்கள் காலத்துக் கட்டடக் கலைக்கும் சிற்பக்கலைக்கும் ஓவியக் கலைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இக்கோயிலின் திருச்சுற்றிலே இரண்டடுக்கு அறைகளை உடையதாயமைந்த திருமாளிகைப் பத்தியும், அதன்கீழ்க் குறட்டிற் பரத நாட்டிய நுட்பங்களையும் அக்கால இசைக் கருவிகளையும் தெளிவாகப் புலப்படுத்தும் நிலையில் அமைக்கப்பெற்றுள்ள கருங்கற் சிற்பங்களும், பிற நாட்டு நுண்கலைஞர்களால் வியந்து பாராட்டும் முறையில் விளங்குகின்றன, சிவகாமியும்மை கோயிலின் உள்ளே முன்னர் அமைந்துள்ள முன் மண்டபமும், அதன் தென் பகுதியிலும் வடபகுதியிலுமாக மேலே எழுதப் பெற்றுள்ள பழங்கால ஓவியங்களும், ஓவியக் கலை வல்லுநர்களால் வியந்து போற்றத்தகுவனவாகும்.

சிதம்பரம் திருக்கோயிலிற் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக்களில் இக்கோயிலுக்கு முன்னோர் செய்துள்ள அறக்கட்டளைகள் பல குறிக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் திருநந்தவனம் அமைத்தற்கும் அந் நந்தவனங்களிற் பணிபுரிவோர்க்கு நிலம் கொடுத்தற்கும் என அளிக்கப்பெற்ற நிபந்தங்கள் விரிவாக இடம் பெற்றுள்ளன. கோப்பெருஞ் சிங்கனது ஆட்சியின் ஆருவது ஆண்டில் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்குச் சிறப்பாகச் சாத்தியருளத் திருப்பூ மண்டபத்துக்கு முதலாகத் திருநிலை அழகியாள் திரு நந்தவனமும் நந்தவனப் பணி செய்வார்க்கு உணவளிக்கத் திருப்பாவாடைப் புறமும் ஆக நிலமளித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இவனது ஆட்சியின் ஏழாம் ஆண்டுக்கல்வெட்டில் சிதம்பரத்தின் எல்லையிலுள்ள கடவாச்சேரியிலும் சண்டேசுவரநல்லூரிலும் இளநாங்கூரிலும் சிவகாமசுந்தரி அம்மைக்குத் திருநந்தவனங்கள் அமைக்க நிலமளித்த செய்தி குறிக்கப் பெற்றுள்ளது.

எட்டாமாண்டுக் கல்வெட்டில் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியார்க்குச் சாத்தும் பரிசட்டம் (புடவை) நெய்துகொடுக்கும் சாலிகர் குடியிருக்கத் திருவம்பலப் பெருமாள் புரம் என்னும் பெயரால் கடவாச்சேரியான தில்லை நாயகநல்லூரில் நாலுவேலியும் ஆறு மாவும் நிலமளித்த செய்தி குறிக்கப்பெற்றுளது. ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டில் கொற்றங்குடியான பவித்திரமாணிக்க நல்லூர் முதலிய ஊர்களிலும் சிவகாமியம்மை திருநந்தவனத்திற்கும் நந்தவனக்குடிகட்கும் நிலமளித்தமை கூறப்பெற்றுளது. இவ்வாறே இவ்வேந்தனது ஆட்சியின் 10-ஆம் ஆண்டிலும், 11-ஆம் ஆண்டிலும் வரையப்பெற்ற கல்வெட்டுக்களில் இக்கோயில் திருநந்தவனத்திற்கும் திருப்பள்ளித் தாமம் பறித்து மாலை தொடுப்பார்க்கும் எனச் சிதம்பரத்தையடுத்த விக்கிரமசோழநல்லூரிலும் அளக்குடியிலும் எருக்காட்டஞ்சேரியான ஜயங்கொண்டசோழநல்லூரிலும் திருநந்தவனப் புறமாகவும் திருப்பாவாடைப் புறமாகவும் நிலமளித்த செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இதுகாறும் எடுத்துக்காட்டிய வரலாற்றுக் குறிப்புக்களால் தில்லையில் திருக்காமக் கோட்டமுடைய பெரிய நாச்சியாரான சிவகாமியம்மையார்க்குச் சிறந்தமுறையில் திருப்பணிகளும் பூசனைகளும் திருவிழாக்களும் வேந்தர்களாலும் நாட்டு மக்களாலும் நிகழ்த்தப்பெற்று வந்தமையும், அம்மை திருக்கோயிலின் கலைநலமும் இனிது புலனுதல் காணலாம்.

SL
Q2m24, N59TK
72. [4.7]



திருவண்ணாமலை. அண்ணாமலையார் கோயில் திருப்பணியை அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்கள். அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I. A. S. அவர்கள் தலைமையில், தொடங்கி வைத்தல். (27—1—72).



காஞ்சிபுரம் திருவேகம்பநாதர் கோயிலின், ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர், காஞ்சி நகர மன்றத் தலைவர் திரு கே. டி. எஸ். மணி, திரு: சி. வி. இராசகோபால், M.L.C. மற்றும் அறங்காவலர் பெருமக்கள் முதலியோர் கலந்துகொண்டு சிறப்பித்தல். (29—2—72)



வடலூர்ச் சத்தியஞானசபையின் நூற்றாண்டு விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பர் அவர்களும், திருப்பணிக் குழுத் தலைவர் பொள்ளாச்சி திரு. என்.மகாலிங்கம், B.Sc., M.I.E. அவர்களும் உரை நிகழ்த்துதல்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34. Printed at Sivarts Printers. 119, Strahans Road, Madras-12. Editor. N. R. Murugavell, M.A., M.O.L.